# ஸ்ரீ தமிழ்

உண்மை நின்றிட வேண்டும்

மலர்:01, இதழ்: 11 மாதமிருமுறை 16-31, மார்ச் 2026 ₹30/-

SHREE TAMIZH, Vol.01, Issue 11 Fortnightly MAR 16-31, 2026



# ஸ்ரீ தமிழ்

உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com



Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!



**தனி பிரதி: ரூ 30/–**
**ஆண்டு சந்தா: ரூ 600/–**


# அரசியல் லாபத்திற்காக அரசே வதைக்கலாமா?

தமிழகத்தில், அதுவும் குறிப்பாக சென்னையில் மார்ச் 12, 13 தேதிகளில் பெட்ரோல் பங்குகள் முன் வாகனங்கள் வரிசை கட்டி நின்றன. சமையல் எரிவாயுவிற்கு ஓவர் புக்கிங். வளைகுடா போரால் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. இதற்கு மத்திய அரசே காரணம் என்று தமிழக அமைச்சர்களும், அவர்கள் ஒத்துக்களும் சத்தமாக ஊதினர். இந்தச் சத்தத்தில், கோவை கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள நடுநிலைப்பள்ளியில் மதிய உணவில் பல்லி விழுந்ததில் 44 குழந்தைகள் உடல் நலன் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட துயரம் காதுகளுக்கு எட்டாமல் போய்விட்டது. மார்ச் இரண்டாம் வாரத்தில் தமிழகத்தில் விளாத்திகுளத்திலும், மதுராந்தகத்திலும் சிறுமிகள் மீது கூட்டுப் பாலியல் வன்கொடுமைகள் நடந்தேறின.

கிருஷ்ணகிரியில் 2 வயதுக் குழந்தை முதல் 70 வயது மூதாட்டி வரை என்று 5 சம்பவங்கள் கடந்த 10 நாட்களில் நடந்தேறியது. இதுவும், ஆளுங்கட்சியினர் திறம்பட ஊதிய சத்தத்தில் அமுங்கிவிட்டது. தி.மு.கவினர் ஆட்சியில் நடக்கும் கொடுமைகள் மக்களிடம் சேராமல் இருக்க, எல்.பி.ஜி தட்டுப்பாடு, பெட்ரோல்-டீசல் தட்டுப்பாடு என்று புரளியைக் கிளப்பிவிட்டு, பதற்றத்தில் மக்களை வெயிலில் காத்திருக்க வைத்து கொடுமைப் படுத்தியது அரக்கத்தனத்தின் உச்சம்.

கோவைப் பள்ளி சத்துணவில் பல்லி விழுந்து மாணவர்கள் பாதிக்கப்பட்ட சம்பவத்தின் தாக்கம் அடங்கியவுடன், பெட்ரோல்-டீசல் தட்டுப்பாடு தீர்ந்துவிட்டது. இதே நேரத்தில் சபாநாயகருக்கு எதிரான பதவிப்பறிப்பு மற்றும் பட்ஜெட் கூட்டத்தொடர் விவாதத்தில், பெட்ரோல் தட்டுப்பாடு என்று கூச்சலிட்டு, இந்திய அரசை அமெரிக்கா அல்லது ஈரான் பக்கம் தள்ளி, சங்கடத்தை ஏற்படுத்தும் முயற்சி தோல்வியுற்றது. சீனாவின் தூண்டுதலின் பெயரில், ராகுல் காந்தியின் முன்னெடுப்புக்கு, தி.மு.க ஆளும் தமிழகம் உதவியது. அன்னிய நாட்டிற்காக, சொந்த மக்களை துன்புறுத்தும் அரசு நாட்டிற்கும், ஜனநாயகத்திற்கும், மக்களுக்கும் இழுக்கு.

தமிழகச் சட்டமன்றத் தேர்தலில், இந்தியாவால் தடை செய்யப்பட்ட பாப்புலர் ஃப்ரண்ட் ஆப் இந்தியா அமைப்பின் அரசியல் முகமான சோசியல் டெமாக்ரெடிக் பார்டி ஆப் இந்தியா (SDPI) யுடன் தி.மு.க அரசு கூட்டணிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. சர்வதேச போதைக் கடத்தல் கும்பல், திருச்சி இலங்கை அகதிகள் முகாமிலிருந்து செயல்படுவதாகவும், திருச்சி முகாமிலுள்ள அகதிகள் பலர் மீது இலங்கையில் கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், கும்மிடிப்பூண்டி இலங்கை அகதிகள் முகாமின் தலைவர் படுகொலை செய்யப்பட்டார். இது முன் விரோதம் காரணமாக நடந்த கொலை என்கிறது காவல்துறை. தனி தாசில்தார், கியூ பிரிவு காவலர் அனுமதியின்றி வெளியேறவும், உட்புகவும் முடியாத முகாமில் இப்படி ஒரு படுகொலை எப்படி நடந்தது? இந்நிலையில், இலங்கை அகதிகளுக்குக் குடியுரிமை வழங்க மத்திய அரசுக்கு ஸ்டாலின் கோரிக்கை வைக்கிறார். இது எங்கு போய் முடியுமோ!




# அங்கொன்றா.. இங்கொன்றா.. அப்பா

-ப்ரியா வெங்கட்

தமிழகத்தில் பாலியல் வன்கொடுமை சம்பவம் நடக்காத நாளே இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்தகைய சம்பவங்கள் தொடர்கதையாகி விட்ட நிலையில், தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சம்பவம் அனைவரையும் அதிர்ச்சிகுள்ளாகியுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் வேடநத்தம் பகுதியில் 12-ம் வகுப்பு மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டிருப்பதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.



இரவில், இயற்கை உபாதை கழிக்கச் சென்ற சிறுமியைக் காணவில்லை என பெற்றோர்கள் காவல்துறையினரிடம் புகார் அளிக்க வந்த போது உன் பெண் யார் கூடயாவது ஓடிப் போயிருக்கும் போய் தேடி பாரு. நாங்க காலையில் வந்து பார்க்கிறோம் என்று அலட்சியமாக கூறியிருக்கின்றனர்.

பத்தாம் வகுப்பில் நன்கு படித்து மாவட்ட அளவில் பரிசு பெற்று, தற்போது 12-ம் வகுப்பு பயிலும் ஒரு மாணவியைக் காணவில்லை என்று புகாரளிக்க வந்த பெற்றோரிடம், உண்மை என்னவென்று விசாரிக்காமல் காணாமல் இருந்த பெண்ணின் மீது சந்தேகப்பட்டு இழிவுபடுத்தும் விதமாக பேசி திருப்பி அனுப்பி இருப்பது அராஜகத்தின் உச்சம்.

அதை விட கொடுமை இந்த அராஜகத்தை எதிர்த்து போராடும் மாணவியின் உறவினர்களிடம் போராட்டத்தை கைவிடுங்கள் என்று திமுக சட்டமன்ற உறுப்பினர் உறவினர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தியது தான்

குற்றவாளிகளை உடனே கண்டறிந்து விட்டால், உறவினர்கள் போராட்டத்தை முடித்துவிடப் போகின்றனர். இதற்கு ஏன் ஒரு திமுக சட்டமன்ற உறுப்பினர் வந்து சமாதானம் பேச வேண்டும்? எதையாவது மறைக்கவோ, வழக்கை நீர்த்துப் போகச் செய்யவோ, குற்றவாளிகளை ஏதேனும் வகையில் காப்பாற்ற வேண்டும் என திமுகவோ, திமுக அரசோ முயற்சிக்கிறதா?

11.03.2026 இரவில் தூத்துக்குடியில் கொடூரமான கற்பழிப்பு சம்பவம் நடந்து அந்த வடு மறையாத நிலையில் திருச்சியிலிருந்து சென்னைக்கு ப்ராஜெக்ட் செய்ய வந்திருந்த கல்லூரி மாணவியை காரில் கடத்தி பாலியல் வன்கொடுமை சம்பவத்தை அரங்கயேற்றியுள்ளனர்.

இந்த பாலியல் கொடுமை என்பது முதல்வர் சொல்வது அங்கொன்றும் இங்கொன்றுமாய் நடந்த சம்பவங்கள் இல்லை. கடந்த ஐந்தாண்டுகளில் நடந்த பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் குறித்து பார்த்தால் நிலைமையின் தீவிரம் புரியம்.

மார்ச் 12, 2026 அன்று திருச்சி மாவட்டம் மணப்பாறை அருகே உள்ள தொப்பம்பட்டி அரசு தொடக்கப்பள்ளியில் மூன்றாம் வகுப்பு ஆசிரியர் அங்கு பயிலும் மாணவியருக்கு பாலியல் தொல்லை கொடுத்தத்தற்காக ஆசிரியர், தலைமை ஆசிரியர் கைது செய்யப்பட்டனர்.

மார்ச் 2 2026 அன்று, சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் பிளஸ் 1 மாணவியிடம் பாலியில் வன்கொடுமையில் ஈடுபட்ட 3 பேரில் ஒருவரை போலீசார் கைது செய்தனர்.

மார்ச் 3 2026 அன்று சென்னை கோட்டூர்புரத்தில் ஹோட்டலில் தோழியருடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த கல்லூரி மாணவியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட போதை ஆசாமி கைது செய்யப்பட்டார்.

பிப்ரவரி 2 2026 அன்று சென்னை நந்தனம் அரசு கல்லூரியில் கேண்டீன் பெண் ஊழியரை மிரட்டி, பாலியல் வன்முறை செய்த வழக்கில் திமுக பிரமுகர் முத்துசெல்வம், அவரது நண்பர்கள் ஆகியோர் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டனர்.

டிசம்பர் 23, 2025 அன்று சென்னை அண்ணா பல்கலை மாணவி, அதே வளாகத்தில் சக மாணவருடன் பேசிக் கொண்டிருந்த போது, அங்கு வந்த திமுகவின் ஞானசேகரன் மாணவரை அடித்து விரட்டி மாணவியை பாலியல் வன்கொடுமை செய்தார். யார் அந்த சார் என்ற கேள்விக்கு இதுவரை பதில் இல்லாமலே இந்த வழக்கும் முடிவுக்கு வந்தது. இந்த சம்பவத்தில் மெத்தனமாக செயல்படுவதாக திமுக அரசு மேல் சர்ச்சைகள் எழுந்தன.

பிப்ரவரி 18, 20205 அன்று கோவையில் 17வயது சிறுமியை கல்லூரி மாணவர்கள் 7 பேர் சேர்ந்து கூட்டு பாலியல் பலாத்காரம் செய்த கொடூர சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஜுன் 10, 2025 அன்று அரசு சேவை இல்லத்தில் தங்கி படித்து வரும், பாலியல் வன்முறை செய்த விவகாரத்தில் அங்கு 14 ஆண்டுகளாக பணியாற்றிய காவலாளியை போலீசார் கைது செய்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆரப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த 10வயது சிறுமியை கொடூரன் ஒருவன் மாந்தோப்புக்குள் கடத்திச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் தமிழகத்தையே உலுக்கிப் போட்டது.

மதுரையைச் சேர்ந்த 16வயது சிறுமியை தந்தையிடம் அழைத்துச் செல்வதாக கூறி ஓசூருக்கு கடத்திச் சென்று பாலியல் வன்முறை செய்தார் விருதுநகரைச் சேர்ந்த முனியாண்டி என்பவர். இவரை காவல்துறை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் அருகே பேக்கரி தொழிலாளியின்7 வயது மகளை வீராணத்தைச் சேர்ந்த மணிகண்டன் பாலியல் கொடுமை செய்ததற்காக கைது செய்யப்பட்டார்

2003ம் ஆண்டில் விருதுநகரில் 9வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த நண்பர்கள் இருவருக்கு 5 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து ஸ்ரீவில்லிபுத்தூர் போக்சோ நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பிப்ரவரி 9, 2025ல் வேலூரில் இளம்பெண்ணுக்கு குளிர்பானத்தில் மயக்க மருந்து கொடுத்து, கூட்டு பாலியல் பலாத்காரம் செய்த சம்பவத்தில் 6 பேர் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

ஆகஸ்ட் 05,2023ல் சென்னை ராமாபுரத்தில் கோயில் திருவிழாவில் பெண் போலீஸ் ஒருவரிடம் திமுகவைச் சேர்ந்த கண்ணன் என்பவர் பாலியல் சீண்டலில் ஈடுபட்டார்.

ஏப்ரல் 17, 2022ல் காஞ்சிபுரம் கூட்டுறவு பண்டக சாலையின் ரேஷன் கடைகளில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு அரசியல் சங்கத்தினர் பாலியல் தொல்லை கொடுப்பதாக புகார் எழுந்தது.

ஏப்ரல் 7, 2025ல் ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் 15வயது சிறுமியை கத்தியைக் காட்டி மிரட்டி பலாத்காரம்.

சென்னை கொடுங்கையூர் எழில்நகரில் அடுத்தடுத்த வீடுகளுக்குள் புகுந்து பாலியல் சீண்டல் செய்துள்ளனர் மர்ம நபர்கள்.

இந்த பட்டியல் இன்னும் நீண்டு கொண்டே செல்கிறது. தினமலர் பத்திரிக்கை இன்றைய போக்சோ வழக்குகள் என்று ஒரு பகுதியே தொடங்கும் அளவிற்கு சம்பவங்கள் நடந்துள்ளன.

மணிப்பூர் கலவர சமயத்தில் நடந்த பாலியல் சம்பவத்திற்கு பொறுப்பேற்று பிரதமர் பதவி விலக வேண்டும் என்று அறிக்கை விட்ட முதல்வர் இப்போது ஏன் மௌனம் காக்கிறார்.

தினமும் ஏதாவது ஒரு பகுதியில் நடக்கும் பாலியல் சம்பவம் நாளிதழ்களில் தலைப்புச் செய்திகளாக வெளிவரும் நிலையில் இவை அனைத்திற்கும் பொறுப்பேற்று சட்ட ஒழுங்குத்துறையை தன் கையில் வைத்திருக்கும் முதல்வர் பதவி விலகாதது ஏன்?

அக்கா கனிமொழி, சோதிமணி இவர்கள் எல்லாம் ஏன் மெழுகுவர்த்தி ஊர்வலம் நடத்தவில்லை? எங்கோ உத்திரபிரதேசத்தில் நடந்தால் மட்டும் தான் பொங்குவார்களா? தமிழ் பெண்கள் இவர்கள் கண்ணில் தெரியவில்லையா?

மணிப்பூர் சம்பவத்திற்கு தமிழகமெங்கும் ஆர்பாட்டங்கள் நடத்தி, பிரதமரை விமர்சித்தவர்கள் கம்யூனிஸ்ட், மே17, புரட்சிகர மாணவர் அமைப்பு, கோவன் எல்லாம் எங்கே?

மணிப்பூருக்கு பிரதமர் ஏன் செல்லவில்லை என்று வாய்கிழிய பேசியவர்கள், தூத்துக்குடி விளாத்திக்குளம் பகுதிக்கு முதல்வர் ஏன் செல்லவில்லை? இதுவரை கண்டனம் கூட தெரிவிக்கவில்லையே என்று கேட்க வாய் இல்லாமல் பசை போட்டு ஒட்டியது போல் மௌனம் காப்பது ஏன்?

நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்த போது பொள்ளாச்சியில் நடந்த பாலியல் வன்கொடுமைக்கு எதிராக பல மாதங்கள் போராட்டமும், அதை கருவாக வைத்து எடுத்த சினிமாவில் உங்க மகன் வேறு நடிச்சாரே!

இப்போதும் இவைகளை வைத்து சினிமா எடுக்க முன் வருவீர்களா?

பெண்களுக்குப் பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றியது தான் உங்கள் ஆட்சி தமிழனுக்குத் தந்த பரிசு!

இனியும் இந்நிலை தொடர பெண்கள் அனுமதிக்கலாமா?

# முதலாளிகளாகும் வங்கதேச ஊடுருவல்காரர்கள்
# அடிமைகளாகும் தமிழர்கள்

இராமகிருஷ்ணன்




சென்னையில் போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாகத் தங்கி பிரியாணி கடை நடத்தி வந்த வங்கதேசத்தைச் சேர்ந்த இருவரை மத்திய குற்றப்பிரிவு போலீசார் கைது செய்துள்ளனர். முகமது ஆரூண் (44) மற்றும் வலியுல்லா (40) ஆகியோர் போலி பாஸ்போர்ட் மூலம் வங்கதேசம் செல்ல முயன்றபோது, விமான நிலையத்தில் பிடிபட்டதை அடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் போலி இந்திய பாஸ்போர்ட் மூலம் வங்கதேசம் செல்ல முயன்றபோது முகமது ஆரூண் பிடிபட்டார். விசாரணையில், வலியுல்லா உதவியுடன் போலி ஆவணங்கள் தயாரித்து, சென்னையில் தங்கி பிரியாணி கடை நடத்தி வந்தது தெரியவந்தது.

வங்கதேசத்தைச் சேர்ந்த முகமது ஆரூண், கடந்த 1999ம் ஆண்டு திரிபுராவின் ஸ்ரீமந்தாபூர் எல்லை வழியாக, சட்ட விரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்துள்ளார். பின்னர், சட்ட விரோதமாக வங்கதேசத்துக்குப் பலமுறை சென்று வந்துள்ளார். 2022-ல் தனது வங்கதேச பாஸ்போர்ட் மூலம் முறையாக இந்தியா வந்த இவர், சென்னை ஆயிரம்விளக்கு பகுதியில் உள்ள பிரியாணி கடையில் வேலைக்குச் சேர்ந்துள்ளார். பின்னர், சொந்தமாக பிரியாணி கடை நடத்தி வந்துள்ளார். தனது வங்கதேச குடியுரிமையை மறைத்து. போலியாக இந்திய ஆதார் மற்றும் பான் அட்டையை பெற்ற அவர், அதன் மூலம் இந்திய பாஸ்போர்ட்டும் பெற்றுள்ளார் என்பது போலீஸ் விசாரணையில் தெரிய வந்தது. வங்கதேசத்தில் இருந்து இவரது உறவினரான வலியுல்லா (40) என்பவரும் கடந்த 2025ல் திரிபுரா எல்லை வழியாக, சட்ட விரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்துள்ளார். பின்னர், சென்னைக்கு வந்த அவர், முகமது ஆரூணின் பிரியாணி கடையில் வேலைக்குச் சேர்ந்துள்ளார். 'பாபுல் உசேன்' என்ற பெயரில் அவர் போலியாக ஆதார் அட்டை பெற்றதும் கண்டுபிடிக்கப்பட்டது.

1999 முதல் 2021 வரை நம் நாட்டிற்குள் நுழைய வங்கதேச பாஸ்போர்ட் தேவையில்லை என்ற நிலையே இருந்தது. சட்ட விரோதமாக குடியேறும் வங்கதேசத்தினருக்கு எதிராக மோடி அரசு நடவடிக்கை எடுக்கத் தொடங்கிய பின்னரே பாஸ்போர்ட் எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. 2024 - ஆம் ஆண்டு, சி.ஏ.ஏ சட்டத்திருத்தம் வந்தபின், இந்தியாவிற்குள் நுழைந்தாலும், விசா சட்டத்தைப் பின்பற்ற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. உடனே போலி ஆதார் அட்டை தயாரித்து, இந்திய அரசை ஏமாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டான். இருப்பினும் இவன் வங்கதேச பாஸ்போர்ட்டை அழிக்கவில்லை. தேவைக்கு இந்தியக் குடியுரிமை ஆவணத்தையும், வங்கதேச ஆவணத்தையும் பயன்படுத்தும் வசதி இருப்பதால், சட்ட விரோத செயல்களில் ஈடுபட சுலபமாக முடியும்.

மார்ச் மாதம் 2024 ஆம் ஆண்டு, சென்னை கிழக்கு தாம்பரம் சேலையூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சட்டவிரோதமாக வங்கதேச எல்லையைக் கடந்து சென்றபோது அந்நாட்டு ராணுவத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து கட்டுக்கட்டாக அமெரிக்க டாலர், இந்திய ரூபாய் பணத்தையும் பறிமுதல் செய்தனர். விசாரணையில், அந்த நபர், சேலையூரில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரியும் ஜான் செல்வராஜ் என்பது தெரியவந்தது. பறிமுதல் செய்யப்பட்ட அடையாள அட்டை சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு அவர் தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது அவருக்கு வழங்கப்பட்டது என்பது தெரியவந்தது. இதே தேனாம்பேட்டை பகுதியில் தான் முகமது ஆரூண் தொழில் நடத்தி வருகிறார் என்பதைப் பார்க்கும்போது, இந்தச் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு ஆதரவான சூழல் நம் தமிழகத்தில் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

டெல்லியில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக சுவரொட்டிகளை ஒட்டியவர்களுடன் தொடர்புடையதாக வங்கதேசத்தவர்கள் 6 பேரை, திருப்பூரில் டெல்லி சிறப்புப் பிரிவு காவல்துறையினர்

**சென்னையைச் சுற்றி ஏறத்தாழ 40,000 பிரியாணிக் கடைகள் உள்ளன. இது தவிர குப்பை அகற்றும் பணி முதல் வேளான் தொழில் வரை பிற மாநிலத் தொழிலாளர்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர்.**

2026 ஆம் ஆண்டு கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர். அவர்கள் போலி ஆவணங்களைக் கொடுத்து, வடமாநிலத்தவர்கள் என்ற பெயரில் திருப்பூரில் தங்கி பனியன் தயாரிப்பு நிறுவனங்களில் பணியாற்றி வந்தது தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட 6 பேர் மீதான வழக்கு குறித்து டெல்லி போலீசார் முழுமையாகத் தகவல் தெரிவிக்கவில்லை என்று பிபிசி தமிழிடம் கூறிய திருப்பூர் மாநகர காவல் ஆணையர் ராஜேந்திரன், அவர்கள் மீது திருப்பூரில் எந்த வழக்கும் இல்லை என்றார். தில்லி போலீசார் விவரம் தெரிவிக்கவில்லை என்று திருப்பூர் ஆணையர் சொல்வதின் நோக்கமென்ன? எதை மறைக்க முற்படுகிறார்? சட்டவிரோத வங்கதேச ஊடுருவல்காரர்களின் பயங்கரவாதத் தொடர்பை மறைப்பது, தேச விரோத செயல்களை ஊக்குவிக்காதா? இந்த வழக்கில் கவனிக்க வேண்டிய ஆபத்தான அம்சம், இவர்கள் பாகிஸ்தானின் லஸ்கர்-இ-தோய்பா அமைப்பின் ஆதரவாளர்கள் என்பதே! இதற்கு முன் இந்தியாவில் பயங்கரவாத நடவடிக்கைகளை அரங்கேற்ற இந்தியர்களை ஹேண்டிலர்களாக பயன்படுத்திய பாகிஸ்தான், இப்போது வங்கதேசத்தினரை பயன்படுத்துவது, நம் நாட்டிற்குள் அன்னியப் படையை அனுப்பவதற்கு இணையான செயல். வன்முறையில் ஈடுபடுபவர்கள், நாட்டைவிட்டு வெளியேறினால் தப்பிவிடலாம்!

பொதுவாக ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் பயங்கரவாதிகளை தயார்படுத்த சிறு சிறு சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவர். பயங்கரவாத ஆதரவு, பிற மத வெறுப்பு போன்றவற்றை போஸ்டர்களாக, சுவர் எழுத்துக்களாக பொது இடங்களிலும், வேற்று மத வழிபாட்டுத் தலங்களிலும் பதிவிடச் செய்வர். பின்னர் படிப்படியாக பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுத்துவர். திருப்பூரில் கைது செய்யப்பட்ட வங்கதேசத்தினரின் நடவடிக்கை இந்த திசையில் உள்ளது என்பது அபாயத்தின் அறிகுறி.

தற்போது லஞ்ச ஒழிப்புத்துறை டி.ஜி.பியாக இருக்கும் டேவிட்சன் தேவாசீர்வாதம் அவர்கள் மதுரை மாநகரக் காவல் ஆணையராகப் பதவி வகித்த காலத்தில், 200க்கும் மேற்பட்டோருக்கு போலி ஆவணங்களின் அடிப்படையில் பாஸ்போர்ட் வழங்கப்பட்டதாகவும், இது சம்பந்தமாக ஐ.பி.எஸ். அதிகாரி டேவிட்சன் தேவாசீர்வாதத்துக்கு எதிரான புகார் குறித்து ஆரம்பகட்ட விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என, சென்னையைச் சேர்ந்த வாராகி என்பவர் 2023-ம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கை தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கில் டேவிட்சன் தேவாசீர்வாதம் குற்றமற்றவர் என்று தீர்ப்பு வந்தது, ஆனால் இந்த பாஸ்போர்ட்டிற்கான விண்ணப்பங்கள் வந்த நிறுவனத்தின் மீது விசாரணை நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காவல் துறையில் உயர்பதவி வகிக்கும் அதிகாரிகள் மீதே இத்தகைய குற்றச்சாட்டுகள் எழும்போது, சாதாரண காவலர் மட்டத்தில், பாஸ்போர்ட் வெரிபிகேஷண் எந்தளவு கறாராக இருக்கும். சமீபத்தில், பாஸ்போர்ட் வெரிபிகேஷனுக்காக 500 ரூபாய் லஞ்சம் கேட்ட காவலரின் ஆடியோ வெளியானது. அதில் அவர், நீ யாரிடம் வேண்டுமென்றாலும் சொல்லு, இது தான் ரேட் என்று சொல்கிறார். இப்படி பிக்ஸ்ட் ரேட் வியாபாரமாக குடியுரிமை ஆவணங்கள் பெறும் முறை இருந்தால் நாட்டின் பாதுகாப்பு என்னாகும் ? சமீபத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு அறன் செய் என்ற யூடியூப் சேனலுக்குப் பேட்டி கொடுத்தார். இந்தப் பேட்டியில், சீமான், போலி திராவிட இயக்கங்களும், விடுதலைச் சிறுத்தைகளும் மட்டுமே இந்தியாவில் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்தனர் என்று பெருமை பீத்திக் கொண்டார். இதில், பல இலங்கையினரை, இந்தியா வழியாக பல நாடுகளுக்கு அனுப்பி வைத்ததைப் பெருமைபடக் கூறினார். போலி ஆவணங்கள் தயாரித்தோம் என்பதை வெளிப்படையாக, ஊடகத்தில் பெருமைபடக் கூறுவது, தமிழக அரசு, சட்ட விரோத ஆவணங்கள் தயாரிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்காது என்ற தைரியத்தில் தானே!

இன்று தேனாம்பேட்டையில் கைது செய்யப்பட்டவர்களை, சாதாரண ஊடுருவல்காரர்கள் என்றோ, போலி ஆவணம் தயாரித்தவர்கள் என்றோ பார்க்கக் கூடாது. இந்த சதிச் செயல்களை மனதில் கொண்டு அரசு விசாரணை நடத்த வேண்டும். சென்னையைச் சுற்றி ஏறத்தாழ 40,000 பிரியாணிக் கடைகள் உள்ளன. இது தவிர குப்பை அகற்றும் பணி முதல் வேளான் தொழில் வரை பிற மாநிலத் தொழிலாளர்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவர்களில் வங்கதேசத்தினர் யார் என்று அடையாளப்படுத்தும் திறன் தமிழர்களுக்கு இல்லை. இதை பயன்படுத்தி, ஊடுருவல் பெருகியுள்ளது. புதிய மசூதிகள் முளைக்கின்றன, வங்காள மொழி மதரஸாக்கள் பெருகி வருகிறது. வங்கதேச ஊடுருவல் ஜிகாதி பயங்கரவாதத்தை பலப்படுத்தும் demographic invasion ஆகவும், இந்தியாவை இஸ்லாமிய நாடாக்கும் கஸ்வா-இ-ஹிந்த் என்ற இஸ்லாமிய ஆக்கிரமிப்பு மதக் கொள்கையை நடைமுறைப் படுத்தும் சதியின் அடிப்படையாகியுள்ளது.

# நீதிமன்றம் உத்தரவிட்டும் கோவில் கட்ட முடியாத அவலம்... பேரையூரில் கோலோச்சும் இஸ்லாமிய அடிப்படைவாதம்

- மீரா



மதுரை மாவட்டம் பேரையூர் தாலுகாவிற்கு உட்பட்ட தும்மநாயக்கன்பட்டி கிராமத்தில் கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள 100 வருடம் பழமையான பிள்ளையார் கோவில், கருப்பண்ண ஸ்வாமி கோவில் அமைந்துள்ளது. இந்த கோவில்கள் அறநிலையத்துறைக்கு கீழ் வருகிறது. இக்கோவிலை பரம்பரை அறங்காவலர்கள் பராமரித்து வருகின்றனர்.

இந்த கோவிலுக்குச் சொந்தமாக 2 ஏக்கர் 41 செண்ட் நிலம் உள்ளது. இதில் இக்கோவிலை புனரமைக்க இந்து அறநிலையத்துறையிடம் பரம்பரை அறங்காவலர்கள் கோரிக்கை வைக்க அறநிலையத்துறை, மாநில மற்றும் மாவட்ட வல்லுனர் குழுக்கள் அனுமதி கொடுத்தன. உடனே, கோவிலில் திருப்பணியைத் தொடங்கினர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சாகுல் ஹமீது என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்குத் தொடர்ந்தார்.

அந்த வழக்கில், 08.01.2026 அன்று நீதிமன்றம், இந்த 3அடி நிலம் குறித்த பிரச்சினையில் சம்பந்தபட்ட அதிகாரிகளை வைத்து நிலத்தை அளந்து தீர்த்து கொள்ள வேண்டும் என்றும் இக்கோவிலின் பரம்பரை அறங்காவலர்கள் கோவிலை புனரமைத்துக் கொள்ளலாம் என்று தெளிவாகத் தீர்ப்பு கொடுத்துள்ளது.

கோவிலைக் கட்ட முற்படும் போது இவர்கள் பிரச்சினையில் ஈடுபடலாம் என்ற அச்சத்தில் ஹிந்துக்கள், காவல்துறையினரை பாதுகாப்பு வழங்க உத்திரவிட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். நீதிமன்றமும் காவல்துறை பாதுகாப்பு வழங்கிட 18.02.2026 அன்று உத்தரவு பிறப்பித்தது.

இதன் பிறகு கோவில் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகளை 9.3.2026 அன்று தொடங்க முற்பட்ட போது 500க்கும் மேற்பட்ட முஸ்லீம்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டு பிரச்சினை செய்தனர். அதன்பின், போலீசார் தலையிட்டு பேச்சுவார்த்தை நடத்தி கைது செய்ய வேண்டிய நிலை வரும் என்று சொன்ன பின் கலைந்து சென்றனர்.

அதன் பிறகு மீண்டும் கட்டுமானப் பணிகளை தொடர்ந்தனர் ஹிந்துக்கள். இந்நிலையில், சாகுல் ஹமீது, தூண்டுதலின் பெயரில் பாண்டி என்பவர் கோவிலை இடிக்காமல் அப்படியே திருப்பணி மேற்கொள்ள வேண்டும் என்று அறநிலையத்துறையிடம் மனு அளித்து கோரிக்கை வைத்துள்ளார். அதை ஏற்று அறநிலையத்துறை அதிகாரிகள் திருப்பணியைத் தொடங்காமல் இருப்பதாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர். அது மட்டுமில்லாமல் இந்த சதிக்குப் பின்னால் SDPI அமைப்பு இருக்கிறது என்பதையும் தெரிவிக்கின்றனர். SDPIயின் சில சமூக வலைதள போஸ்டர்கள் அது உண்மை என்பதை நிரூபிக்கும் விதமாக உள்ளது.

4000 ஹிந்துக் கோயில்களுக்கு கும்பாபிஷேகம் செய்துள்ளோம் என்று அரசும், இது ஆன்மிக அரசு என்று அரசினால் லாபம் அடையும் சிலரும் பேசி வருகிறார்கள். இந்தக் கோயில் ஹிந்து அறநிலயத்துறையின் நிர்வாகத்தின் கீழ் வருவதுதானே! ஏன் செப்பனிட்டு கும்பாபிஷேகம் செய்யவில்லை? அறநிலயத்துறை செய்ய வேண்டிய வேலையை இந்தப் பகுதி ஹிந்துக்கள் செய்துள்ளனர். நீதிமன்றம் சென்று, உத்தரவு பெற்று, பணமும் கொடுத்து, கோயில் செப்பனிட்டு கும்பாபிஷேகம் செய்ய உதவியுள்ளனர். நியாயத்திற்கு, இது ஹிந்து அறநிலையத்துறையின் பணி தானே? இந்த ஆலயத்தில், பட்டியலின சமுதாயத்தினரை வரவிடாமல் தடுத்தால், சமரசம் செய்துகொள்ளலாம் என்று முஸ்லீம் தரப்பிலிருந்து பிற ஜாதி ஹிந்துக்களிடம் நோட்டம் விடப்பட்டதாக சிலர் தெரிவித்தனர். இந்த முயற்சி பயனற்றுப் போனவுடன், ஒரு ஹிந்துவைக் கொண்டு ஆலயத்தை விரிவாக்காமல் கட்ட கோரிக்கை மனு கொடுக்க முஸ்லீம்கள் செட் அப் செய்தனர் என்கிறார்கள். ஒரு புராதானக் கோவிலை செப்பனிட்டு, விரிவாக்கம் செய்ய முடியாத நிலையே இன்று தமிழகத்தில் உள்ளது. எவ்வளவு காலம் சாதாரண மக்கள் போராடுவார்கள்!. தொடர் அழுத்தம் கொடுத்தால், கோயிலை விட்டு ஹிந்துக்களை விலக்கிவிடலாம் என்ற வழக்கமான இஸ்லாமிய சதியை எதிர்த்துப் போராடும் தும்மநாயக்கன்பட்டி ஹிந்துக்களைப் பாராட்டுவோம்!. .


# சென்னிமலையைத் தொடர்ந்து யானைமலை திராவிட ஆட்சியில் தலைவிரித்தாடும் கிறிஸ்தவ மலை ஆக்ரமிப்பு

-வீரவேலுநாச்சியார்

மதுரையில் ஹிந்துக்கள் கடவுளாக வணங்கும் ஒத்தக்கடை யானைமலையில் சிலுவை வைத்து வழிபாடு நடத்தப்பட்டதாக கூறி, மார்ச் 9 2026 அன்று பா.ஜ.க சார்பில் போலீசில் புகார் அளிக்கப்பட்டது.

இந்த மலை 4000 மீட்டர் நீளம்,1200 மீட்டர் அகலம், 400 மீட்டர் உயரம் கொண்டது. இம்மலையைச் சற்று தூரத்தில் இருந்து பார்த்தால் ஒரு யானை படுத்திருப்பது போல தோன்றுவதால் யானை மலை என பெயர் பெற்றது. யானை மலையை நரசிங்கமங்கலம் என்றும் அழைப்பர். இம் மலைக்கு வடமேற்கே தான் மிகவும் பிரசிதிப் பெற்ற குடவரை கோயிலான நரசிங்க பெருமாள் கோயில் உள்ளது. இதைத் தவிர, பல சமணப்படுகைகளும் இங்கு அமைந்துள்ளன. இந்த யானைமலை தொல்லியல்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

பல கிராம மக்கள் இக்கோவிலை தங்கள் குலதெய்வமாக வழிபடுகின்றனர். இம்மலையை ஹிந்துக்கள் புனிதமாக போற்றுவதால், இம்மலைக்குச் செல்லும் போது காலில் செருப்பு அணிந்து செல்லமாட்டார்கள். இப்படி ஹிந்துக்களால் போற்றப்படும் இம்மலையில், கிறிஸ்துவ அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், சிலுவை வைத்து வழிபாடு நடத்தியுள்ளனர். பின்னர் அந்த புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளனர். இந்த போஸ்ட் வைரலான நிலையில் தான் உடனடியாக பாஜக நிர்வாகி ஹரிஹரபுத்திரன் என்பவர் காவல்துறையில் புகார் அளித்துள்ளார். காவல்துறையினரிடம் புகார் கொடுத்தும் அவர்கள் வழக்கு பதியாமல் விசாரிக்கிறோம் என்று மட்டும் கூறியுள்ளனர்.



ஈரோடு மாவட்டம் சென்னிமலையை ஆக்ரமிக்கும் விதமாக சென்னிமலையை இயேசு மலையாக மாற்ற கிறிஸ்தவ முன்னணி முயற்சித்தது. ஹிந்துக்களின் போராட்டத்திற்குப்பின், அதன் நிர்வாகி ஜோசப் என்கிற சரவணன் கைது செய்யப்பட்டார்.

**மதம் சார்ந்த கட்டிடங்களுக்கு noc பெறத்தேவையில்லை என்று இவர்களுக்காக சட்டவிரோத அரசாணைகளையும் வெளியிடுகிறது.**

குன்று தோறும் முருகன் என்பது தமிழகத்தில் வழக்கிலிருக்கும் சொல்லாடல். ஆனால் கிறிஸ்தவர்கள் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு குன்றுகளையும், மலைகளையும் ஆக்ரமித்து சிலுவை நாட்டி வருவதை காலங்காலமாக செய்து வருகின்றனர். இதை இப்போதே தடுத்து நிறுத்தாவிட்டால் ஹிந்துக்கள் குல தெய்வமாகப் போற்றும் மலையை கிறிஸ்தவ மலையாக மாற்றி ஹிந்துக்களின் வழிபாட்டை முடக்கி விடுவர்.

தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி பீடத்தில் அமர்ந்ததிலிருந்து, கிறிஸ்தவர்கள் மிகுந்த சுதந்திரத்துடன் இது போன்று மலைகளை ஆக்ரமித்து சிலுவை நாட்டுவது, சிலுவையை வரைவது, ஹிந்துக்கள் மட்டுமே இருக்கும் இடத்தில் சட்டவிரோத ஜபக்கூடங்கள் நடத்துவது, துண்டு பிரசுரங்கள் கொடுத்து பிரச்சாரம் செய்து மதமாற்ற முயல்வது போன்ற பல விஷயங்களை செய்து வருகின்றனர். இந்த அராஜகத்தை எதிர்த்து யாராவது எதிர்வினையாற்றினால் உடனே அவரைத் தேடிக் கண்டுபிடித்து கைது செய்யும் காவல்துறை.

சர்ச், மசூதி போன்றவைக் கட்ட ஒரு மாதத்திற்குள் கலெக்டர் அனுமதி கொடுக்காவிட்டால் அவர்கள் கலெக்டர் அனுமதி பெறாமலேயே கட்டிக்கொள்ளலாம். மதம் சார்ந்த கட்டிடங்களுக்கு noc பெறத்தேவையில்லை என்று இவர்களுக்காக சட்டவிரோத அரசாணைகளையும் வெளியிடுகிறது. இதன் விளைவாக தமிழகத்தில் புற்றீசல் போன்று சர்சுகளும், ஜபக்கூடங்களும், மசூதிகளும் கட்டப்பட்டு வருகின்றன. இதன் வாயிலாக ஹிந்து இன அழிப்பு சதியை அரசாங்கமே முன்னின்று செய்கிறது. யானைமலை பிரச்சினையும் இதன் ஒரு பகுதியே. இதற்காக உடனடியாக எதிர்வினையாற்றிய திரு ஹரிஹரபுத்திரன் அவர்களுக்கு நமது பாராட்டுகள்.

# வைரமுத்துவிற்கு ஞானபீட விருது - விருதுக்கு அவமானம்

-பால கௌதமன்





கவிஞர் வைரமுத்துவுக்கு 2025-ம் ஆண்டுக்கான ஞானபீட விருது அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்தியாவின் சிறந்த எழுத்தாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கி கவுரவிக்க ஓர் அமைப்பு அவசியம் என்று நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் வலியுறுத்தினார். இதற்காக பாரதிய ஞானபீடம் என்ற பண்பாட்டு இலக்கியம் உதயமானது. இவ்வறக்கட்டளை தி டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழை வெளியிடும் சாகு சைனக் குடும்பத்தினரால் நிறுவப்பட்டது. இந்த அமைப்பு சார்பில் ஆண்டுதோறும் ஞானபீட விருது வழங்கப்பட்டு வருகிறது. இது இந்தியாவில் இலக்கியத்திற்கு வழங்கப்படும் மிக உயரிய விருது ஆகும். இதன்படி அவருக்கு ரூ.11 லட்சம் பரிசு தொகை, பாராட்டு பத்திரம், ஞானதேவதை சரஸ்வதி வெண்கல சிலை ஆகியவை வழங்கப்படும்.

இந்த விருதின் பெயரில் இடம் பெற்றிருக்கும் பாரதிய என்ற அடிப்படையை ஏற்காதது திராவிட சித்தாந்தம். இதைப் பின்பற்றும் வைரமுத்துவிற்கு இந்த விருதை வழங்குவது நியாயமா? இந்த விருதின் அடையாளம் சரஸ்வதி சிலை. ஞானத்தின் கடவுள் சரஸ்வதி என்பதை திராவிடப் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளுமா ? நாவில் இருப்பவள் சரஸ்வதி என்றால் அவள் மல ஜலம் கழிப்பது எங்கே என்று சொன்ன ஈ.வெ.ரா வைப் பின்பற்றும் வைரமுத்து, விருதை மறுப்பாரா ?

பரிந்துரைக்கு ஏற்கப்பட்ட நூல்கள் பகுதி அல்லது முழுவதுமாக இந்தி அல்லது ஆங்கிலம் மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்ட பின்னரே அதனை ஆலோசனைக் குழுக்கள் மதிப்பீடு செய்யும் என்பது ஞானபீட விருது வழங்கும் அமைப்பின்நெறிமுறை.

இதை வைரமுத்து எப்படி ஏற்கலாம்? இது இந்தித் திணிப்பு ஆகாதா? தமிழ், ஆங்கிலம், ஹிந்தி என்று மூன்று மொழிகளில் அறிவிப்புப் பலகை வைத்தால் ஹிந்தித் திணிப்பு என்று பொங்கியவர் தானே இந்த வைரமுத்து ? இங்கோ ஹிந்தியும், ஆங்கிலமும் மட்டுமே உள்ளதே! கேடுகெட்ட தமிழில் என்ன உள்ளது என்ற ஈ.வெ.ராவின் கொள்கையை இந்த விருதுத் தேர்வுக்காக வைரமுத்து பின்பற்றுவாரோ ? ஞானபீட விருதை யாருக்கு வழங்க வேண்டும் என்று பல இலக்கிய வல்லுநர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழகங்கள், பல மொழிகளைச் சேர்ந்த சங்கங்கள், விமர்சகர்கள் பரிந்துரைப்பார்கள். இந்தப் பரிந்தரையை சமூகத்தில் நன்மதிப்பு பெற்ற மற்றும் நேர்மையான ஏழு முதல் பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட தேர்வுக்குழு பரிசீலிக்கும் என்பதே, விருதை இறுதி செய்யும் நடைமுறை. இதில் கவனிக்க வேண்டிய சொற்றொடர், சமூகத்தில் நன்மதிப்பு பெற்ற மற்றும் நேர்மையான என்பதே ! நன்மதிப்பும், நேர்மையும் கொண்டவர்கள், பாரதிய ஞானத்திற்கு தேர்வு செய்தவரின் தகுதிகள் என்ன? பாலியல் சீண்டல், பாலியல் புணர்ச்சி போன்றவற்றில் ஈடுபடும் பிரபலங்கள் , பெரும்பாலும் சட்டத்திலிருந்து தப்பிவிடுகிறார்கள். இவர்கள் தொடர் குற்றத்தில் ஈடுபடுகிறார்கள். இவர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் சிலர் முன்னெடுத்த முனைவு மீடூ (Me Too). இந்தக் குற்றச்சாட்டை, வைரமுத்து மீது சுமத்தியவர்கள் சுமார் 17 பெண்கள். இந்தப் பட்டியலில், பின்னணிப் பாடகிகளும் அடங்குவர்.

இதுபோன்ற குற்றச்சாட்டுகள் போலியாக சுமத்தி சிலர் பிரபலமடைகிறார்கள், அது போலவே தான் இந்தக் குற்றச்சாட்டுகள் என்று வைரமுத்துவின் ஆதரவாளர்கள் முட்டுக் கொடுத்தனர். ஆனால் வைரமுத்துவின் படைப்புகள், சிறார் மீதான பாலுணர்வு நாட்டம் அதாவது Pedophilia வை ஊக்குவிக்கும்படியாக அமைந்தது. ஒரு 16 வயது சிறுமி, தந்தை வயதுள்ள ஆணுடன் இணைய எழுதிய கவிதையை நாட்படு தேறல் என்ற தலைப்பின் கீழ் வெளியிட்டார். 18 வயது எட்டுவதற்கு முன், பாலியல் தொடர்பில் ஈடுபடுவது, நம் நாட்டில் தண்டனைக்குரிய குற்றம். இந்தச் செயலை

**வெறுப்புப் பேச்சு, ஒழுக்கமின்மை, சட்ட விரோத பாலியல் குற்றத்திற்கு ஆதரவு, ஹிந்து துவேஷம் என்று அத்தனை இழி செயலின் உருவான வைரமுத்துவை விருதுக்காகப் பரிந்துரைத்தவர்களும், விருது கொடுத்தவர்களும் சான்றோர்களா?**

ஊக்குவிப்பது நியாயமா? பாரதிய ஞான மரபு இதை ஏற்குமா?

பாரதிய ஞான மரபு, இதிகாஸ புராண பாத்திரங்களையும், அறநெறிகளையும் போற்றுகிறது. ஆகவே தான் ஞானக் கடவுளாம் சரஸ்வதியின் சிலையை விருதாக வழங்குகிறது. இந்த ஞான மரபில் அறத்தின் அடையாளம் இராமன். இராமனை இழிவுபடுத்த அயோத்தி ராமன் அவதாரமெனில் அவன் பிறப்புமற்றவன் இறப்புமற்றவன். பிறவாதவனுக்கா பிறப்பிடம் தேடுவீர். அயோத்தி ராமன் மனிதனெனில் கர்ப்பத்தில் வந்தவன் கடவுளாகான் என்று ஹிந்துக்களின் நம்பிக்கையை இழிவுபடுத்தினார்.

இந்தக் கருத்தை ஏதோ அரசியல் தலைவர்களையும், முஸ்லீம்களையும் திருப்திப் படுத்த எழுதினார் என்று எண்ண வேண்டாம். சென்னையில் கம்பன் கழகத்தின் பொன்விழா 2025 ம் ஆண்டு அக்டோபரில் நடந்தது. அப்போது கவிஞர் வைரமுத்துவுக்குக் “கவிச்சக்கரவர்த்தி கம்பர்” விருது வழங்கப் பட்டது. விருது வாங்கிய விழா மேடையிலிருந்து தனது ஹிந்து வெறுப்பைக் கக்கினார் வைரமுத்து. புத்தி சுவாதீனம் இழந்த ராமன் வாலியைக் கொலையைச் செய்துவிட்டான். ஆகவே ராமன் கடவுள் அல்ல, வெறும் மனிதன். இன்னொரு பக்கத்தில், வெறும் மனிதனான கம்பன், கொலைபாதகக் குற்றம் செய்த ராமனைச் சாமர்த்தியமாக புத்தி சுவாதீனம் இழந்தவன் என்று காண்பித்து, அதன் காரணமாக இ.பி.கோ சட்டப் பிரிவு 84 போன்ற சட்ட அடிப்படையில் ராமனை - அதாவது ஒரு அவதாரக் கடவுளையே - குற்றம் செய்யாதவனாக ஆக்கிக் காப்பாற்றுகிறான். ஆகையால் கம்பன், கடவுளாக உயர்கிறான் என்று பேசினார். இது வெறுப்புப் பேச்சு என்று விருதுக்குப் பரிந்துரைத்தவர்களுக்கும், வழங்கியவர்களுக்கும் ஏனோ தோன்றவில்லை!

2024 ஜூலை மாதத்தில் உத்திரப்பிரதேசத்திலுள்ள ஹத்ராஸ் மாவட்டத்தில் கூட்ட நெரிசலில் பலர் உயிரிழந்தார்கள். இதற்கு வைரமுத்து இரங்கல் கவிதை எழுதினார். எப்படி வெறுப்பைக்கக்குகிறார் என்று பாருங்கள். உத்தரப்பிரதேசத்தில் ஆன்மிக நெரிசலில் இறந்துபோன அத்துணை உயிர்களுக்கும் அஞ்சலி செலுத்துகிறேன் சடலங்களுக்கு மட்டுமல்ல சடங்குகளுக்கும் சேர்த்தே இரங்குகிறேன் ஆன்மிகச் சொற்பொழிவாளரின் காலடி மண்ணைக் கவரவேண்டும் என்றுதான் ஒருவர் காலடியில் ஒருவர் செத்திருக்கிறார்கள் இருதயக்கூடு நொறுங்குகிறது மது போதைக்கும் மத போதைக்கும் உள்ளது பூவுக்கும் புஷ்பத்துக்கும் உள்ள வேறுபாடுதான் கல்வி பொருளாதாரம் பகுத்தறிவு என்ற மூன்றிலும் மேம்படாத தேசம் இப்படித்தான் தவணை முறையில் இறந்துகொண்டிருக்கும் “இருப்பவர்கள் கண்களை இறப்பவர்கள் திறக்கிறார்கள்” என்றோர் முதுமொழி உண்டு இறந்தவர்கள் இருப்பவர்களுக்குப் பாடமாகிறார்கள் படிப்போமா?

மெக்காவில் கூட்ட நெரிசலில் அப்பாவிகள் இறந்தபோதும், தென் கொரியாவில் பரலோக ராஜ்யம் செல்ல, மத குரு சொன்னார் என்று சொல்லி கூட்டுத் தற்கொலை செய்யும் போதும் கவிதை வராது இவருக்கு! இவரின் தற்குறித்தனத்தை மெச்சிப் பாராட்டும் அறிவாலய விழுதுகள் மின் கம்பத்தில் கொடிகட்ட ஏறி இறக்கும்போதும், மதுரையில் தினகரன் அலுவலகத்தைத் தீ வைத்துக் கொளுத்தும் போதும் கல்வி, பொருளாதாரம் பகுத்தறிவு பீரிட்டு எழும். பாடம் கற்று பலர் சாகலாம்! விபத்தை வைத்து மதத்தை மது என்று சொல்லும் வைரமுத்து, தி.மு.க வினரின் வன்முறையாலும், தி.மு.க வினரின் பொறுப்பின்மையாலும், மேட்டிமைத்தனத்தினாலும் செத்து மடியும் தொண்டர்களின் செயலை அரசியல் மது போதை,அரசியல் வன்முறை என்று சொல்வாரா? வேற்று மதத்தினரை குறி வைத்துக் கொல்லும் ஜிகாதி வன்முறை போதை என்பாரா?

வெறுப்புப் பேச்சு, ஒழுக்கமின்மை, சட்ட விரோத பாலியல் குற்றத்திற்கு ஆதரவு, ஹிந்து துவேஷம் என்று அத்தனை இழி செயலின் உருவான வைரமுத்துவை விருதுக்காகப் பரிந்துரைத்தவர்களும், விருது கொடுத்தவர்களும் சான்றோர்களா? இவர்களின் சான்றோன்மையின் லட்சணமா இது! பாரதிய எதிர்ப்பாளர்களுக்கு விருது வழங்கி, அவர்களைப் பிரபலமாக்கி, இந்திய எதிர்ப்பு, ஹிந்து எதிர்ப்பு ஆகியவற்றை வளர்த்து, மதமாற்ற கும்பலுக்கு உதவும் சதியின் அங்கமே இந்த விருது அறிவிப்பு!

பொதுவாக இந்த விருதை ஜனாதிபதியின் கையால் வழங்குவது மரபு. இந்த விருதை வைரமுத்துவிற்கு ஜனாதிபதி வழங்கினால், அவர் பெண்களுக்கும், தேசத்திற்கும், தர்மத்திற்கும் எதிரான செயலை ஊக்குவிக்கும் தவறைச் செய்தவராகிவிடுவார். இதை மனதில் கொண்டு, இந்த விழாவை ஜனாதிபதி புறக்கணிக்க வேண்டும். இந்த விருதின் நோக்கத்தை ஞானபீட விருது வழங்கும் நிறுவனம் மதிப்பளிக்குமானால், வைரமுத்துவிற்கு விருது வழங்கும் முடிவை வாபஸ் பெறவேண்டும்.

# மானாமதுரை / நாங்குநேரி அரிவாள் வெட்டு

அருண்பிரபு

கடந்த மார்ச் 2ஆம் தேதி நாங்குநேரி அருகே பெரும்பத்து என்ற கிராமத்தில் 6 பேர் கொண்ட ஒரு கும்பல் அரிவாள்களும், கோடாரிகளும், பெட்ரோல் குன்டுகளும் தூக்கிக்கொண்டு வந்து ஒரு தேநீர்க்கடையில் தாக்குதல் நடத்தியது. கடை அருகே சாலையில் நின்றிருந்தவர்ளையும் தாக்கினர். அதில் ஜான்மார்க் என்ற மாற்றுத்திறனாளியும் திரிநாத் கட்டா என்ற ஒடிசாவைச் சேர்ந்த செங்கல் சூளைப் பணியாளரும் கொல்லப்பட்டனர். பிரபாகரன், நெல்சன், ராமசாமி ஆகியோர் காயமடைந்து மருத்துவ சிகிச்சை பெற்றுவருகின்றனர். பின்னர் புளியங்குளம் என்ற அடுத்த கிராமத்துக்குச் சென்ற கும்பல் அங்கே நடத்திய தாக்குதலில் சசிகுமார், கணேசன் ஆகியோர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளனர். கடம்போடு வாழ்வு என்ற கிராமத்துக்குச் செல்லும் வழியில் பெட்ரோல்பங்க் ஒன்றில் பெட்ரோல் போட்டுக்கொண்டு பைக்கில் வந்த ஒருவரையும் இந்தக் கும்பல் வெட்டிவிட்டு பைக்கையும் எடுத்துக்கொண்டு போயிருக்கிறது. இந்தக் கொடூரத்தைச் செய்தவர்கள் ரௌடிகளின் பெயர் சொல்லிக் கோஷமிட்டுச் சென்றதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் 7 பேரைக் காவல்துறை கைது செய்துள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் இருவர் 2023ல் நான்குநேரியில் நடைபெற்ற தலித் மாணாவன் கொடூரத் தாக்குதல் வழக்கில் சிக்கியவர்கள். இவர்கள் மீது பாலியல் கொடுமைக் குற்றச்சாட்டும் உள்ளது என்ற தகவல் அதிர்ச்சி தருகிறது. இது தற்செயலான, திட்டமிடப்படாத போதையில் நடந்த தாக்குதல் என்று ஒரு தரப்பு மழுப்பப் பார்த்த போதும் விசாரணையில் குறிப்பிட்ட சமூகங்களுக்கு இடையே போஸ்டர்/ ஃப்ளெக்ஸ் போடுவதில் தொடங்கிய பிரச்சனை இந்த நிலைக்கு வந்து நிற்பது தெரிய வந்துள்ளது. சாதி பலத்தைக் காட்டவே இந்தத் தாக்குதல் என்று ஊடகச் செய்திகள் சொல்கின்றன.

கைது செய்யப்பட்டவர்கள் குற்ற உணர்வே இல்லாமல் இருப்பதாகச் சொல்கிறது காவல்துறை என்று செய்திகள் வருகின்றன. இந்நிலையில் இவர்களை வீரசூரர்களாகச் சித்தரித்து சமூக ஊடகங்களில் பதிவுகள் வருவதாகவும் தகவல்கள் உள்ளன. காவல்துறை கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்து சமூகவலைத்தளங்களில் வன்முறை தூண்டினால் கடும் நடவடிக்கை என்று நெல்லை எஸ்பி எச்சரித்துள்ளார். தொடர் குற்றம் சாட்டப்பட்ட இருவரும் மைனர் என்ற நிலையில் அவர்களை ஊருக்குள் வரவிடாமல் தடுத்து ஊருக்குள் வர முயன்றால் வழக்கு என்று செய்ததால் இவர்கள் விரக்தியில் மதுவுக்கு அடிமையாகிவிட்டனர் என்று வழக்கறிஞர் மகராஜன் என்பவர் கூறியிருக்கிறார். மேலும் மேலும் வழக்குகள் போடப்பட்ட நிலையில் இது தான் வாழ்க்கை என்று அவர்கள் தவறான பாதைக்கு மாறிவிட்டதாகவும் அவர் வருந்தியிருக்கிறார். அவர்களை மைனர்களாக இருந்த போதே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சீர்திருத்தப் பள்ளியில் படிக்க வைத்து நல்வழிப்படுத்த முயன்றிருக்கலாம் என்றும் அவர் கூறுகிறார்.

நாங்குநேரி என்பது வைணவ ஆன்மிகத் தலம் என்று பெருமையுடன் இருந்த நிலையில் இன்று சாதிக்கலவரத்தின் மையப்புள்ளி என்று ஆகியிருக்கிறது. ஆட்சியின் திறமும் காவலின் வலுவும் கேள்விக்குள்ளாகின்றன. ஆளும் கூட்டணிக் கட்சித் தலைவர் திருமாவளவன் சம்பவத்துக்குப் போதைப் பழக்கமே காரணம் என்றும் அதிலிருந்து இளைஞர்களை மீட்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் தோழமை சுட்டியிருக்கிறார். இது போதையில் செய்யப்பட்ட சம்பவம் என்று சொல்லும் காவல்துறை வந்தவர்கள் மது போதையிலோ அல்லது வேறு போதையிலோ இருந்திருக்க வாய்ப்புள்ளது என்ற கோணத்திலும் விசாரிக்கிறது. தாக்கப்பட்டவர்கள் பல சமூகங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதாலும் கைது செய்யப்பட்டவர்கள் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் இது குறிப்பிட்ட சாதிகளின் மோதல் என்று கொள்ள முடியாது என்று ஒரு கோணமும் சொல்லப்படுகிறது. போதைக் கலாசாரம் இல்லாதிருந்தால் இதுபோன்ற கண்மூடித்தனமான வன்முறைகள் நடக்க வாய்ப்பில்லை.

விசாரணையில் விவரம் தெரியவரும் என்ற போதும் இது மது, போதைப்பொருட்கள் மற்றும் கெத்து காட்டுவது போன்ற விஷயங்களுக்காக இதுபோன்ற சமப்வங்கள் நடப்பதாகவும் இந்த போதை ஆசாமிகள் மீது காவல்துறை கடும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே சட்டம் ஒழுங்கு சீராகும் என்றும் சமூக அக்கறை கொண்டவர்கள் மற்றும் ஓய்வு பெற்ற காவல் அதிகாரிகள் கூறுகின்றனர்.. காவல்துறை மட்டும் இதைச் செய்யமுடியாது, காவல்துறையை நிர்வகிக்கும் அரசும் அரசுத் தலைமையும் இதைச் சீராக அணுகி நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசே மது விற்பனையில் இருக்கும்போது போதையைத் தடுக்க



நடவடிக்கை எப்படி எடுக்கும் என்பதும் கேள்வி.

இது போதாதென்று மானாமதுரை சம்பவம். கிருஷ்ணராஜபுரம் என்ற ஊரைச் சேர்ந்த ஆகாஷ் டெலிசன் என்ற 26 வயது இளைஞர் காவல்துறையின் பிடியில் இருக்கும் போது இறந்துபோயிருக்கிறார். மார்ச் 6 அன்று ஆகாஷ் மற்றும் அவரது நண்பரும் காவல்துறையால் ஜெயக்குமார், அழகர் ஆகியோரை அரிவாளால் வெட்டிய சம்பவத்துக்காக வெட்டுப்பட்ட அழகரின் புகாரில் கைது செய்யப்படுகின்றனர். தப்பி ஓட முயன்ற ஆகாஷை காவல்துறையினர் விரட்டிப் பிடித்ததில் ஆகாஷின் கால் உடைந்ததாகக் கூறி காவல்துறை அவரை மருத்துவமனையில் சேர்த்தது.

ஆகாஷை ஒரு தனியிடத்துக்கு அழைத்துச் சென்ற காவல்துறை காலை ஒடித்துள்ளது என்று குடும்பத்தார் குற்றம் சுமத்துகின்றனர். மேலும் காவல்துறை அடித்துக் கொடுமைப்படுத்தியதில் தான் ஆகாஷ் இறந்ததாகச் சொல்கின்றனர் குடும்பத்தினர். ஆகாஷ் மார்ச் 8 அன்று கால் உடைந்ததற்கான சிகிச்சையின் போது இறந்து போனார். பிரேத பரிசோதனையில் 28 உள்/வெளிக்காயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

காவலில் ஆகாஷ் அடித்துக் கொடுமைப்படுத்தப்பட்டார் என்ற குற்றச்சாட்டு வலுத்ததை அடுத்து, வழக்கு தற்போது சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ளது. காவல்துறை உயரதிகாரிகள் விசாரித்து 6 காவல்துறையினர் பணியிடைநீக்கம் செய்யப்பட்டனர். இந்நிலையில் ஆகாஷ் டெலிசன் குற்றப் பின்னணியர் (history-sheeter)என்று காவல்துறையால் அடையாளப்படுத்தப்பட்டவர். போதை மருந்துகள் வைத்திருந்தது, விற்றது, விநியோகித்தது என்று பல வழக்குகள் இவர் மீது உள்ளன என்றும் காவல்துறையினர் விவரம் தருகின்றனர். இதில் அழகரும், ஆகாஷ் டெலிசனும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் சாதிக் கோணத்தில் பிரச்சனை பெரிதாகவில்லை. அழகரை வெட்டிய புகாரில் கைது செய்யப்பட்ட போது தப்பித்த ஆகாஷ் பாலத்தில் இருந்து குதித்ததில் பல காயங்கள் ஏற்பட்டதாகவும் அதனால் கைதுக்கான முறையான அறிவிப்பைக் குடும்பத்தினருக்கு வழங்கிவிட்டு ஆகாஷ் டெலிசனை சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர் காவல்துறையினர்.

சிவகங்கை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்தது காவல்துறை. மார்ச் 7 அன்று மருத்துவமனைக்கு வந்து பார்த்த மாஜிஸ்திரேட் அங்கேயே ஆகாஷ் டெலிசனுக்கு மார்ச் 18 வரை நீதிமன்றக் காவலுக்கு உத்தரவிட்டார். அதோடு டெலிசனை மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் சேர்க்கச் சொல்லியும் உத்தரவிட்டார். எலும்பு உடைந்தது காரணமாக எலும்பு மஜ்ஜையில் உள்ள கொழுப்புத்துகள்கள் ரத்த ஓட்டத்தில் கலந்து ரத்தநாளங்களில் அடைப்பை ஏற்படுத்தியதால் மரணம் சம்பவித்திருக்கலாம் என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இதுவரை காவல்துறையின் பிடியில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மரண எண்ணிக்கை 26ஐக் கடந்துவிட்டது என்றும் இது கவலைக்குரிய விஷயம் என்றும் ஒரு சாரார் தெரிவிக்கின்றனர். ஆகாஷ் டெலிசன் குடும்பத்தினர் காவல்துறையினர் மீது நடவடிக்கை, குடும்பத்துக்கு கணிசமான நிதி உதவி, மற்றும் ஒருவருக்கு அரசு வேலை ஆகிய கோரிக்கைகளை ஏற்றால் மட்டுமே உடலைப் பெற்றுக்கொள்வதாகச் சொல்லிப் போராட்டம் நடத்தினர். மதுரை உயர் நீதிமன்றம் சாலை மறியல் கூடாது என்றும், அரசு விசாரணையை துரிதப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்ட போதும் ஆகாஷின் உறவினர்கள் சாலைமறியலைத் தொடர்ந்தனர்.

அரசு இவ்விரண்டு சம்பவங்களிலும் உளவுத்துறை கோட்டைவிட்டது என்ற குற்றச்சாட்டு உள்ளது. நான்குநேரியில் 9 பேர் கூடி ஒன்றாகத் திரிந்து திட்டமிட்ட நிலையில், அதில் இருவர் மீது ஏற்கனவே வழக்கு இருக்கும் நிலையில், உளவுத்துறை கண்காணிப்பை இறுக்கியிருக்கவேண்டும். சட்டம் ஒழுங்குப் பிரிவை உஷார்படுத்தியிருக்கவேண்டும். ஆகாஷ் டெலிசன் விஷயத்திலும் டாஸ்மாக் கள்ளவிற்பனை உள்ளிட்ட பல கோணங்களில் பேசப்படுவதைப் பார்க்கும் போது அந்த இளைஞர் சமூக-அரசியல் ஆர்வத்தில் இருந்தது தெரியவந்துள்ளது. உளவுத்துறை அழகர் தாக்குதல் வழக்கு உள்ள நிலையில் ஆகாஷைக் கண்காணிப்பில் வைத்து வழக்கை நடத்தவும், அவர் அடிபட்டுப் போராட்டம் வலுப்பெறும் நிலையில் அரசியல் கோணங்களை எடுத்துச் சொல்லி விவகாரத்தைப் பொதுமக்களைப் பாதிக்காத வகையில் கொண்டு செல்ல உதவியிருக்கலாம் என்றும் விவரமறிந்த ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

அடுத்து வரும் ஆட்சியாவது முறையாகக் காவல்துறையைச் செயல்பட வைக்குமா என்பதே மக்கள் எதிர்பார்ப்பு. இவ்விரண்டு சம்பவங்களில் உயிரிழந்தோர் ஆன்மா அமைதி பெற நாம் பிரார்த்திப்போம். சட்டம் ஒழுங்கு சீராகவும் நல்ல அரசு அமையவும் ஜனநாயகக் கடமை செய்வோம். வந்தேமாதரம்.

# அரசியல் உலா

- கரிகாலன்

## தமிழக நலனைக் கருத்தில் கொண்டு..!

**பெட்டிச் செய்தி 1:**

**எச்சரிக்கை:**

**ஊடகங்கள் நாளேடுகள் என்றாலே நடுநிலையாக தான் இரு(ந்திரு)க்க வேண்டும். பலரும் அந்த நிலையிலிருந்து தவறிவிட்டதால் சிலர் மட்டுமே நடுநிலை என்று சொல்லிக் கொள்ள வேண்டிய அவசியம் வந்திருக்கிறது. அவர்களுமே கூட பொது நலனைக் கருத்தில் கொண்டு பொதுவான செய்தியை முன் வைக்க வேண்டுமே தவிர செய்திகளை தங்கள் விருப்பத்திற்கு திரித்து விடவோ, செய்திகளின் மேல் தங்கள் விஷத்தை உமிழ்ந்து விடவோ கூடாது. ஊடக தர்மத்தில் இவற்றிற்கு இடம் இல்லை.**

இப்படியும் நடக்கலாம் என்று செய்தி வெளியிடுவோர் சிலர், இப்படித்தான் நடக்க வேண்டும் என்று விருப்பப்படுபவர் பலர். அனேகமாக எல்லா சிறு கட்சிகளுமே தமக்கென அங்கீகாரம் வேண்டி ஏதாவது ஒரு கூட்டணியில் இணைந்து விட்டார்கள். கூட்டணி வண்டியில் ஏற மாட்டேன் என்று இதுவரையில் அடம் பிடிப்பவர்கள் சீமான், விஜய் இரண்டு பேர் மட்டுமே. இருவரது வழிகளும் தனியாகவோ, தன்னந்தனியாகவோ இருக்கும் போல!.

தனித்துவமே எனது மகத்துவம் என்று சீமான் தனியாய் நின்றால் அதற்கான தனி விலையை அவர் தந்தே ஆக வேண்டும். அப்படி ஒரு முடிவு எடுத்தால் அது அவருக்கும், இதுவரையில் அவர் தீவிரமாக எதிர்த்து வரும் திமுகவுக்கும் நேரடியாக, ஆனால் தற்காலிகமாக உதவுமே தவிர, இருவருக்குமான அரசியல் எதிர்காலத்தையும் மாநிலத்தின் வளர்ச்சியையும் ஒட்டுமொத்தமாக முடித்து விடும்.

பிரிந்து நின்று வாக்குகளையும் பிரிப்பதால் குற்றுயிரும் குலையுயிருமாக இருக்கக்கூடிய திமுகவுக்கு சற்றே உயிர் கொடுத்து இன்னும் நான்கு ஐந்து தொகுதிகளில் ஜெயிக்க வைக்கலாமே தவிர, அதனால் அவர்களுக்குப் பெரிய பலன் விளையாது.

ஏற்கனவே சொன்னபடி வெல்லும் கூட்டணி எது என்பதை இது போன்ற உதிரி கட்சிகள் உணர்ந்து விட்டால், அவர்களோடு இணைந்து ஒன்றாய் நின்று விட்டால் அவர்களுக்குத்தான் லாபமே தவிர, அடுத்து வரக்கூடிய ஆளும் கட்சிக்கு அது நஷ்டமாக அமையாது.


மாநிலத்தின் நலன் கருதித் தான் என்று இல்லை, சுயநலமாக கூட இவர்கள் நல்ல ஒரு முடிவை எடுப்பார்கள் என்றால் தீய சக்தி திமுகவுக்கு இனி ஒற்றை உறுப்பினர் கூட இல்லாத அளவுக்கு தமிழகத்தில் மாபெரும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

**பெட்டிச் செய்தி 2:**

**திமு கழகம் தரும் கள்ளச் சரக்கை நம்பிய காங்கிரஸ்இதுவரையில் ஊறுகாய் போல தொட்டுக் கொண்டிருந்த தவெக உறவை உதறித் தள்ளிவிட்டது. சரக்கு மிடுக்கு சரணாகதி ஆகிவிட்டது. ஒரு காலத்தில் பெட்டி கோபாலாக பெருமையுடன் சுற்றித் திரிந்த ஒருவர் பெட்டிப் பாம்பாக அடங்கி விட்டார். ஒற்றைத் தீப்பெட்டிக்குள் அடங்கி விடக்கூடிய ஒரு கட்சிக்கு திமுக பெட்டி பெட்டியாய் பேரம் பேசியதாய் பெட்டி பிரேமா எனப் பலரும் கேலி செய்கிறார்கள்**

வதந்திகள் உலாப் போகத் தொடங்கியதால் அதிர்ச்சி அடைந்த அந்த அரசியல் தலைவர், செய்திகள் உலாப் போனாலும் பரவாயில்லை என்று ஜோடியாக உலாப் போனார். அதுவும் கூட தேவையில்லாத சிக்கலை உருவாக்கி சில நாட்கள் கழித்து வார்த்தைப் போரில் முடிந்து போனது.

ஆக மொத்தத்தில் சில வாரங்கள் பேசாமல் இருந்து, சில வாரங்கள் பேசப்படாமல் இருந்த விஜய் அடுத்த சில வாரங்கள் வேறு சில காரணங்களால் மீண்டும் ஊடக வெளிச்சத்துக்கு வந்தார். இப்பொழுது தவெக உடன் கூட்டணிப் பேச்சு வார்த்தை என்ற செய்தி தான் ஊடகங்கள் முழுவதும் நிரம்பக் காணப்படுகின்றன.




நாம் முன்னரே கூறியபடி காங்கிரஸுக்காகக் காத்திருந்த தவெக இனியும் தனியாய் நிற்பதில் பிரயோஜனம் இல்லை என்பதை இப்பொழுது உள்ளளவில் உணர்ந்து இருக்கும். செங்கோட்டையனே சொன்னபடி தவெக பெயரைப் பயன்படுத்தி, திமுகவைப் பயமுறுத்தி காங்கிரஸ் பலனடைந்ததே தவிர, அதையே நம்பி இருந்த தவெகவை அம்போ என்று தவிக்க விட்டுச் சென்று விட்டது.

இனியும் வெற்று அரசியல் முழக்கங்கள் பலன் தராது என்பதை உணர்ந்து தனது அரசியல் எதிர்காலத்தைக் காப்பாற்றிக் கொள்ள விஜய் ஏதாவது ஒரு நல்ல முடிவை விரைந்து எடுப்பார் என்று நம்புவோம்.

தடைகள் அதிகமற்ற தனியார் நிகழ்வில், சாணக்யா எட்டாம் ஆண்டு தொடக்க விழாவில், பொது அரங்கில் எடப்பாடி பழனிச்சாமி எதிர்கொண்ட கேள்விகளும், எடுத்துரைத்த கருத்துக்களும் எந்த அளவுக்கு அவரது கட்சியும், கூட்டணியும் தன்னம்பிக்கையோடு இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டின.

அதில் எடப்பாடி பழனிச்சாமி தவெகவுடன் தாங்கள் பேசவில்லை என்பதை உறுதிப்படுத்தினார். பாண்டே அதையே மேற்கோள் காட்டி, கூட்டணி வைத்தால் தவெகவுக்கு நல்லது என்றார். இதைத்தான் ஸ்ரீ தமிழ் ஆரம்பம் முதலில் சொல்லி வருகிறது. இப்பொழுது மேலும் பல ஊடகவியலாளர்களும் அதை உணரத் தொடங்கி இருக்கின்றனர் என்பது மகிழ்ச்சி.

அதிமுக தரப்பு அமைதியாய் இருந்து அடுத்தத் தரப்பு அந்தப் பேச்சுவார்த்தையை நடத்தி இருக்கலாம். மாநில நலனைக் கருத்தில் கொண்டு மத்தியஸ்தம் யார் செய்தாலும் தவறில்லையே. எது நடந்தாலும் உடனடியாக எடப்பாடியின் காதுகளுக்கு வரும், அதைவிட விரைவாக எல்லோருடைய கவனத்திற்கும் வரும்.

ஏப்ரல் 23 என தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு விட்டது. இந்த இதழ் அச்சாகி வாசகர் கைகளில் தவழும் போது கூட்டணி விவரங்கள் உறுதிப்பட்டிருக்கும், தொகுதி - வேட்பாளர் வரையறைகள் வகுக்கப்பட்டு இருக்கும், திமுகவைத் துரத்தி அடிப்பது என்ற வாக்காளர்களின் முடிவு திடப்பட்டிருக்கும்.

மணிமகுடத்தில் ஒரு மயிலிறகாக தமிழக வெற்றிக் கழகம் இன்னும் சில நாட்களில் தேசிய ஜனநாயக கூட்டணியில் சேர்ந்திடக் கூடும்.அப்படியே இல்லை என்றாலும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பலம் கூடிக்கொண்டே செல்லும், அதுவே இந்த முறை தேர்தலில் வெல்லும். அடுத்து அமைய இருப்பது அதிமுக தலைமையிலான கூட்டணி ஆட்சி தான் என்பது அநேகமாக உறுதி செய்யப்பட்டு விட்டது.

பங்குனி பிறந்த நேரத்தில் அரசியல் உலா சூடு பிடிக்கத் தொடங்கி இருக்கிறது அடுத்தடுத்து வரும் இதழ்களில் நம்பிக்கை தரும்மேலும் பல தகவல்களோடு சந்திப்போம்.

**பெட்டிச் செய்தி 3:**

**தவெக தமிழக அரசியலில் தவிர்க்க இயலாத கட்சி என்ற இடத்தைப் பிடிக்கவில்லை என்றாலும், தவிர்க்க வேண்டிய கட்சியாகவும் தனித்து விடப்படவில்லை. தவெக என்று மட்டும் இல்லாமல் எந்த புதிய சிறிய கட்சிகளாக இருந்தாலும், தமிழக நலனைக் கருத்தில் கொண்டு திமுகவை தோற்கடிக்க வேண்டும் என்ற ஒற்றை இலக்கோடு தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைவது அவர்களுக்கு ஸ்திரமான அரசியல் எதிர்காலத்தைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.**

# வெல்வோம் ஒன்றாக, ஆள்வோம் தனியாக - திமுகவின் ஆசைக்கு ஆப்பு வைக்கப் போகும் மக்கள்!

- நாணா

அதிக எண்ணிக்கையில் இடங்கள், ஆட்சியில் பங்கு, இல்லையேல் எங்களுக்கு முடிவு செய்ய வாய்ப்புகள் அதிகம் என்று திமுகவிடம் சவடால் விட்டு வந்த காங்கிரஸ் வெறும் மூன்று இடங்களை அதிகமாகவும் ஒரே ஒரு ராஜ்ய சபா சீட்டையும் பெற்றுக் கொண்டு திமுகவிடம் சரணாகதி அடைந்துள்ளது. சரணாகதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்கள் மாநிலத் தலைவரும் மேல் இட பார்வையாளருமாக இருந்தாலும், ஒப்பந்தத்தை பேசி முடித்தவர் பா. சிதம்பரம் என்பதுதான் வேடிக்கை.

காங்கிரஸ் போனால் போகட்டும் என்று வீராப்பு காட்டிய திமுக உள்ளுக்குள் தொடை நடுங்கிக் கொண்டிருந்ததால் சோனியாவை சந்திக்க கனிமொழியை அனுப்பியது. பேரம் பேசப்பட்டது. தயவு செய்து கூட்டணியை விட்டு வெளியேற வேண்டாம், அசாம் சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசின் முழுச் செலவையும் திமுகவே ஏற்றுக் கொள்ளும், அதே வேளையில் ஆட்சியில் மட்டும் பங்கு கேட்க வேண்டாம், என்று பேசி சோனியாவை சரி செய்தார் கனிமொழி. கட்சியின் சொத்தான நேஷனல் ஹெரால்டையே முறைகேடாக சொந்தமாக்கிக் கொண்ட சோனியாவுக்கு, ஒரு மாநில தேர்தலுக்கு திமுக பணம் தருகிறது என்றால் வேண்டாம் என்றா சொல்வார் ?




**காங்கிரஸ் போனால் போகட்டும் என்று வீராப்பு காட்டிய திமுக உள்ளுக்குள் தொடை நடுங்கிக் கொண்டிருந்ததால் சோனியாவை சந்திக்க கனிமொழியை அனுப்பியது. பேரம் பேசப்பட்டது.**

உண்மை புரியாத சில தலைவர்கள் வீராப்பு பேச்சை குறைக்காத நிலையில், திமுக தனது ஊழல் கூட்டாளி, தன்னைப் போலவே இந்துக்களை வெறுத்து ஜிகாதிகளை ஆதரிக்கும் ப.சிதம்பரத்தை அழைக்க அவரும் வந்தார். இவர்கள் தான் கொள்கை கூட்டாளி, கொள்ளைக் கூட்டாளியும் ஆயிற்றே! இவன் இதற்கு லாயக்குப் பட மாட்டான், நாம் தான் முடிவு செய்கிறோம் என சோனியா உதவியுடன் கூட்டணி முடிவு முடிவு செய்யப்பட்டு, தலைவர்கள் அழைக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

பாவம் மாணிக்கம் தாகூர், ஜோதிமணி, கிரிஷ் சோடங்கர் ஆகியோர். ராகுலின் ஆசி இருந்தென்ன பிரயோசனம், "அன்னையின்" ஆசி இல்லாததால், லாயக்கியற்றவர்கள் பட்டியலில் இவர்களும் இணைக்கப்பட்டதால் இப்போது அதனை சமன் செய்ய தேர்தல் மேலாண்மை கமிட்டியில் இடம் அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டணி அமைந்ததாலும், கூட்டணி அமைக்கப்பட்ட விதத்தில் காங்கிரசின் அகம்பாவத்தை நொறுக்கியதாலும் அதுவரை தொடை நடுங்கிக் கொண்டிருந்த ஸ்டாலின் கட்டவிரலை தூக்கி காண்பித்து தனது மகிழ்ச்சியை தெரிவித்தார். என்ன இருந்தாலும் ஆட்சியில் இருந்த காலத்தில் கட்டிடத்தின் ஒரு தளத்தில் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு மறு தளத்தில் ரெய்டு நடத்தி 63 இடங்கள் பெற்ற கட்சி அல்லவா? ஸ்டாலினுக்கு மகிழ்ச்சி ஏற்படாமல் எப்படி இருக்கும்?

இந்த நிலையில், புதிய கட்சிகள் கூட்டணிக்கு வருவதால் கூட்டணிக் கட்சிகள் இம்முறை

**திமுக கொடுத்த காசுக்கு, பாலியல் வன்முறை, போதைப் பொருள் கடத்தல், கள்ளச்சாராயம் மரணம், சாதிய மேட்டுக்குடித்தன நடவடிக்கைகள் என அனைத்துக்கும் முட்டுக்கொடுத்து முட்டுக் கொடுத்து, சுகம் கண்டு வந்த வெந்நீர் தவளைகளுக்கு, இப்போது துள்ளிக்குதித்து வெளியே வர இயலவில்லை!**

குறைவாகவே இடங்கள் கேட்க வேண்டும் என்று கூறிவந்த ஸ்டாலின், காங்கிரசுக்கு அதிகமாக மூன்று தொகுதிகளும் ஒரு நாடாளுமன்ற மக்களவை எம்பியும் வழங்கியது கூட்டணிக் கட்சிகள் இடையே கொதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

நேற்று வந்த கமலஹாசனுக்கு எம்பி, தேமுதிகவுக்கு எம்பி என்று புதிய கூட்டணி கட்சிகளுக்கு தாராளம் காட்டி, ஆறு ஆண்டுகளுக்கு குத்தகை எடுத்து விட்ட ஸ்டாலின், குறைவான இடங்கள் என்று தங்களை மிரட்டுவதை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. ஒரு கூட்டு முயற்சியில் எப்படியாவது இந்நிலையை மாற்ற வேண்டும் என்று அவர்கள் முடிவெடுத்த போதுதான், அடுத்து ஒருவர் சரண் அடைந்து விட்டார் என்ற செய்தி அவர்களுக்கு மேலும் அதிர்ச்சி ஊட்டியது.

வாரிசு அரசியலுக்கு எதிராக கொதித்து எழுந்த வைகோ, நான்கு இடங்கள் போதும், அதுவும் ஒரே ஒரு இடத்தில் தான் தங்கள் கட்சி சின்னம், மற்ற மூன்று இடங்களிலும் உதயசூரியன் என்று அந்த தன்மானச் சிங்கம், அசிங்கமாக ஒப்பந்தம் செய்து கொண்டது இதர கூட்டணி கட்சிகள் இடைய ஆத்திரத்தை ஊட்டியது. இன்னமும் விஜய் இருக்கிறார், மோதி பார்க்கலாம் என்றால், தாங்கள் வெந்நீரில் இறக்கப்பட்ட தவளை என்று இப்போதுதான் புரிகிறது.

திமுக கொடுத்த காசுக்கு, பாலியல் வன்முறை, போதைப் பொருள் கடத்தல், கள்ளச்சாராயம் மரணம், சாதிய மேட்டுக்குடித்தன நடவடிக்கைகள் என அனைத்துக்கும் முட்டுக்கொடுத்து முட்டுக் கொடுத்து,





சுகம் கண்டு வந்த வெந்நீர் தவளைகளுக்கு, இப்போது துள்ளிக்குதித்து வெளியே வர இயலவில்லை!

முதல் நாள் கூட நாம் திமுகவில் சேர போகிறோம் என்று ஓபிஎஸ் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார் என்று கூறிய முதல்வர் ஸ்டாலின், ஒரே நாளில் என்ன வித்தை செய்தார் என்ற அச்சம் இவர்களை வாட்டுகிறது. "நான் இப்போதெல்லாம் தியாசாஃபிக்கல் சொசைட்டி வளாகத்தில் வாக்கிங் செல்வதில்லை. காரணம், அங்கு வாக்கிங்கிற்கு வரும் சின்னஞ்சிறு கட்சித் தலைவர்களை கூட எங்கள் கூட்டணிக்கு வாருங்கள் என ஸ்டாலின் அழைத்து விடுகிறார். என்னையும் அவர் அப்படி அழைத்துவிடுவாரே என்ற பயம் தான் நான் அங்கு செல்வதில்லை" என்ற டி டி வி தினகரனின் பேச்சு இவர்களுக்கு திமுகவின் ஆக்டோபஸ் கைகள் எவ்வளவு விரிந்திருக்கிறது என்று புரியும் போது, இனி தங்களுக்கு மீட்பே இல்லையா, இனி நாம் வாழ்நாள் கொத்தடிமைகள் தானா என்ற அச்சத்தை உருவாக்குகிறது.

தேர்தலுக்குப் பிறகாவது முயற்சி இருக்கும் மீட்சி இருக்குமா என்றால் அதிலும் அச்சம் வருகிறது. 26 கட்சி கூட்டணி? தப்பித் தவறி வெற்றி என்று வந்து விட்டால், இத்தனை கட்சிகளுக்கு எப்படி ஆட்சியில் இடம் கொடுக்க முடியும் என்று கூறி ஆட்சியில் பங்கு வழங்காமல் தப்பித்தும் கொள்ளலாம்! வெற்றி பெற 26 கட்சி கூட்டணி, ஆட்சியில் பங்கு தர இயலாது என்பதற்கும் அதே 26 கட்சி கூட்டணி! ....ஒரே கல்லில் இரண்டு மாங்காய்...

தேர்தலுக்கு முன், "வெல்வோம் ஒன்றாக", தேர்தலுக்குப் பின், "ஆள்வோம் தனியாக". இது தான் திராவிட மாடல் ஏமாற்று.

கூட்டணி கட்சிகள், திமுகவின் வலையில் வீழ்ந்தாலும் மக்கள் இப்போது வீழத் தயாராக இல்லை. தனது வாக்குறுதிகளில் 70 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மக்களை ஏமாற்றிய திமுகவுக்கு, மக்கள் ஏமாற்றம் அளிக்கப் போகிறார்கள் என்பதை ஏப்ரல் 23 உறுதி செய்யும். மே 4 அதனை வெளிப்படுத்தும்.

# Adல் காட்டுகிற வேகத்தை குழந்தைகள் நல் வாழ்வில் காட்டவில்லையே

-சிகு



கோவை மாநகராட்சி பள்ளியில், சத்துணவு சாப்பிட்ட 43 மாணவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. கோவை, கவுண்டம்பாளையம் ஹவுசிங் யூனிட் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில், 10.03.2026 அன்று மதியம் வழக்கம்போல மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டது. சாப்பிட்டுக்கொண்டிருந்த போதே, அடுத்தடுத்து சிலருக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. உடனடியாக மற்ற மாணவர்கள் சாப்பிடுவது தடுக்கப்பட்டது. உணவில் பல்லி இறந்து கிடந்தது கண்டறியப்பட்டது. பள்ளிக்கு விரைந்த மருத்துவ குழுவினர், மாணவர்களைப் பரிசோதித்து, கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். 43 மாணவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

பெற்றோர் பள்ளி முன் குவிந்தனர். இச்சம்பவத்தால் பதற்றம் நிலவியது. கோவை மாநகராட்சி கமிஷனர் சிவகுருபிரபாகரன் கூறுகையில், “தகவல் வந்த உடன் மருத்துவ குழுக்கள் பள்ளிக்கு விரைந்து முதலுதவி அளித்தனர். அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. மாணவர்களின் உடல்நிலை சீரான பின், வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவர். உணவில் பல்லி விழுந்தது குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்,” என்றார்.

அதேபோல், விருதுநகர் மாவட்டம், கமுவனச்சேரி அரசு உயர்நிலைப் பள்ளியில், 09.03.2026 அன்று மாலை திடீரென 19 மாணவர்களுக்கு வாந்தி, வயிற்று வலி ஏற்பட்டது. அவர்கள், காரியாபட்டி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, நேற்று காலை வீடு திரும்பினர். இதையடுத்து, சுகாதார துறையினர் பள்ளியில் உள்ள குடிநீரை ஆய்வுக்கு எடுத்துச் சென்றனர். தலைமை ஆசிரியர் ரவிச்சந்திரன் கூறுகையில், மாணவர்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். வேறு பிரச்னை எதுவும் இல்லை என்றார். ஏதோ இந்த இரு சம்பவங்கள் தான் அசம்பாவிதமாக நடந்து விட்டது என்று புறந்தள்ள முடியவில்லை.திமுக ஆட்சிக்கு வந்தது முதல் அரசு பள்ளிகளின் சிற்றுண்டி மற்றும் மதிய உணவுகளை உட்கொண்டு பாதிப்படைந்த விவரங்களை கொஞ்சம் Rewind செய்து பார்ப்போமா ?

18 மார்ச் 2022ல் கிருஷ்ணகிரி, மெட்டுச்சூளை அரசு மேல்நிலைப் பள்ளி, கல்லாவியில், பாதுகாப்பற்ற முறையில் உணவு சமைத்த காரணத்தால் 7 மாணவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது.

22 Jul 2022, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் அமைந்துள்ள கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சத்துணவு சாப்பிட்ட 25 சிறார்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

28 ஜூலை 2022, நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யத்தில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளி விடுதியில் காலை உணவு உட்கொண்ட 60 மாணவ, மாணவியர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

**ஒரு முறை நிகழும்போதே, அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தால் மீண்டும் மீண்டும் இச்சம்பவங்கள் நடந்திருக்குமா? அரசு தொடர்ந்து அலட்சியம் காட்டி வருவது இவர்களின் DONT Care Attitude யை காட்டுகிறது.**

10 Sep 2022, திருவண்ணாமலை மாவட்டம் ரெட்டியார்பாளையம் மோத்தக்கல் கிராமம் அரசு உயர்நிலைப் பள்ளியில் மதிய உணவு சாப்பிட்ட 47 மாணவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டதையடுத்து ரெட்டியார்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். 23 ஜூன் 2023, கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி அருகே கோட்டூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி 18 மாணவர்கள் திடீர் வயிற்றுவலி, வாந்தி, மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

15 ஜூலை, 2023, திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் அடுத்த தண்டரை கிராமத்தில் உள்ள அரசுப் பள்ளியில் காமராஜர் பிறந்தநாள் அன்று வழங்கப்பட்ட சிறப்பு மதிய உணவில் பல்லி கிடந்ததால், அதனைச் சாப்பிட்ட 60-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வாந்தி மற்றும் மயக்கம். அவர்கள் அனைவரும் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதி.

21 டிசம்பர் 2023, திருச்சி மாவட்டம், லால்குடி அருகே உள்ள சிறுமயங்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் உணவு உட்கொண்ட 20 மாணவர்களுக்கு வாந்தி, மயக்கம். அவர்கள் லால்குடி அரசு மருத்துவமனையில் அனுமதி

29 ஜனவரி 2024, அரியலூர் மாவட்டம், செந்துறை அருகே உள்ள சோழங்குறிச்சி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சத்துணவு சாப்பிட்ட 19 மாணவர்களுக்கு வாந்தி மற்றும் மயக்கம் ஏற்பட்டு ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றனர்.

22 ஏப்ரல் 2025, திருச்சி மாவட்டம், மணப்பாறை மற்றும் துவரங்குறிச்சி காவல் எல்லைக்கு உட்பட்ட அரியக்கோன்பட்டி வேம்பனூர் ஊராட்சி அரசு நடுநிலைப் பள்ளியில் சாப்பிட்ட 15-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டு இலுப்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்,

ஜனவரி 4,2026 கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் / சுல்தான்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட ஓடக்கல்ப்பாளையம் அரசு நடுநிலைப் பள்ளியில் மதிய உணவு சத்துணவு சாப்பிட்ட சுமார் 33 மாணவர்களுக்கு வாந்தி, வயிற்று வலி மற்றும் மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனைகளில் அனுமதி.



10 மார்ச் 2026, கோயம்புத்தூர் மாவட்டம், கவுண்டம்பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் மதிய உணவில் பல்லி கிடந்ததைச் சாப்பிட்ட 44 மாணவர்களுக்கு வாந்தி மற்றும் மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதி.

இப்படி ஏகப்பட்ட சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இது மட்டுமல்ல, ஈரோட்டில் மாணவ மாணவியருக்கு வழங்கப்பட்ட முட்டைகள் அழுகிய நிலையில் இருந்ததாக புகார் எழுந்தது. இதற்கு பதில் அளித்த அமைச்சர் கீதா ஜீவன் பதிலோ படு அலட்சியமானது. பழைய முட்டைகளை அனுப்பி விடக்கூடாது என்பதற்காக மூன்று நாட்களும் மூன்று வித வண்ணத்தில் அவற்றின் மீது மை வைக்கப்படும். அதே போன்று, தமிழ்நாடு அரசு என அனைத்து முட்டைகளிலும் முத்திரை அச்சிடப்படும். மழை பெய்த அன்று கருப்பு கலர் மை வைத்துள்ளனர். மழையில் தார்பாய் இல்லாமல் லாரி வந்துள்ளது. முட்டைகள் எல்லாம் மழையில் நனைந்ததால், மை ஊறி உள்ளே இறங்கி உள்ளது என்று விளக்கம் அளித்தார். இது அந்த நேரத்தில் கடும் விமர்சனத்திற்குள்ளானது என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிட மாடலின் காலை உணவுத் திட்டத்தைப் பார்த்து தான் கனடாவே இதுப் போன்ற திட்டத்தைத் தொடங்கி இருக்கு என்றெல்லாம் விளம்பரம் செய்தார் அப்பா ஸ்டாலின்!

கனடாவைத் தொடர்ந்து இங்கிலாந்திலும் இதுப் போன்ற திட்டத்தை செயல்படுத்த இருப்பதாக பெருமையாகச் செல்லும் இடங்களில் எல்லாம் கூறிக் கொண்டார் அப்பா!

என்னை எல்லோரும் அப்பா என்று அழைக்கிறார்கள் என்று பெருமையாக கூறி கொண்டால் போதுமா? அப்பா என்று அன்போடு அழைக்கும் குழந்தைகளின் உயிர் உங்களுக்கு அவ்வளவு அலட்சிமா முதல்வரே?

ஒரு முறை நிகழும்போதே, அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தால் மீண்டும் மீண்டும் இச்சம்பவங்கள் நடந்திருக்குமா?

அரசு தொடர்ந்து அலட்சியம் காட்டி வருவது இவர்களின் DONT Care Attitude யை காட்டுகிறது.

மீண்டும் விளம்பர மாடல் ஆட்சி என்றே நிரூபித்து வருகிறது.

வேட்பாளர்களுக்கு ஒழுக்கமான குடும்ப வாழ்க்கையே தகுதினு தமிழகத்தின் போர்வாள், கொள்கை குன்று அண்ணன் வைகோ உறுமி இருக்காரே?

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

நாலு சீட்டு கொடுத்த கோவம். முதியவரின் வளர்ப்பு மகள் திருமணம், படிதாண்டா பத்தினியல்ல முற்றும் துறந்த முனிவனல்ல டயலாக், முத்தமிழ் வித்தவர் லீலைகள் , கார் ரேஸ், பால்டாயில் என்று பல நினைவு வருது போல

கருணாநிதியின் இறுதி காலத்தில் அளித்த வாக்குறுதிக்காக, நான் ஸ்டாலின் உடன் இருக்கிறேன் - வைகோ உருக்கம்!

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

ஒருவர் இறந்தபின், அவர் சொன்னதாக என்ன வேணும்னாலும் சொல்லலாம். அவர் வந்து கேட்கப் போவதுமில்லை, நாமும் இறந்தவரிடம் கேட்க முடியாது. கருணாநிதி இப்படித்தான் இறந்தவர்களை சாட்சிக்கு அழைப்பார். அவர் டெக்னிக்கா அவருக்கே செஞ்சுட்டாரு கழகப் போர்வாள்




தமிழத்தில் இருந்த 54 மாதங்கள் என் வாழ்வின் பொற்காலம் னு ஆளுநர். ஆர். என். ரவி ஆத்மார்த்தமா சிலாகிச்சி பேசிட்டு West Bengal க்கு Tough கொடுக்க போய்ட்டாரே?

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

வாஸ்தவம் தான், தமிழுக்கும், தமிழர்களுக்கும் அவர் இங்கிருந்த காலம் பொற்காலம். ஆனா, திமுகவுக்கு அது போர்க் காலம். இனி மேற்கு மம்தா தீதிக்கும், ஜிகாதிக்கும் போர்க்களம். இந்திய எல்லைக்கும் பாதுகாப்பு

அரசியலுக்கு வரக்கூடாது என ரஜினியை திமுக குடும்பம் மிரட்டியதுனு ஆதவ் அர்ஜுனா பயங்கர குற்றச்சாட்ட திமுக மேல வச்சிட்டாரே , அதுக்கு நீ என்ன சொல்ற ?

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

இவங்ககிட்ட மாட்டினா, ஏதாவது விஷயத்தை வெளில கொண்டு வந்துடுவாங்கனு ண்டிடூனுணஞஆ எஸ்கேப் ஆயிட்டாரு, ஆனா பாரு ஜோசப் விஜய்க்கு மான, அவமானப் பிரச்சினை இல்லைப்பா.... அவர் கலைஞர் மாதிரி

திமுக சொன்ன தொகுதிகளின் எண்ணிக்கையில் எங்களுக்கு ஏற்பு இல்லை, அதனால் தி.மு.க கூட்டணியில் கூடுதல் தொகுதிகளை கேட்டுள்ளோம்னு CPI சண்முகம் ரொம்ப தைரியமா கேட்டுருக்காரே ?

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

மதிமுக, கம்யூனிஸ்ட், பொங்கிடுச்சு, அடுத்து விசிக, தேமுதிக,மநீம புலம்பலுக்கு We are waiting! அடுப்புல தண்ணி ஊத்தினா பொங்காதுனு தி.மு.கவுக்குத் தெரியும். நிறைய தண்ணி வேணும்னா நல்லா பொங்கணும் பாஸ்!

சாதி பெயரை சொன்னாலே வழக்கு பதிவு செய்கிறோம்; அடித்து தாக்கியிருக்க வேண்டும் என்று இல்லை - பொறுப்பு டிஜிபி

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

ரொம்ப வசதியா போச்சு; பொன்முடி, ராஜகண்ணப்பன், தயாநிதி மேல எல்லாம் அப்போ கேஸ் வரப்போகுது. போலீஸ்னா கெத்துதான்.... ஜி.டி. நாயுடு பாலம்னு பெயர் வச்சவங்க மேல கேஸ் போடுவீங்களே! பாலத்துக்கு மேல கேஸ் போடுவீங்களா சார்!

- நா.பாஸ்கரன்

தமிழகத்தில் தொடர்ந்து நடந்து வரும் பாலியல் குற்றங்களை நினைத்து கமல் கடும் கோவம் அடைந்து பெரிய பதிவு ஒன்றை டிவிட்டர்ல போட்டியிருக்காரே?

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

விஸ்வரூபம் படம் பிரச்னையில, இந்த நாட்டை விட்டே போறேன்னு சொன்னாரே, அதே கோவம் தான் இப்பவும், திமுக கூட்டணியில் இருந்து வெளில போறேன்னு சொல்லிடுவாரோ? டி.விய உடைத்த மாதிரி இதுக்கு எதையாவது உடைச்சுடாம!

திமுகவை அழிக்கணும் சொன்னவன் எல்லாம் காணாம போய்ட்டான்டானு பாலிடிக்ஸ்க்கு வைகை புயல் Re-entry குடுத்துருக்காரே

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

எதிர்த்தவ மட்டுமா, கூடவே இருந்தவனு அடையாளம் தெரியாம போய்ட்டா. Best Example திரைத்துறையில் இருந்து காணாமல் போன வடிவேலு. தேர்தலிலும் 2011 ரிஸல்ட் வந்துடப் போகுது! பிரேமலதாவுடன் மேடையில் இருக்கும்போது கப்பல் கதை வருமா?

# ஹிந்துக்களின் வழிபாட்டைத் தடுக்கும் HR-CE

– ராயன்

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி அருகே இருப்பது ஏரிக்குப்பம் தாயார் சாயா தேவியுடன் சனீஸ்வர பகவான் எந்திர வடிவில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். கடந்த மார்ச் 6 ல் சனிப்பெயர்சி நிகழ்வும், அதற்கான பரிகார பூஜைகள் செய்தால் தங்கள் வாழ்க்கை எளிதாகும், பிரச்சினைகள் அகலும் என்ற நம்பிக்கையில் பக்தர்கள் ஏரிக்குப்பம் வந்து அங்குள்ள தீர்த்தக்குளத்தில் நீராடி பரிகாரம் செய்வது வழக்கம்.

ஆனால் அங்கிருக்கும் தீர்த்த குளமோ உரிய பராமரிப்பின்றி பாசி படிந்து துர்நாற்றம் வீசுகிறது என பக்தர்கள் ஆதங்கம் தெரிவிப்பது ஒருபக்கம் என்றால், சனிப்பெயர்ச்சியில் நீராடுவதை தடுக்க அறநிலையத்துறையினர் குளத்தை பூட்டு போட்டுச் சென்றதை பார்த்து பக்தர்கள் அதிர்ச்சியடைந்தனர். சனிப்பெயர்ச்சி நிகழ்வு நடக்கும் போதெல்லாம் கோட்டாட்சியர் தலைமையில் கூட்டம் நடக்கும், அப்போது தீயணைப்புத்துறை, மின்சாரத்துறை, மருத்துவத்துறை, ஆம்புலன்ஸ், குடிநீர் வழங்கல் என அனைத்து துறை சார்ந்தவர்கள் கலந்து கொண்டு விழாவுக்கான ஏற்பாடுகளை செய்யவார்கள். ஆனால் அந்த கூட்டமே நடக்கவில்லை என்பதோடு குளத்திற்கு செல்ல முடியாமல் பூட்டு போட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது என அந்த கோயில் கும்பாபிஷேகம் நடக்க காரணமானவரும், ஏரிக்குப்பம் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் சீனிவாசன் குறிப்பிடுகிறார்.



கோயிலை பராமரிக்க வேண்டிய அறநிலையத்துறையே எந்தளவுக்கு முனைந்து ஹிந்துக்களின் வழிபாட்டை தடுக்கும் அப்பட்டமான செயலில் ஈடுபடுவதைக் கண்டு பக்தர்கள் கண்டு மனம் வெதும்புகிறார்கள்.

**செய்தி:2**

***பூதலிங்கசுவாமி ஆரத்திக்குத் தடை:***

கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டியில் கடந்த மார்ச் 3ம் தேதி பௌர்ணமி அன்று பூதப்பாண்டி பூதலிங்கசுவாமி பக்தர்கள் சேவா சங்கம் மற்றும் பாரத சன்னியாசிகள் சங்கம் சார்பில் மகா ஆரத்தி நிகழ்ச்சியை ஏற்கனவே திட்டமிட்ட தெப்பகுளத்தில் நடத்தாமல் கலையரங்கில் நடந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

சரி ஏன் கோயிலின் தெப்பக்குளத்தில் நடத்த முடியவில்லை என்றால், அங்கு தான் இருக்கு HR-Cஉன் வேலை இருக்கு. மஹா ஆரத்தி நிகழ்ச்சிக்கு ஊர்வலமாகச் சென்ற போது காவல்துறை தடுத்தது. தெப்பக்குளத்தில் நீங்கள் நடத்துவதற்கு அனுமதியில்லை என சொன்ன போது கோயிலில் நடக்கும் நிகழ்ச்சிக்கு காவல்துறையிடம் அனுமதி வாங்க வேண்டிய அவசியமில்லை என ஹிந்து அமைப்புகள் வாதிட்டனர். அதற்கு காவல்துறை, இந்த மஹா ஆரத்தி நிகழ்ச்சி தெப்பக்குளத்தில் நடந்தால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை வரும். இது புதிதாக கோயில் வழிபாட்டில் நுழைக்கும் நிகழ்ச்சி என அறநிலையத்துறை சார்பாக காவல்துறையிடம் மனு கொடுத்திருக்கிறது.

ஒரு கோயிலில் அது சார்ந்த நிகழ்ச்சி, அதுவும் ஹிந்து ஆன்மிக சன்னியாசிகள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி சட்டம் ஒழுங்கு பிரச்சினை வரும், எனவே அதை தடுக்க வேண்டும் என்று அந்த கோயிலை நிர்வகிக்கும் துறையே புகார் மனு கொடுத்திருப்பது அயோக்கியத்தனம் என ஸ்ரீ டிவிக்கு பேட்டியளித்த திரு. இறச்ச குளம் காளியப்பன் தெரிவித்தார். நான் சிறுவயதிலிருந்து கோயிலுக்குச் சென்று வருகிறேன், அப்போதெல்லாம் சங்கடஹர சதுர்த்தி அல்லது பிரதோஷம் பூஜை இவ்வளவு விமர்சையாக நடந்தது இல்லை. இப்போது கோயிலுக்கு வருமானம் வருவதே இந்த நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் தான் எனும் போது, அதுவும் புதிதாக நுழைக்கப்பட்ட ஆன்மிக நிகழ்வு தானே என பதிலடி தந்தார்.

சன்னியாசிகள் பெருமளவில் கலந்து கொண்டதால் மாற்று ஏற்பாடாக கலையரங்கில் மஹா ஆரத்தி விழாவை நடத்தினோம். அதற்கு பெரியளவில் பக்தர்கள் கலந்து கொண்டதோடு, திமுக அரசின் ஹிந்து விரோத செயல்பாட்டைக் கண்டித்தனர் என்றும், கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து ஹிந்து வழிபாட்டை முடக்கும் வேலையை இப்பகுதியின் அமைச்சர் மனோ தங்கராஜ் தான் முக்கிய காரணம் என்றும் காளியப்பன் நம்மிடம் தெரிவித்தார்.

மேற்சொன்ன இரண்டு செய்திகளையும் பார்க்கும் போது கோயிலை நிர்வகிக்கும் அறநிலையத்துறையே, ஹிந்து பக்தர்களின் வழிபாட்டைத் தடுக்கும் வேலையில் முன் வந்து ஈடுபடுவது "பச்சை" அயோக்கியத்தனம் என ஹிந்துக்கள் மனதுக்குள் குமுறுவதை விட்டு, வரும் தேர்தலில் ஓட்டு என்ற ஆயுதம் மூலம் பதிலடி தருவதை விட வேறு வழி இருக்கிறதா?

# கச்சா எண்ணெய் அரசியல்

– ரமேஷ்

**அமெரிக்கா அனுமதி தந்ததா**

ரஷ்ய எண்ணெயை வாங்க இந்தியாவுக்கு ஏன் அமெரிக்க அனுமதி தேவைப்பட்டது என்று எல்லோரும் கேட்கிறார்கள். இது தவறான கேள்வி. இந்தியா ஒருபோதும் கேட்கவில்லை. அமெரிக்கா அந்த விலக்கைத் தானாகவே வழங்கியது. மார்ச் 5, 2026 அன்று ஒருதலைப்பட்சமாக OFAC பொது உரிமம் 133 வாஷிங்டனால் வெளியிடப்பட்டது. ஏனென்றால், ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டபோது, இந்த உலகத்திற்கு இந்தியாவின் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடர்ந்து இயங்க வேண்டியிருந்தது.

**உலக எரிபொருள் சப்ளையில் இந்தியா**

இந்தியா சுத்திகரிப்பு செய்வதை நிறுத்தினால், இதோ பின்வரும் எல்லாம் நின்றுவிடும்:

1. இந்தியா தினமும் 1.28 மில்லியன் பேரல்கள் சுத்திகரிக்கப்பட்ட டீசல், ஜெட் எரிபொருள், பெட்ரோல் போன்ற எரிபொருட்களை 50-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.
2. நடுத்தர வடிகட்டப்பட்ட எரிபொருட்களை ஏற்றுமதி செய்வதில் இந்தியா உலகின் 4-வது பெரிய நாடாகும்.
3. தென்கிழக்கு ஆசியா முழுவதும் இந்திய டீசலில் இயங்குகிறது.
4. ஐரோப்பாவின் விமான எரிபொருள் விநியோகம் இந்திய சுத்திகரிப்பு நிலையங்களைச் சார்ந்துள்ளது.
5. 2024-25ல் இந்தியா 45 பில்லியன் டாலர் மதிப்பிலான பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்தது.

எனவே இந்த முடக்கம் இந்தியாவை



மட்டும் பாதிக்காது. அது ஒரு உலகளாவிய எரிபொருள் விநியோக சங்கிலியை நிறுத்திவிடும். அமெரிக்காவிற்கு ஆதரவான ஐரோப்பாவை இந்த எரிபொருள் நெருக்கடியில் இருந்து காப்பாற்ற இந்தியாவின் உதவி தேவைப்பட்டதால் இந்த கரிசனம் அமெரிக்காவுக்கு வந்தது.

**புள்ளி விவரங்கள் காட்டும் உண்மைகள்**

இப்போது உண்மையான எண்களைப் பாருங்கள்.2022 ல், உக்ரைன் போருக்கு முன்பு, ரஷ்யா இந்தியாவின் எண்ணெயில் 2% முதல் 4% வரை வழங்கியது. 2024 வாக்கில், அந்த எண்ணிக்கை 40% ஐத் தாண்டி 168 பில்லியன் டாலர் மதிப்பிலான ரஷ்ய கச்சா எண்ணெய் இந்தியாவால் வாங்கப்பட்டது.

**2022 ல், உக்ரைன் போருக்கு முன்பு, ரஷ்யா இந்தியாவின் எண்ணெயில் 2% முதல் 4% வரை வழங்கியது. 2024 வாக்கில், அந்த எண்ணிக்கை 40% ஐத் தாண்டி 168 பில்லியன் டாலர் மதிப்பிலான ரஷ்ய கச்சா எண்ணெய் இந்தியாவால்**

பிப்ரவரி 2026ல் மேற்கத்திய நாடுகள் மாஸ்கோ மீது பொருளாதாரத் தடைகளை விதித்துக் கொண்டிருந்தபோது, அமெரிக்க அழுத்தம், வரி அச்சுறுத்தல்கள் போன்ற சூழ்நிலைகளிலும், இந்தியாவின் மொத்த கொள்முதலில் 30% அளவில் ரஷ்ய கச்சா எண்ணெயை வாங்கிக் கொண்டிருந்தது. இந்தியா ஒருபோதும் ரஷ்ய கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்தவில்லை.

**சரணடைதலா, வெற்றியா?**

வதனார், குஜராத் ரோஸ்நெஃப்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான நயாரா எனர்ஜி, இந்திய - ரஷ்யக் கூட்டு முயற்சியால் ஒவ்வொரு நாளும் 4,00,000 பேரல்கள் கச்சா எண்ணெய் சுத்திகரிக்கப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒரு வர்த்தக ஒப்பந்தம், இங்கிலாந்துடன் ஒரு வர்த்தக ஒப்பந்தம், நியூசிலாந்துடன் ஒரு வர்த்தக ஒப்பந்தம், 100 பில்லியன் டாலர் முதலீட்டுடன் கூடிய ஒரு ஐரோப்பிய சுதந்திர வர்த்தகப் பகுதி (EFTA) வர்த்தக ஒப்பந்தம் இவை அனைத்தையும் செய்துகொண்டே ரஷ்ய எண்ணெயை வாங்கும்போது அதைச் சரணடைதல் என்று எப்படி கூற முடியும்?

இது இந்தியாவின் சரணடைதல் அல்ல. அது பேச்சுவார்த்தை. சிலர் இதை பலதரப்பு கூட்டணி என்கிறார்கள். சிலர் இதை ஜுகாட் (Jugaad) என்கிறார்கள்.

பெயர் ஒரு பொருட்டல்ல. விளைவுதான் முக்கியம். எல்லாப் பக்கங்களிலும் விளையாடி, எல்லா ஒப்பந்தங்களையும் வெல்லுவது எப்படி



சரணடைதல் ஆகும்?

**டெக்ஸஸ் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை**

உலகிலே மிக அதிகமான அளவில் கச்சா எண்ணெய் இருப்பு வைத்துள்ளது வெனிசுலா நாடு. ஆனால் வெனிசுலா எண்ணெயினை சுத்திகரிப்பது கடினமான பணி, அடர்த்தி அதிகமான அந்த எண்ணெயினை வழமையான சுத்திகரிப்பு ஆலைகளால் செய்யமுடியாது அதற்கு தனி தொழில்நுட்ப ஆலை வேண்டும். வெனிசுலா எண்ணெய் முன்பு ரஷ்ய உதவியால் சுத்திகரிக்கபட்டது இப்போது வேறு வழியில்லாததால் வெனிசுலா எண்ணெய் சுத்திகரிப்புக்கு மாற்று வழியாக இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்தது அமெரிக்கா.

அமெரிக்கா இந்தியாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தபடி இந்தியர்கள் அமெரிக்காவில் எல்லா தொழிலும் தொடங்க முடியும். இந்த வாய்ப்பில் அமெரிக்காவில் கால்பதிக்கும் ரிலையன்ஸ், 300 பில்லியன் முதலீட்டில் வெனிசுலா எண்ணெயினை சுத்திகரிக்கும் பிரம்மாண்டமான தொழிற்சாலையை டெக்சஸில் அமைக்கின்றது, எண்ணெய் துறையில் உலகளாவிய நிலையில் ஏழு அமெரிக்க ஐரோப்பிய கம்பெனிகளும் சில ரஷ்ய கம்பெனிகளுமே ஆதிக்கம் செலுத்திய நிலையில் முதல் முறையாக இந்திய நிறுவனம் ஒன்று சாதிக்கத் துவங்கியிருக்கின்றது.

**எண்ணெய் சுத்திகரிப்பில் உலக நாயகன்**

உலகின் மிக அதிநவீன மற்றும் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் எது (World's Most complex and biggest refinery) என்று டிஎன்பிஎஸ்சி தேர்வில் சமீபத்தில் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கான விடை, இந்தியாவில் குஜராத் ஜாம்நகர் சுத்திகரிப்பு நிலையம் என்பதுதான். "Complexity" என்பது அந்த ஆலை எவ்வளவு கடினமான கச்சா எண்ணெயை கையாள முடியும் என்பதையும், அதிலிருந்து எவ்வளவு அதிகப்படியான மதிப்பைப் பிரித்தெடுக்க முடியும் என்பதையும் தீர்மானிக்கிறது. ஜாம்நகர் போன்ற அதீத திறன் கொண்ட நிலையங்கள் மற்ற சாதாரண ஆலைகளால் கையாள முடியாத தரம் குறைந்த மற்றும் அதிக அசுத்தம் கொண்ட கச்சா எண்ணெயையும் மிக எளிதாக சுத்திகரிக்கும் ஆற்றல் கொண்டவை. சர்வதேச சந்தையில் கிடைக்கும் தரம் குறைந்த கச்சா எண்ணெய் மிகவும் மலிவான விலையில் கிடைப்பதால் அது குறைந்த செலவில் வாங்கப்படுவதால் பெருமளவு லாபம் ஈட்டப்படுகிறது. இந்த சுத்திகரிப்பு பணி மிகவும் பிரம்மாண்டமான அளவில் நடைபெறுவதால் இந்தியாவிற்கு மிகப்பெரிய வணிக வாய்ப்பு கிடைக்கிறது. மற்ற நாடுகள் விலை உயர்ந்த கச்சா எண்ணெயை நம்பியிருக்கும் நிலையில், இந்தியா தனது தொழில்நுட்ப பலத்தால் மலிவான கச்சா எண்ணெயை செல்வமாக மாற்றி உலக சந்தையில் தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது. இந்தத் தொழில்நுட்ப வலிமையின் காரணமாக இந்தியா உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் தனக்குத் தேவையான கச்சா எண்ணெயை தடையின்றி வாங்க முடிகிறது. இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட தரமான எரிபொருட்களை இந்தியா மீண்டும் உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யும் வலிமையைப் பெற்றுள்ளது. இன்று உலகில் எந்த மூலையில் கிடைக்கும் கச்சா எண்ணயையும் சுத்திகரிக்கும் ஆற்றல் கொண்டது இந்தியா என்பது ஒரு மறுக்க முடியாத உண்மை.

**நாட்டின் எரிபொருள் கையிருப்பு**

"இந்தியாவில் 25 நாட்களுக்குப் போதுமான கச்சா எண்ணெய் இருப்பும், 25 நாட்களுக்குப் போதுமான பெட்ரோல் மற்றும் டீசல் இருப்பும் உள்ளன." இவ்விரண்டையும் சேர்த்துப் பார்க்கையில், மொத்தம் 50 நாட்களுக்குப் போதுமான அளவு எரிபொருள் எப்போதும் கையிருப்பில் உள்ளது.

**பெட்ரோல் சிலிண்டர் தட்டுப்பாடு**

உண்மைகள் இவ்வாறு இருக்க, இல்லாத பெட்ரோல் தட்டுப்பாட்டை சில நாட்கள் உண்டாக்கித் தங்கள் அரிப்பைத் தீர்த்துக் கொண்டன எதிர்க்கட்சிகள். உண்மையில் கமர்சியல் எரிவாயு சிலிண்டர் மாத்திரமே தட்டுப்பாடு. வீட்டிற்கு உபயோகிக்கும் சிலிண்டருக்கு எந்தத் தட்டுப்பாடும் இல்லை. தேர்தலை கருத்தில் கொண்டு வேண்டுமென்றே தட்டுப்பாட்டை ஏற்படுத்தி மத்திய அரசிற்கு கெட்ட பெயரை ஏற்படுத்தி ஊர் ஊராக எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினார் தமிழக முதல்வர் முக ஸ்டாலின். கச்சா எண்ணெய் விலை 110 டாலரை தொட்டதால், உலகம் முழுக்க பல நாடுகளில் பெட்ரோ டீசல் விலைகள் வரலாறு காணாத உச்சத்தைத் தொட்ட நிலையில் இந்தியாவில் மட்டும் அதே விலையில் பெட்ரோல் டீசல் விற்கப்படுகிறது என்ற உண்மையைக் கூடத் திட்டமிட்டு மறைத்தன எதிர்க்கட்சிகள்.

இந்தியாவின் மரபு சாரா ஆற்றல் மின் உற்பத்தியை அதிகரித்து பெட்ரோலிய பொருட்களுக்கு இறக்குமதியை சார்ந்திருப்பது ஒவ்வோரு ஆண்டும் கொஞ்சம் கொஞ்சமாக் குறைந்து கொண்டே வர வேண்டும். அதற்கான முயற்சிகள் இன்னும் பெரும் பாய்ச்சலில் நடக்க வேண்டும் என்பதையும் இந்த தருணம் நமக்கு உணர்த்தி இருக்கிறது.

# நேபாள தேர்தல் முடிவு இந்தியாவிற்கு சாதகமா? பாதகமா?

-வெள்ளய்யன்




நேபாளத்தில் 2025 செப்டம்பரில் நடைபெற்ற ஜென் சீ ( Gen Z ) தொடர் போராட்டங்களால் நேபாளப் பிரதமர் கட்க பிரசாத் சர்மா ஒலி தலைமையிலான சீன ஆதரவு கம்யூனிஸ்ட் அமைச்சரவை பதவி விலகியது. இதனால் முன்னாள் நேபாள உச்ச நீதிமன்ற நீதிபதி சுசீலா கார்கி 2025 செப்டம்பர் 12 அன்று நேபாளத்தின் இடைக்காலப் பிரதமராகப் பதவியேற்றார். அதைத் தொடர்ந்து, மார்ச் 5, 2026ல் 275 இடங்களுக்கான பாராளுமன்றத் தேர்தலில், ராப் பாடகர் பலேந்திர ஷா தலைமையிலான இராஷ்ட்ரீய ஸ்வதந்த்ரா கட்சி, 182 இடங்களை வென்றது.

**இந்தத் தேர்தலின் பின்னணி என்ன ?**

4 செப்டம்பர் 2025 இல் நேபாள அரசு, தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் புதிய விதிகளின் கீழ் டுவிட்டர், யூடியூப், லிங்க்ட்இன், ரெடிட், சிக்னல் மற்றும் ஸ்னாப்சாட், முகநூல், யூடியூப் உள்ளிட்ட 26 சமூக ஊடகத் தளங்கள், பதிவு செய்யத் தவறியதற்காக, அவற்றின் சேவையை நிறுத்த உத்தரவிட்டது. அமெரிக்க நிறுவனங்களை முடக்க வேண்டும், கம்யூனிஸ்ட் அரசின் ஊழல்களை மறைக்க வேண்டும் என்ற நோக்கம் இருந்தாலும், இந்த நிறுவனங்கள், அமெரிக்காவின் அரசியல் கணக்குகளை முன்னெடுக்க பயன்படுத்தப்படுகிறது என்பதில் சந்தேகமில்லை. போராட்டம் வன்முறை திசையில் திரும்பியவுடன், சமூக வலைத்தள முடக்கங்களை நேபாள அரசு வாபஸ் பெற்றது. ஆனால் போராட்டம் முடியவில்லை. ஊழல், நிர்வாகச் சீர்கேடு, அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் செல்வக் குவிப்பு, அதிகார துஷ்பிரயோகம் என்று போராட்ட நோக்கம் விரிந்தது. இறுதியாக செப்டம்பர் 9 அன்று, கம்யூனிச பிரதமர் சர்மா ஒலியும் அவரது அமைச்சரவையும் இராஜினாமா செய்தது.

இந்தியாவின் ஆதிக்கத்தையும், சீனாவின் ஆதிக்கத்தையும் கட்டுப்படுத்தி, இவ்விரு நாடுகளுக்கு நெருக்கடி கொடுக்க அமெரிக்க உதவியுடன் நடத்தப்பட்ட போராட்டம் இது. சமூக ஊடகங்களைக் கொண்டு,ஆட்சி மாற்றத்தை வங்கதேசம், இலங்கை ஆகிய அண்டை நாடுகளில் நடத்திய அமெரிக்க சதியின் தொடர்ச்சியே, இந்த ஆட்சி மாற்றம், நேபாள இளைஞர்களை சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாக்கி, அதற்காக அவர்களைப் போராட வைத்து, அமெரிக்கா அதன் நவீன யுக்தியை வெற்றிகரமாக அரங்கேற்றியது. இப்போது நேபாளத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ஸ்வதந்த்ரா கட்சிக்கு வெற்றி தேடித் தந்த பலேந்திர ஷா, ஒரு ராப் பாடகர். மேற்கத்திய இசையும், மேற்கத்திய வாழ்வியலையும், சிந்தனை மரபுகளையும் பரப்பும் சமூக ஊடகங்களின் ஒத்திசைவே, இந்த வன்முறைப் போராட்டம்.

இப்போது பெரும்பான்மை இடத்தைப் பெற்றுள்ள இராஷ்ட்ரிய ஸ்வதந்த்ரா கட்சியின் தலைவர் பலேந்திர ஷா, இந்தியாவில் பட்டப்படிப்புகளைப் படித்தாலும், அவர் கடந்தகால நடவடிக்கைகள், இந்தியாவிற்கு எதிராகவே இருந்து வந்துள்ளது. ராப் பாடகரான இவர் 2022 ஆம் ஆண்டு மே மாதம் நடந்த தேர்தலில் காத்மண்டு மேயராகத் தேர்வு செய்யப்பட்டார். இவர் ஜனவரி 2026 அன்று இப்பொறுப்பை இராஜினாமா செய்து பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் மேயராக இருந்த காலத்தில், இந்தியாவின் சில பகுதிகளை நேபாலுடன் சேர்த்து, கிரேட்டர் நேபாள் என்ற வரைபடத்தை வெளியிட்டார். இந்தியத் திரைப் படங்களுக்கு காத்மண்டு திரையரங்குகளில் தடை விதித்தார். இந்நிலையில், அவர் மனைவி பயணம் செய்த காரை காவல் துறையினர் செப்டம்பர் 2023 அன்று சோதனை செய்தனர். காத்மண்டு மாநகராட்சி போர்டு இருக்கும் வாகனங்களை சோதனை செய்தால், நேபாளப் பாராளுமன்றத்தைக் கொளுத்துவேன் என்று மிரட்டினார். பிரசவ வலியில் அவதிப்பட்ட அவர் மனைவி சென்ற காரை சோதித்தனர் அதிகாரிகள் என்று அவர் உதவியாளர் குற்றச்சாட்டை முன் வைத்தார். இந்த சம்பவத்திற்கு ஒரு வாரம் முன்பே அவர் மனைவியின் பிரசவம் முடிந்து விட்டது என்று தெரிய வந்தது.

பொதுவாக, நேபாள அரசியல் தலைமையில் இருப்பவர்கள், நேபாள மொழி பேசும் மக்களாகத்தான் இது வரை இருந்துள்ளனர். ஆனால் பலேந்திர ஷா மைதிலி மொழி பேசும் மாதேஷி பகுதியைச் சேர்ந்தவர். இந்தப் பகுதி, இந்திய எல்லையை ஒட்டிய பகுதியாகும். மேலும்



இவர் பெற்றோர்கள் பொத்தர்கள். நேபாளத்தில் போராட்டம் முடிந்தவுடன், பலேனைப் பிரதமராக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. நேபாளப் போராட்டம் கம்யூனிஸ்ட் ஆட்சியைத் தூக்கி எறிந்தது. சீனாவின் செல்வாக்கை சரித்தது. நேபாள் போராட்டத்தின் பின்னணியில், அமெரிக்க சமூக ஊடகங்கள் செயல்பட்டன. இவையே, பலேன் ஷா பிரச்சாரத்திற்கு உதவியது.

இந்த நிகழ்வுகளின் அடிப்படையில், பலேன் ஷா அமெரிக்காவிற்கு நெருக்கமானவர் என்று தெரிகிறது. இவர் ராப் பாடகராக இருப்பதால், அமெரிக்கா எதிர்பார்க்கும் நாகரிக மாற்றத்தை இவரால் கொண்டு வர முடியும். இந்தியா, சீனா ஆகிய நாடுகளைக் கட்டுப்படுத்த நேபாளத்தை நிரந்தரத் தளமாகக் கொண்டு அமெரிக்கா செயல்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இந்தியாவிற்கு எதிராக, நம் அண்டை நாடுகளைத் திருப்பும் அமெரிக்க சதியின் தொடர்ச்சியே இந்த ஆட்சி மாற்றம். பாடகர்கள், திரை நட்சத்திரங்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என்று அரசியலிற்கே தொடர்பில்லாதவர்களை, விருதுகள் வாயிலாகவும், சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும் பிரபலமாக்கி, அரசுகளை மாற்றுவதும், கருத்தியலை உருவாக்குவதும் பல தசாப்தங்களாக அமெரிக்கா உலகம் முழுவதும் செய்து வருகிறது. இந்த மாற்றங்களால் பயன் அடையும் அமெரிக்க நிறுவனங்கள், அமெரிக்காவின் அதிபராக யார் இருக்க வேண்டும் என்று முடிவு செய்கின்றனர். இந்த நிறுவனங்களில் போப் போன்ற மத அமைப்புகள் முதலீடு செய்து வந்தனர். இப்போது, சீனா போன்ற நாடுகளும், இந்த வியாபார நிறுவன அஸ்திரத்தை பயன்படுத்துகிறது.

அண்மைகாலமாக, நேபாளத்தில் கிறிஸ்தவ மதமாற்றம் அதிகரித்து வருகிறது. இந்த மதமாற்றத்தை நேபாள ஹிந்துக்கள் எதிர்த்து வருகின்றனர். சமீபத்தில் நடந்த ஜென் - Z போராட்டத்தில், கிறிஸ்தவர்களின் தாக்கம் வலுவாக இருந்தது. நேபாளத்தில் மதமாற்றத்தைத் தடுக்க, நேபாளத்தை ஹிந்து நாடாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இந்தக் கோரிக்கையை வலுப்பெறாமல் பார்த்துக் கொண்டனர் போராட்டத்தின் பின்னணியில் இயங்கியவர்கள்.

வங்கதேசத்தில், ஷேக் ஹசீனாவிற்கு எதிரான போராட்டம், வங்கதேச மீட்புப் போராளிகளின் வாரிசுகளுக்கு இட ஒதுக்கீடு என்ற கோரிக்கையை முன் வைத்து தொடங்கியது. போராட்டம் வலுப்பெற்று, கோரிக்கைகள் நிறைவேறினாலும், ஆட்சியாளரைத் துரத்திய பின்னரே போராட்டம் ஓய்ந்தது. இலங்கையிலும், விலைவாசி ஏற்றம், குறிப்பாக பெட்ரோல் விலைவாசி ஏற்றத்திற்கு எதிராகத் தொடங்கிய போராட்டம், ஆட்சி மாற்றத்தில் முடிந்தது. நேபாளத்திலும், சமூக வலைத்தளத் தடைக்கு எதிராகத் தொடங்கப்பட்ட போராட்டம், ஆட்சி மாற்றத்தில் முடிந்தது. இந்தியாவிலும் பலமுறை, இதே டெம்ப்லேடை, எதிர்கட்சிகளின் உதவியுடன் அரங்கேற்ற முயன்ற அன்னிய சக்திகள் தோல்வியை சந்தித்தனர்.

வங்கதேசத்தில், அமெரிக்காவின் அடிமையான யூனஸ், அதிகாரத்தில் அமர்த்தப்பட்டார். சீன ஆதரவாளரான அனுரா திஸநாயகா இலங்கை அதிபரானாலும், அமெரிக்காவின் அதிகாரமே இலங்கையில் ஓங்கியுள்ளது. இப்போது, இந்திய எதிர்ப்பு மன நிலையைக் கொண்ட ராப் பாடகரின் பிடியில் நேபாளம் சென்றுள்ளது. இது இந்தியாவிற்கு ஆபத்து. இருப்பினும், மாதேசிப் பகுதியைச் சார்ந்தவர் நேபாளப் பிரதமராகியுள்ளதால், அதை இந்தியா தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வாய்ப்புள்ளது. இந்திய எல்லையை ஒட்டியுள்ள இந்தப் பௌகிதியை, நேபாள கம்யூனிஸ்டுகளின் பிடியில் முழுமையாகச் சிக்கிவிடாமல் இருக்க, பல இராஜதந்திர நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டது. இந்தப் பகுதி மக்களுக்கும், இந்தியப் பகுதியிலுள்ளவர்களுக்கும் நெருக்கமான தொடர்பு உள்ளது. இவைகளை பயன்படுத்தி, நேபாள- இந்தியா உறவை மேம்படுத்த இந்திய அரசு முயற்சிக்கும் நடவடிக்கையில் ஈடுபட வாய்ப்புள்ளது. பலேந்திர ஷா, காத்மண்டு மேயராக இருந்த காலத்தில், பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து பிரபலமானார். அவரது அதிரடி நடவடிக்கை பல சிக்கல்களை ஏற்படுத்தியது. தேசிய அரசியலில் நீடிக்க பலேன் அவரை மாற்றிக்கொள்ளாவிட்டால், உள்நாட்டுக் கலகத்தை ஏற்படுத்தி, கம்யூனிஸ்ட் கட்சியின் வாயிலாக சீனா தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தும். இதை முறியடிக்க, நேபாள அரசை, இந்தியா சாதகமாக்கிக் கொள்ளத் தாமதித்தால், அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்திய அரசு இதை உணர்ந்து விரைந்து செயல்பட வேண்டும்.

# செய்
# சிந்த

**செய்தி:**

**பிராட்வே, டான்பாஸ்கோ பள்ளியில் ரம்ஜான் தொழுகை - அரசின் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறை அரசாணை என்னாச்சு?**

**சிந்தனை**

தொழுகை நடத்தியது முஸ்லீம்கள். இடம் கொடுத்தது கிறிஸ்தவர்கள். இருவருக்கும் பொறுந்தாது பொதுச் சட்டம். ஹிந்துக்களைக் கல்விச் சேவையிலிருந்து ஒழிக்கவே சட்டங்கள். வேற்று மதத்தினருக்கு சலுகை கொடுத்து, ஹிந்துக்களை முடக்கும் அரசு.

**செய்தி:**

**தென்காசி காசி விஸ்வநாதர் ஆலயத்தில் பக்தர்கள் திருவிளக்கு பூஜை நடத்த அனுமதியில்லை, புதிப்பித்ததாக சொன்ன தேரை ஏன் புதுப்பிக்கவில்லை என்று கேட்டால் கைது**

**சிந்தனை**

இதே கோயிலில் சினிமாப் பாட்டுப் போட்டு ஆடிய அறநிலையத்துறைக்கு, திருவிளக்கு பூஜையும், திருவாசக முற்றோதலும் கசக்கும். தேர் கவிழ்ந்தால் சாவது ஹிந்து தானே! தேரோட்டத்தை நிறுத்த காரணமும் கிடைக்கும். கும்பாபிஷேக மோசடியில் கலசம் விழுந்ததற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?

**செய்தி:**

**திருநரையூரில் கிறிஸ்தவ மதமாற்றத்தை எதிர்த்தவர் கைது**

**சிந்தனை**

நான் கிறிஸ்தவன் என்று சொல்லும் துணை முதல்வர், சனாதனத்தை அழிக்க வேண்டும் என்கிறார். தெளிவாக ஹிந்துக்களை அழிப்பேன் என்று சொல்லிவிட்டார்கள், காவல்துறை இந்தியச் சட்டத்தைப் பின்பற்றாமல், தி.மு.க வின் ஏவலாளாகச் செயல்படுவது சட்ட விரோதம்.

**செய்தி:**

**ஹிந்து நியூஸ் யூடியூபர் பவித்**
**போலீஸ்**

**சிந்தனை**

உத்தமபாளையம் அரசுப் ப
என பெயர் வைத்து வளைவ
இந்தியாவைப் படையெடுப்பே
பேசினால் தவறில்லை. தமி
காவல்துறையா?

**செய்தி:**

**சபரிமலை விவகார**
**வழிபாட்டு முறையே**
**பல்டியடித்த தேவசு**

**சிந்தனை**

ஹிந்து ஒற்றுமை
ஹிந்துத்துவம் பேசு
முஸ்லீம்களும், கி
கேரளாவில் க
மிகப்பெரும்பான்மை
விவகாரம், ஹிந்து
டது. ஹிந்துக்களை

# ...திகள்
# ...னைகள்

**செய்தி:**

**தமிழக ராஜ்யசபா நியமனங்கள் கிறிஸ்தவர்களைத் திருப்திபடுத்தும் திமுக காங்கிரஸ் கூட்டணி**

**சிந்தனை**

கிறிஸ்தவர்கள் கலவரம் செய்த மணிப்பூரில் காங்கிரஸுக்கு சேவை செய்தவர் கிறிஸ்டோபர் திலக். ஜோசப் விஜயை ஆதரிக்கும் கிறிஸ்தவர்களால் தோல்வி பயம் ஏற்பட்டுள்ளது. தாஜா செய்ய தி.மு.க கூட்டணியில் நான்கில் இரண்டு சீட் கிறிஸ்தவருக்கு. வழக்கம் போல அடியாட்களாகவே முஸ்லீம்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

**...ரனை கைது செய்த தமிழக**

...ள்ளிக்கு ஹாஜி கருத்த ராவுத்தர் ...ு அமைத்து ஏன் என்றால் தவறு ...போம் என்று உஸ்தாத் பீர்முகமது ...மிழக காவல்துறையா? தாலிபான்

**செய்தி:**

**சிலிண்டர் தட்டுப்பாடு உண்மையா? வதந்தியா?**

**சிந்தனை**

உண்மையென்றால், தமிழகத்தில் நடந்த தொடர் சிறார் பாலியல் சம்பவங்களின் தாக்கமும், கோவை பள்ளி மாணவர்கள் சத்துணவு உண்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சோகத்தின் தாக்கம் குறைந்தவுடன் பெட்ரோல் வினியோகம் சீரானது. தவறை மறைக்க, சாமானிய மக்களை ரோட்டில் நிற்க வைத்த கொடூர அரசு!

**...த்தில் பன்னெடுங்கால ...ப தொடர வேண்டும்; ...ம் போர்டு**

... ஏற்பட்டால், எல்லாக் கட்சியும் ...ும். இறை மறுப்புக் கொள்கையை ...றிஸ்தவர்களும் ஆதரிக்காததால், ...ம்யூனிஸ்டுகளை ஆதரிக்கும் ...ம ஹிந்துக்களே. சபரிமலை ...க்களின் கண்களைத் திறந்துவிட் ... ஏமாற்றவே இந்த அந்தர் பல்டி

**செய்தி:**

**நவோதய பள்ளிகளை அனுமதிக்க முடியாது - தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல்**

**சிந்தனை**

நவோதயா பள்ளிகளுக்கு இடம் ஒதுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டபின்னும், தமிழக அரசு இடம் தர மறுப்பது நீதிமன்ற அவமதிப்பு. பிரிவினை அரசியல் நடத்த மாணவர்களுக்கும் துரோகம், தேசத்திற்கும் துரோகம் செய்யும் தமிழக அரசு !

# படம் சொல்லும் பாடம்

- தொகுப்பு : சி.பாண்டிக்குமார்






# ஈரான் - இஸ்ரேல் சண்டை

- ரகுபதி



பிப்ரவரி மாதம் 26, அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரான் மீது வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் ஈரானின் சர்வாதிகார மதத் தலைவர் அலி கமேனி மரணமடைந்தார். இதற்கு ஈரான், இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் இருக்கும் அமேரிக்க இராணுவத் தளங்கள் மீது பதிலடித் தாக்குதல் நடத்தியது. உலகம் முழுவதும் இஸ்லாமிய பயங்கரவாதத்தை ஆதரித்து ஆயுதம் வழங்கும் செயலில் ஈரான் ஈடுபட்டதால் இந்த நடவடிக்கை என்றும், இப்படிப்பட்ட நாட்டின் கையில் அணு ஆயுதம் இருப்பது உலகிற்கே ஆபத்து என்று அமெரிக்கா தெரிவித்தது.

அமெரிக்காவின் இரட்டை கோபுரத்தையும், இராணுவத் தலைமையகமான பெண்டகனையும் தகர்த்த பின்லேடன் அடைக்கலம் புகுந்த நாடு பாகிஸ்தான். இந்தியா உட்பட பல நாடுகளில் நிகழும் பயங்கரவாதத் தாக்குதலில் நேரடித் தொடர்பு உள்ள நாடு பாகிஸ்தான். ஆனால் பாகிஸ்தான் அணுகுண்டு வைத்திருக்கிறதே! பாகிஸ்தானில் பயங்கரவாத முகாம்கள் இருக்கின்றனவே! பயங்கரவாதமும், அணு ஆயுதமும் தான் குற்றம் என்றால் பாகிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துமா? பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்யும் பாகிஸ்தானை கூட்டாளியாகக் கொண்ட அமெரிக்காவிற்கு பொது நியாயம் பேச அருகதையில்லை.

யார் இஸ்லாமிய உலகை தலைமைத் தாங்க வேண்டும் என்ற போட்டியில், அரபியர்கள், பாரசீகர்கள், துருக்கியர்கள், சிரிய உமயாத்கள் அடிப்படைவாதத்தை வளர்த்து வருகிறார்கள். இந்த நால்வரில் ஈரான் மட்டும் ஷியா பிரிவு முஸ்லீம்கள் ஆதிக்கம் மிகுந்தது. சுன்னி முஸ்லீம்களை அழிக்க ஷியா ஈரான் அமெரிக்காவுடன் சேர்ந்தது. அப்போது முஸ்லீம் ஒற்றுமையை ஈரான் மறந்தது. இப்போது, சுன்னி முஸ்லீம் நாடுகளில் அமெரிக்கா தன் வசம் ஈர்த்து, அங்குள்ள ஷேக்குகளுக்குப் பாதுகாப்பு வழங்கி ஈரானின் மண் ஆசைக்கு முட்டுக்கட்டையாகியுள்ளது. பலவீனமான சுன்னி பகுதிகளைப் பாதுகாக்க அமெரிக்கா உதவுவதால், ஈரானின் திட்டம் பலிக்காமல் போனது. இஸ்ரேலில் யூதர்கள் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்திய நேரத்தில், ஹமாஸுக்கு ஆதரவாக களமிறங்கியது ஈரான். ஹமாஸோ சுன்னி இஸ்லாமிய குழு! இருப்பினும், இஸ்லாமிய உலகின் காப்பாளனாகத் தன்னை நிலை நிறுத்த, சுன்னி நாடுகள் முன்வரவில்லை, அவர்கள் அமெரிக்க அடிமைகள், நானே காப்பாளன் என்று இஸ்லாமியத் தலைமைக்கு துண்டு போட்டது ஈரான்.

ஆக, இஸ்லாமிய அடிப்படைவாதத்தையும், பயங்கரவாதத்தையும் பயன்படுத்தி மதத் தலைமையைப் பிடிக்க உலக முழுவதும் தலைமை ஏற்கத் துடிக்கிறது ஈரான். இஸ்லாமிய அடிப்படைவாதத்தைக் காட்டி, உலகத்திற்கு அச்சுறுத்தல் என்று, பயங்கரவாதத் தொழிற்சாலையான பாகிஸ்தானை உற்ற நண்பனாக வைத்துக்கொண்டு அமெரிக்கா பொது நியாயம் பேசுகிறது. இதைவிட வேடிக்கை என்னவென்றால், ஈரான் போரில் வெற்றி பெற ட்ரம்ப் பைபிள் பிரார்த்தனை நடத்துகிறார். அப்படியென்றால் இது கிறிஸ்தவ மதவாதமாகாதா? ஈராக் போரின்போது பைபிள் வசனங்களை அமெரிக்க அதிகாரிகள் போர் வீரர்களை ஊக்குவிக்க பயன்படுத்தினர். இருப்பினும், பாகிஸ்தான், துருக்கி உள்ளிட்ட நாடுகள் அமெரிக்காவிற்கு ஆதரவு தெரிவிக்கின்றன. எனவே இந்தப் போர் , மதத்தைப் பயன்படுத்தி அதிகாரத்தைப் பிடிக்கத் துடிக்கும் போர். இதில் இருவருக்கும் நியாய தர்மம் கிடையாது என்பதே உண்மை.

மதத்தை வைத்து மண்ணைப் பிடிக்கும் வெறியர்களால் இன்று உலகப் பொருளாதாரமும், அமைதியும், நல் வாழ்வும் சீரழிகிறது. இவர்கள் பயன்படுத்தும் ஆயுதங்களால், சுற்றுச்சூழல் மீள முடியாத அளவிற்கு பாதிக்கப்படுகிறது. தீபாவளிப் பட்டாசுக்காக அபாய மணியுடன் அலையும் கூட்டம் எந்த மணியையும் அடிக்காமல் அமைதியாகிவிட்டன. மத அடிப்படைவாதத்தை ஆயுதமாக்கி, மக்களை ஏமாற்றும் நாசகார கும்பல்களின் மண் ஆசைக்கும், பொன் ஆசைக்கும் உலகம் அழிகிறது என்பதே உண்மை!

# மத்திய-மாநில உறவா ? உருக்குலைப்பா ?

-இராமகிருஷ்ணன்

ஐக்கிய அரபு அமீரகத்தில் போர் தொடர்பாக போலி வீடியோ, வதந்திகளை பரப்பியதாக 19 இந்தியர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். ஐக்கிய அரபு அமீரக தலைநகர் அபுதாபி, துபாய் உள்ளிட்ட பகுதிகளில் அமெரிக்க விமானப்படை தளங்கள் செயல்படுகின்றன. இந்த தளங்களை குறிவைத்து ஈரான் ராணுவம் தொடர்ந்து ஏவுகணை, ட்ரோன் தாக்குதல்களை நடத்தி வருகிறது. மேலும் துபாய் விமான நிலையம், நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் புஜாயிரா துறைமுகத்தின் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தியிருக்கிறது. இந்நிலையில் அமீரகத்தில் வசிக்கும் வெளி நாட்டினரில் சிலர் போர் தொடர்பாக சமூக வலைதளங்களில் போலி வீடியோ, வதந்திகளை பரப்பியதாக புகார்கள் எழுந்தன.



இது தொடர்பாக 19 இந்தியர்கள் உட்பட 35 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். அவர்கள் மீது நீதிமன்றங்களில் விசாரணை நடைபெற உள்ளது. பாதுகாப்பு ரகசியங்கள், ராணுவ நடவடிக்கைகள் மற்றும் போலி வீடியோ, வதந்திகளை சமூக வலைதளங்களில் பரப்பக்கூடாது என்று அமீரக அரசு எச்சரிக்கை விடுத்திருந்தது. இதை மீறி போர் தொடர்பாக சமூக வலைதளங்களில் வீடியோ, பதிவுகளை வெளியிட்டோர் கைது செய்யப்பட்டு உள்ளனர். அவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஓராண்டு சிறை, ரூ.25 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும் என்றீறு அமீரக சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவிற்கு எதிராக பல காலமாக வெளிநாடுகளிலிருந்து இஸ்லாமிய அடிப்படைவாதிகளும், காலிஸ்தான் பிரிவினைவாதிகளும், கிறிஸ்தவ மிஷனரியால் தூண்டப்படுபவர்களும், இடதுசாரிகளும், திராவிடப் பிரிவினைவாதிகளும் வெறுப்புப் பதிவுகளை சமூக வலைத்தளங்களின் வாயிலாக பதிவிட்டு வருகின்றனர். இவர்களை நம் நாட்டின் எதிரிகள் லாவகமாகப் பயன்படுத்தியும் வருகின்றனர். ஆஸ்திரேலியா நேரம், சிங்கப்பூர் நேரம், இந்திய நேரம், மத்திய கிழக்குப் பகுதி நேரம், ஐரோப்பிய நேரம் அமெரிக்க கிழக்கு மற்றும் மேற்குக் கரை நேரங்கள் என்று பகுதிவாரியாக சமூக வலைத்தளங்களில் பதிவிடச் செய்து, நம் நாட்டில் அன்னிய சக்திகளுக்கு ஆதரவான கருத்தியலை உருவாக்குகிறார்கள். வெளிநாடுகளிலிருந்து சமூக வலைத்தளங்களிலிருந்து பதிவிடுவதால், இந்தியச் சட்டத்திலிருந்து தப்பி வருகிறார்கள்.

இப்படிப் பதிவிட்டு வந்தவர்கள், அவர்களது வழக்கமான அடிப்படைவாத இஸ்லாமிய ஆதரவுப்போக்கால், ஈரானுக்கு ஆதரவான பதிவை வெளிப்படையாகவும், உண்மைக்குப் புறம்பாகவும், உள்நோக்கத்துடனும் பதிவிட்டது, அவர்கள் வசிக்கும் ஐக்கிய அமீரகத்திற்கு எதிராக முடிந்து விட்டது. மத அடிப்படைவாதத்தில் தோய்ந்தவனுக்கு சூழல் புரியுமா, நியாயம் தெரியுமா? இந்திய எதிர்ப்பு நிலைபாட்டை எடுத்தால் தப்பலாம், பிழைப்பிற்குப் போன நாட்டை எதிர்த்தால் அவன் விடுவானா? இந்தியா துண்டாக வேண்டும், சாலைகளை மறித்து அரசை முடக்குங்கள் என்று வன்முறைக்கு அழைப்பு விடுத்த ஷர்ஜீல் இமாம், உமர் கலீதுக்கு ஆதரவாகவும், சீனாவிற்கும், பாகிஸ்தானுக்கும் ஆதரவாக போஸ்ட் போட்டது போல் முஸ்லீம் நாட்டில் போஸ்ட் போட முடியுமா? இதை உணராமல் பதிவிட்டு சிக்கிக் கொண்டனர். வேறு நாடுகளுக்கு எதிராக செயல்படும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கு இடம் கொடுத்தால், அது இஸ்லாமிய நாட்டையும் அழிக்கும் என்பதை அமீரகம் புரிந்து கொண்டால் சரி. அமீரக அரசால் கைது செய்யப்பட்ட இந்தியர்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையெனின், அவர்களுக்கு எந்த உதவியையும் இந்திய அரசு செய்யக் கூடாது. இதுபோன்று வெளி நாடுகளில் வேலைக்குச் சென்று, அங்கிருந்து அடிப்படைவாதத்தை வளர்க்கும் இந்தியர்களைக் காப்பது தற்கொலைக்கு ஒப்பாகும். நாட்டின் பாதுகாப்பிற்கு ஊறு விளைவித்தால், அமீரக அரசு கடும் நடவடிக்கை எடுப்பதுபோல் இந்திய அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியாவில் கருத்துச் சுதந்திரத்திற்கு கூவும் ஷரியா முட்டுக்கள், ஷரியா ஆட்சி நடக்கும் அமீரகத்தில் கருத்துச் சுதந்திரத்திற்கு குரல் கொடுப்பார்களா?

# பொருளாதாரம்

கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.

**டிரெண்ட் லைன் ஆங்கிள்**

டிரெண்ட் லைனில் மற்றொரு முக்கிய விசயம், டிரெண்ட் லைனின் ஆங்கிள் (Trend line angle).

சார்ட்டில் நாட்களை குறிக்கும் லைன் மற்றும் விலைகளை இணைக்கும் டிரெண்ட் லைன், இரண்டிற்கும் இடையே உள்ள சாய்வு (Angle), சந்தையில் இயங்கிக் கொண்டிருக்கும் வர்த்தகர்களின் மனநிலையை சுட்டிக் காட்டுவதாக இருக்கிறது.

சந்தை என்பது காளை மற்றும் கரடிகளுக்கு இடையே நடக்கும் போராட்டம் என்பது அனைவருக்கும் தெரியும். காளையின் கை ஓங்கி இருந்தால் அது ஏறும் சந்தை. கரடியின் கை ஓங்கி இருந்தால் அது இறங்கும் சந்தை. இதில், எந்தச் சூழ்நிலையில் காளை கரடியின் கை ஓங்கியிருந்தது என்பதை அறிந்துக் கொள்ள டிரெண்ட் லைனின் சாய்வை பயன்படுத்தி தெரிந்துக் கொள்ள முடியும்.

சார்ட்டைப் பயன்படுத்தி வர்த்தகம் செய்யும் பட்சத்தில் சாய்வுகள் (ஆங்கிள்கள்) உருவாவதை ஒருவரால் கண்கூடாகப் பார்க்க முடியும். தட்டையாக இருக்கும் சாய்வு செங்குத்தாக மாறுவது மற்றும் செங்குத்தாக இருக்கும் சாய்வு தட்டையாக மாறுவதை ஒருவரால் பார்க்க முடியும்.

ஒரு சாய்விலிருந்து வேறு ஒரு சாய்வுக்கு டிரெண்ட் லைன் மாற முயற்சிக்கும் வேகத்தை கவனித்து வர்த்தகம் செய்வது அவசியம். இந்த மாற்றத்துக்கு ஏற்ப, ஒருவர் அவரின் வர்த்தக உத்திகளை மாற்றிக் கொள்வது அவசியம்.

டிரெண்ட் லைன் சாய்வு என்பது சந்தையில் இயங்கிக் கொண்டிருக்கும் வர்த்தகர்களின் மன நிலையை பிரதிபலிக்கும் என தொடக்கத்தின் பார்த்தோம். அதன்படி,

டிரெண்ட் லைனின் சாய்வு, சந்தையின் ஏற்றம் அல்லது இறக்கத்தில், அதிக செங்குத்தாக இருந்தால் பெரும்பான்மை வர்த்தகர்கள் சந்தையின் போக்கு பற்றி ஒரே போல் நினைக்கிறார்கள் என்று பொருள். இதை சந்தையிலுள்ள பெரும்பாலான வர்த்தகர்கள் ஒரே போல் செயல்படுகிறார்கள் என்றும் பொருள் கொள்ளலாம்.

தட்டையான டிரெண்ட் லைன் ஆங்கிள் என்பது பெரும்பான்மையினர் சந்தையில் நிதானப் போக்கை கடைப்பிடித்து வருகிறார்கள் என்பதை சுட்டிக் காட்டுகிறது.

செங்குத்தாகவும் இல்லாமல் தட்டையாகவும் இல்லாமல் இவை இரண்டுக்கும் இடைப்பட்டதாக டிரெண்ட் லைனின் ஆங்கிள் இருக்கும்போது ஏற்றத்துக்கும் இறக்கத்துக்கும் இடையேயான போட்டியில் படிப்படியாக ஒன்றைத் தாண்டி ஒன்று முன்னேறி வருகிறது என்று புரிந்துக் கொள்ளலாம். இந்த இடைப்பட்ட ஆங்கிளில் போகும் டிரெண்ட் ஒரு ஆரோக்கியமான டிரெண்ட் என்பதால் இந்த டிரெண்ட் நீண்ட நாள் இருக்க அதிக வாய்ப்பு இருக்கிறது.

**டிரெண்ட் லைன் ஆங்கிளை பயன்படுத்தி எப்படி வர்த்தகம் செய்வது?**

இந்த டிரெண்ட் லைன் ஆங்கிளை பயன்படுத்தி எப்படி வர்த்தகம் செய்வது என்பதை பார்ப்போம்.

டிரெண்ட் லைனின் ஆங்கிள் - சாய்வுக் கோடு (Slope) செல்லும் திசையை கவனியுங்கள்.

சாய்வுக் கோடானது மேல் நோக்கி இருந்தால் வாங்கி விற்று லாபம் பார்க்க (லாங்) முயற்சி செய்யலாம். விற்று வாங்கி லாபம் பார்க்க (ஷார்ட்) முயற்சி செய்யக் கூடாது.

டிரெண்ட் லைனின் சாய்வுக் கோடு கீழ் நோக்கி இருந்தால் விற்று வாங்கி லாபம் பார்க்க (ஷார்ட்) முயற்சி செய்யலாம். வாங்கி விற்று லாபம் பார்க்க (லாங்) முயற்சி செய்யக் கூடாது.

இங்கே டிரெண்ட் லைன்தான் சப்போர்ட் நிலை மற்றும் ரெசிஸ்டன்ஸ் நிலையாக இருக்கிறது.

டிரெண்ட் ஏறுமுகமாக இருக்கும்போது டிரெண்ட் லைனிற்கு சிறிது மேலே உள்ள விலையில் வாங்கி விற்க முயற்சி செய்யலாம். இழப்பு தடுப்பு (ஸ்டாப் லாஸ்) விலையை டிரெண்ட் லைனிற்கு சிறிது கீழே வைத்துக் கொள்ளலாம்.

டிரெண்ட் இறங்குமுகமாக இருக்கும்போது டிரெண்ட் லைனிற்கு சிறிது கீழே உள்ள விலையில் விற்று, அதை விட அதிகமாக கீழ் இறங்கும்போது வாங்கி லாபம் பார்க்க முயற்சி செய்யுங்கள். கீழே போகும் டிரெண்ட் லைன்க்கு சிறிது மேலே இருக்கும் விலையை இழப்புத் தடுப்பாக வைத்துக் கொள்ளலாம்.

டிரெண்ட் லைனிலே விலை இருக்கும்போது விற்றோ அல்லது வாங்கியோ வர்த்தகம் செய்தும், அதன் பிறகு டிரெண்ட் லைனுக்குச் சற்று மேலே அல்லது கீழ் (விற்றால் மேலே உள்ள விலை/ வாங்கினால் கீழ் உள்ள விலையில்) ஸ்டாப் லாஸ் வைத்துக் கொண்டு வர்த்தகம் செய்வது நல்லது.

**வரைபட வகைகள்**

புள்ளி விவரங்களின் வரைபட விளக்கம்தான்




சார்ட்கள் (Charts) எனப்படுகின்றன. இந்த சார்ட்களின் இடம் பெறும் குறியீட்டைப் பொறுத்துப் பல வகைப்படும். பங்குகளின் விலை போக்கை அலசி ஆராய லைன் சார்ட்கள் (Line Charts), பார் சார்ட்கள் (Bar Charts) போன்றவற்றைப் பயன்படுத்தப்படுகின்றன

**லைன் சார்ட்கள்**

ஒரு குறிப்பிட்ட பங்கின் ஆரம்ப விலை, அதிகபட்ச விலை, குறைந்தபட்ச விலை, முடிவு விலை இவற்றில் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொண்டு, அந்த புள்ளிகளை கோட்டின் மூலம் இணைத்தால் லைன் சார்ட் கிடைக்கும். பெரும்பாலும் பங்கின் முடிவு விலையை கொண்டுதான் இந்த லைன் சார்ட்கள் வரையப்படுகின்றன.

**பார் சார்ட்கள்**

ஒரு குறிப்பிட்ட பங்கின் ஆரம்ப விலை, அதிகபட்சவிலை, குறைந்தபட்சவிலை, முடிவு விலை இவை அனைத்தையும் கொண்டு வரையப்படுவது 'பார் சார்ட்' எனப்படும். இதில் நீள் கோட்டின் மேல் பகுதி பங்கின் அதிகபட்ச விலையைக் குறிக்கும். நீள் கோட்டின் கீழ் பகுதி பங்கின் குறைந்தபட்ச விலையை குறிப்பிடும். இந்த நீள் கோட்டின் வலது பக்கம் முடிவு விலை குறிக்கப்படும். நீள் கோட்டின் இடது பக்கம், ஆரம்பவிலை குறிக்கப்படும். இந்த நான்கு விலைகளும் குறிக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்த வரைபடம் 'பார்' அதாவது பட்டை வடிவில் இருக்கும்

**பார் சார்ட்டுகளை**

ஒரு நிமிடம், ஐந்து நிமிடம், பத்து நிமிடம், ஒரு மணி நேரம், ஒரு நாள், ஒரு வாரம், ஒரு மாதம் என பலவித கால அளவுகளில் வரைந்து அல்லது கம்ப்யூட்டர் மூலம் உருவாக்கி பார்க்கலாம்.

**எப்படி பயன்படும்?**

பார் சார்ட்டில், பாரின் உயரத்தின் அடிப்படையில் முக்கியமான முடிவுகளை எடுக்கலாம்.

அதிகபட்ச விலைக்கும் குறைந்தபட்ச விலைக்கும் இடையே உள்ள தூரம்தான் பாரின் உயரம். பாரின் உயரம் பங்கின் விலை ஏற்றத்தின் தீவிரத்தை சுட்டிக் காட்டுவதாக இருக்கும். பாரின் உயரம் அதிகமாக அதிகமாக, அன்றைய தினம் சந்தை அதிக ஏற்ற இறக்கத்தில் அதாவது கடல் அலை போல் இருந்தது என்று தெரிந்துக் கொள்ளலாம். பாரின் உயரம், சராசரியாக இருந்தால் சந்தை ஏற்ற இறக்கம் இல்லாமல் ஏரி தண்ணீர் போல் இருந்தது எனலாம்.

ஒரு தினத்தின் பார் சராசரி, பாரின் உயரத்தில் பாதியாக இருந்தால் சந்தை அன்று மந்தமாக அல்லது பக்கவாடு இயக்கத்தில் (Sideways) இருந்திருக்கிறது எனலாம்.

ஒரு தினத்தின் பாரின் உயரம், சராசரி பாரின் உயரத்தை விட இரு மடங்கு உயரம் அதிகமாக இருந்தால் அன்று பங்குச் சந்தையில் அதிக ஏற்ற இறக்கம் இருந்தது எனலாம். இங்கே உதாரணத்துக்கு தான் நாள் என்று குறிப்பிட்டிருக்கிறேன். முன்னர் குறிப்பிட்டபடி, ஒரு நிமிடம், 5 நிமிடம், 10 நிமிடம், 15 நிமிடம், 30 நிமிடம், 45 நிமிடம் மற்றும் ஒரு மணி, ஒரு வாரம், மூன்று மாதம் நேரம் என கால அளவு ஒவ்வொன்றிற்கும் ஆரம்பம், அதிகபட்சம், குறைந்தபட்சம், முடிவு விலைகளைக் கொண்டு பார்களை வரைந்துப் பார்க்கலாம்.

இந்திய பங்குச் சந்தை தினசரி 6.30 மணி நேரம் இயங்குகிறது. சந்தையில் பங்குகள் வர்த்தகமாவதற்கு முந்தைய 'ஃப்ரீ ஓப்பனிங்' என்கிற நேரமான 15 நிமிடங்களை (காலை 9.00 மணி முதல் 9.15 மணி வரை) கழித்தது போக இந்த 6.30 மணி நேரத்தில் சந்தையில் ஒவ்வொரு 5 நிமிடம், ஒவ்வொரு 10 நிமிடம், ஒவ்வொரு மணி நேரத்தில் காளை மற்றும் கரடிகளின் பலம் எப்படி இருந்தது என்பதை பார் சார்ட்டின் மூலம் தெரிந்துக் கொள்ளலாம்.

சந்தை நடைபெறும் நேரத்தில் ஒவ்வொரு 5 நிமிடத்தையும் பிரித்து, அந்த 5 நிமிடங்களில் ஆரம்பம், அதிகபடம், குறைந்தபட்சம், முடிவு விலை போன்றவற்றைக் கொண்டு பார் சார்ட் வரைந்துப் பார்க்கலாம். இந்த இடைவெளியை அதிகப்படுத்தி 10 நிமிடம், 15 நிமிடம், அரை மணி நேரம் என நாள் முழுக்க சந்தையில் காளை அல்லது கரடியின் வலிமை எது அதிகமாக இருந்தது என்று பார்க்கலாம். வர்த்தக முடிவில் அன்றைய ஆரம்பம், குறைந்தபட்சம், அதிகப்பட்சம், முடிவு விலைகளைக் கொண்டு சந்தை காளை அல்லது மற்றும் கரடியின் கையில் இருக்கிறதா என்பதை அறிந்துக் கொள்ள முடியும்.

# வெற்றியும் தோல்வியும்

**- வெங்கட் பிரசாத்,** D.
அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்

**மகளிர் தினத்தன்று உலகக்கோப்பை பரிசளித்த ஆண்கள்**

நாம் நமது டிசம்பர் மாத இதழிலேயே கணித்தது போன்று இந்திய ஆண்கள் கிரிக்கெட் அணி அபாரமாக T20 உலக கோப்பையை மகளிர் தினத்தன்று வென்று பெரும் சாதனை படைத்தது.

**சிங்கப்பெண்கள்**

நமது வாசகர்கள் அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவிக்கும் வண்ணம் 2024 ஒலிம்பிக்கில் சாதித்த பதக்கம் வென்ற பெண் வீராங்கனைகளின் பெயர்களைக் காண்போம்,

**மனு பாக்கர்** - பெண்களுக்கான ஒற்றையர் 10ட் ஏர் பிஸ்டல், கலப்பு 10ட் ஏர் பிஸ்டல் போட்டிகளில் வெண்கல பதக்கம் வென்றார். ஒரே ஒலிம்பிக்கில் இரண்டு பதக்கங்கள் வென்ற முதல் இந்திய பெண் என்ற சாதனையை செய்த இவர், 25ட் பிஸ்டல் பெண்கள் ஒற்றைய பிரிவில் தனது மூன்றாவது பதக்கத்தை சிறு புள்ளிகள் வித்தியாசத்தில் விட்டதால், உலகிலேயே ஒரே ஒலிம்பிக்கில் மூன்று ஷூட்டிங் பதக்கத்தை வென்ற முதல் பெண்மணி என்ற சாதனையை மிக அருகில் தவறவிட்டார்.

மேலும் 2024 இன் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக்கில், துளசிமதி, மனிஷா, நித்யஸ்ரீ ஆகிய தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்கள் பேட்மிட்டனில் முறையே வெள்ளி மற்றும் வெண்கல பதக்கங்களை வென்று அழியாப் புகழினை சேர்த்தனர். மேலும் மோனா அகர்வால், ப்ரீத்தி பால், ரூபீனா பிரான்சிஸ், தீப்தி சிவாஜி, சிம்ரன் ஆகியோர் வெவ்வேறு பிரிவுகளில் வெண்கலப் பதக்கத்தை வென்று பெருமை சேர்த்தனர். இவர்களுடன் சீத்தல் தேவி என்ற வில்லம்பு வீராங்கனை இரு கைகளும் இன்றி அற்புதமாக அம்புகளை எய்து கலப்பு இரட்டையருக்கான வெண்கல பதக்கம் வென்றது அனைத்து பெண்களுக்கும் ஒரு புது உத்வேகத்தை தந்தது இவர்களுக்கு எவ்வளவு கரகோஷங்கள் கொடுத்தாலும் மிகையாகாது.

**டி20 உலகக்கோப்பை 2026:**

முதல்முறையாகத் தொடர்ந்து இரு முறை டி20 உலகக்கோப்பையை வென்றும், மொத்தத்தில் மூன்று டி20 உலக கோப்பைகளை வென்றும், சாதனை படைத்தது சூரியகுமார் தலைமையிலான இந்திய அணி. இதில் முக்கிய பங்கு அணியின் பயிற்சியாளர் கௌதம் கம்பீரையும் சேரும். இந்தியாவின் பல மாநிலங்களில் இருந்து பல வீரர்களுக்கு வாய்ப்பு கொடுத்து இப்படி ஒரு வலுமிக்க அணியை உருவாக்கினார் கௌதம் கம்பீர். கடுமையானப் போட்டியாக விளங்கிய இங்கிலாந்துக்கு எதிரான அரை இறுதிப் போட்டியில், ஆச்சரியமாக 18-வது ஓவரில் வெறும் 6 ரன்களை மட்டுமே விட்டுக் கொடுத்து, இறுதிப் போட்டியிலும் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தினார் பும்ரா.

சிக்ஸர் அடிப்பதை மட்டுமே தனது பேட்டிங் முறையாக கொண்டிருந்த சஞ்சு சாம்சன், அதை மாற்றி 4களில் ரன்களை கொண்டு வருவதும், இறுதிப் போட்டியில் அபிஷேக் ஷர்மா விலாசிய நிலையில் அவருக்கு ஸ்ட்ரைக் கொடுத்து தேவையான நேரங்களில் சிக்ஸரும் பௌண்டரியும் அடித்து தனது முதிர்ச்சியையும், நெடிய நேரம் விளையாடும் பொறுப்பையும் வெளிப்படுத்தினார். மறைமுக கால் இறுதி, அரை-இறுதி மற்றும் இறுதிப் போட்டிகளில், ஒவ்வொன்றிலும் 190 மேற்பட்ட ஸ்ட்ரைக் ரேட் உடன் 88-க்கும் மேற்பட்ட ரன்கங்களை குவித்து அசத்தினார் சஞ்சு சாம்சன். பல நாட்களாக காத்திருந்தும் பல தோல்விகளை சந்தித்தும் பின்வாங்காமல் தனது தவறுகளை கண்டறிந்து ஆட்ட நேர்த்தியை மாற்றி தனக்கு பக்கபலமாக நின்ற இந்திய அணிக்கு சிறந்த வெற்றியை கொடுத்திருக்கிறார் சஞ்சு சாம்சன். அவரது இந்த மாற்றமும் வெற்றியும் நமக்கு ஒரு பாடம்.

சூரியகுமார் யாதவின் சிறந்த தலைமையும் பந்து வீச்சாளர்களை பயன்படுத்திய முறையும் வெற்றிக்கு மிகச்சிறந்த காரணம். துணைத் தலைவர் அக்சர் பட்டேலில் அற்புதமான கேட்சிங் மற்றும் பந்துவீச்சு, இந்த உலகக் கோப்பையில் அதிகபட்ச விக்கெட்டுகளை வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற பெருமையை பும்ராவுடன் பகிர்ந்து கொண்ட தமிழகத்தைச் சேர்ந்த வருன் சக்கரவர்த்தி., அதிரடி காட்டிய இசான் கிஷன் சிவம் துபே. பந்துவீச்சில் திருப்புமுறைகளை தந்த ஹர்திக் பாண்டியா ஹர்ஷதீப் சிங் என அனைவரும் வெற்றிக்கு மிக முக்கிய காரணம் மொத்தத்தில் ஒருவரை மட்டும் நம்பிய நிலை மாறி மொத்த அணியும் சேர்ந்து பெற்ற வெற்றியே இந்த உலக கோப்பையின் பெருமை.

# சங்கத் தமிழில் சனாதனம்



— பத்மன்

## அத்தியாயம் 7 : வேதநெறியே பழந்தமிழர் வாழ்நெறி

தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தில் பாரதத்தின் ஒருமித்த பண்பாடு தொடர்பான மேலும் பல சான்றுகள் உள்ளன. இந்தச் சிறப்புப் பாயிரத்தின் முந்தைய வரிகளில், "செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு, முந்துநூல் கண்டு முறைப்படி எண்ணி, புலம்தொகுத் தோனே போக்கறு பனுவல்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. செந்தமிழ் இயல்பாக விளங்குகின்ற சிறந்தப் பகுதியில் நிலவும் அப்போதைய இலக்கணத்தையும், அதற்கு முந்தைய இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளவற்றையும் முறையாக ஆராய்ந்து பார்த்து, காலவோட்டத்தால் அழிந்துவிடாத ஓர் இலக்கண நூலைத் தொல்காப்பியன் தொகுத்துத் தந்துள்ளார் என்று இதற்குப் பொருள்.

அந்த முந்தைய நூல்களில் அகத்தியம் உள்ளிட்ட அழிந்துபோன தமிழ் இலக்கண நூல்களும் உண்டு என்பது அறிஞர்கள் கூற்று. அத்துடன் தொல்காப்பியத்துக்கு முந்தைய சம்ஸ்கிருத இலக்கண நூலான ஐந்திரம் என்ற நூலையும் தொல்காப்பியர் ஆராய்ந்து படித்தறிந்துள்ளார். இதற்குச் சிறப்புப் பாயிரமே சான்று தருகிறது. "மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த, தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றிப், பல்புகழ் நிறுத்தப் படிமையோனே" என்பது அப்பாயிர வரிகள். கடலால் சூழப்பட்ட உலகிலே, ஐந்திரம் என்ற வியாகரண அதாவது இலக்கண நூலறிவை நிறைவாகப் பெற்று, தான் இயற்றிய நூலின் மூலமே தனது பெயரைத் தொல்காப்பியன் என்று தோன்றுமாறு செய்த தவ ஒழுக்கம் உடையவன் என்று இதற்குப் பொருள்.

அப்படியா! தொல்காப்பியர் ஐந்திரம் என்ற வடமொழி இலக்கண நூலைப் படித்தாரா? என ஐயப்படுவோருக்கு, அடுத்த அதிர்ச்சியைத் தொல்காப்பியமே தருகிறது. தொல்காப்பியர் வேதங்களையும் வேதம் சார்ந்த நூல்களையும் ஆழ்ந்து படித்திருக்கிறார். பழந்தமிழர்களின் சிறப்புப் பண்பு என்று போற்றப்படுகின்ற களவுத் திருமணம் அதாவது காதல் திருமணம், வேத நூல்களில் கூறப்பட்டிருக்கும் கந்தர்வ விவாகமே என்று பொருளதிகாரத்தின் களவியல் சூத்திரத்தில் அறுதியிட்டுக் கூறியிருக்கிறார் தொல்காப்பியர்.

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்,**
**காமக் கூட்டம் காணும் காலை,**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறைஅமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே.**

**(தொல்.பொரு.கள. சூ. 89)**

"இன்பம், பொருள், அறம் என்று கூறப்படுகின்ற வாழ்வியல் நோக்கங்களோடு பொருந்தி நின்று, அன்புடன் புணர்வதற்குரிய ஐந்து திணைகளின் இடத்தே காதல் கூட்டத்தினரைப் பார்க்கும்போது, மறையோர் நூலில் (வேதத்தில்) கூறப்பட்டுள்ள எட்டு வகைத் திருமணங்களில், மிகச்சிறப்பாக உருவாக்கப்பட்ட, நல்ல யாழை மீட்டியபடி, துணையோடு செல்லும் கந்தர்வர்களின் இயல்பைக் கொண்டதே களவுத் திருமணம்" என்று இதற்குப் பொருள். மறையோர் தேஎம் என்பது, வேதங்களை அறிந்தோர் மொழிந்த நூல் என்பதைக் குறிக்கிறது. பழந்தமிழில் களவு என்றால் ரகசியம் என்றும், காமம் என்பதற்கு விருப்பம், காதல் என்றும் பொருள். வானுலகத் தேவர்களில் ஒரு பிரிவினராகிய கந்தவர்கள் இன்ப நாட்டத்தில் மிகவும் விருப்பம் கொண்டவர்கள், யாழை மீட்டிக்கொண்டு இனிமையாகப் பாடுபவர்கள், சடங்கு ரீதியில் திருமணம் செய்வதற்குப் பதிலாக மனமொத்த ஆணும் பெண்ணுமாக இணைந்து வாழ்பவர்கள் என்று புராணங்கள் கூறுகின்றன.

மேற்கண்ட களவியல் சூத்திரத்தில் வேதநெறி வாழ்வியல் லட்சியங்களான தர்ம, அர்த்த, காம, மோட்சத்தில் - அதாவது அறம், பொருள், இன்பம், வீட்டில் - முன் மூன்றும் கூறப்பட்டுள்ளது. முன் மூன்றும் முறையாக இருந்தால் அடைய வேண்டிய இலக்கான முக்தி தானாகவே கிடைத்துவிடும். ஆகையால்தான் வடமொழி நூல்களிலும் தர்ம சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், காம சாஸ்திரம் உண்டே தவிர, மோட்ச சாஸ்திரம் என்று தனியாக இல்லை. அது சரி, இன்பம், பொருள், அறம் என்று வரிசை மாறியிருக்கிறதே என்று கேட்டால், அதற்கு விடை இதுதான் - காதல் திருமணம் செய்பவர்கள் இன்ப நுகர்வின் அடிப்படையில்தான் இணைகிறார்கள்,

அவர்கள் வாழ்வதற்குப் பொருள் தேவை, அந்தப் பொருள் ஈட்டல் அறத்தின் பாற்பட்டு இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கவே தொல்காப்பியர் இவ்விதம் அடுக்கியுள்ளார்.

எல்லாம் வல்ல ஆற்றலான இறையை வேதம் நிர்குண பிரும்மம் அதாவது உருவமோ, குணமோ அற்ற தெய்வம் என்றும், சுகுண பிரும்மம் அதாவது அவரவர் இயல்புக்கேற்ப வழிபடுகின்ற நற்குணத் தெய்வம் என்றும் இரு வகையாக எடுத்துரைக்கிறது. இதையே தான் தொல்காப்பியமும் நிர்குண பிரும்மத்தை பால்வரை தெய்வம் அதாவது அவரவர் வினைகளுக்கு ஏற்ப இன்ப, துன்பங்களை வகுத்தளிக்கும் தெய்வம் என்று வரையறுத்துள்ளது. சொல்லதிகாரத்தின் கிளவியாக்கம் அதாவது சொல் ஆக்கம் பகுதியில் இந்தப் பால்வரை தெய்வம் என்ற சொல் வந்துள்ளது. தொல்காப்பியம் கூறியுள்ள சுகுணத் தெய்வம் என்பது திணைத் தெய்வம். அதாவது சேயோன், மாயோன், இந்திரன், வருணன், கொற்றவை ஆகிய அந்தந்த திணைகளுக்குரிய தெய்வங்களாகும்.

வேத மந்திரங்களையும் தொல்காப்பியம் விட்டுவைக்கவில்லை. பொருளதிகாரம் செய்யுள் இயலில், "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும் மறைபொருள் தானே மந்திரம் என்ப" என்று கூறப்பட்டுள்ளது. நிறைவான சொற்களைக் கொண்ட மாந்தர்களான முனிவர்களின் ஆணையினால் உருவாகும் மறைபொருள் அதாவது உட்பொருள் கொண்ட சொல்லே மந்திரம் என்பது இதன் பொருள்.

சங்க காலத்தில் வாழ்ந்த பழந்தமிழர்கள் வேதத்தை எந்த அளவுக்கு உயர்வாக மதித்துப் போற்றி வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு, . சங்க இலக்கியமான புறநானூற்றில், சேரமான் பெருஞ்சோற்று உதிரன் சேரலாதனைப் போற்றி, புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியிருக்கும் இரண்டாவது பாடல் அருமையான சான்று தருகிறது.

**பாஅல் புளிப்பினும், பகல் இருளினும்,**
**நாஅல் வேத நெறி திரியினும்**
**திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி,**
**நடுக்கின்றி நிலியரோ........**

***(புற. 2. 17-20)***

"இனிய சுவையுடைய பால் அதற்கு மாறாகப் புளித்துப் போக நேர்ந்தாலும், ஒளி பொருந்திய பகல் வேளை அதற்கு மாறாக இருண்டு போக நேர்ந்தாலும், நான்கு வேதங்களிலும் கூறப்படுகின்ற அறநெறிகள் உலகிலே திரிந்துபோக நேரிட்டாலும்கூட, அதாவது மாறிப் போக நேரிட்டாலும்கூட, திரிந்துபோகாத சுற்றத்தாரோடு முழுமையான கால அளவில் விளங்கி, எவ்வித மாறுபாடும் இன்றி சேரமானே நீ நிலைத்து வாழ்வாயாக!" என்று இப்பாடல் வரிகளுக்குப் பொருள். பால் என்றால் இனிய சுவையோடுதான் இருக்கும், பகல் என்றால் வெளிச்சத்தோடுதான் இருக்கும். இவையெல்லாம் உறுதிப் பொருள்கள். அதனைப் போல் நான்கு வேதங்கள் கூறுகின்ற அறநெறிகளும் மாற்றம் பெறாமல் உலகிலே நிலைத்திருக்கும் என்ற உறுதியோடு புலவர் இதனைக் கூறியுள்ளார்.

எளிய மக்களின் வாழ்வில்கூட வேதமும் வேள்வியும் கலந்திருந்தன என்பதற்கு நான்மணிக்கடிகை மற்றொரு நல்ல சான்றைத் தருகிறது. வேதத்தைத் தொன்மையான மரபு என்று கூறும் அதன் 52-ஆவது பாடலைப் பார்ப்போம்.

***யாறுஉள் அடங்கும் குளம்உள; வீறுசால்***
***மன்னர் விழையும் குடிஉள; தொல்மரபின்***
***வேதம் உறுவன பாட்டுஉள; வேளாண்மை***
***வேள்வியோடு ஒப்ப உள.***

***(நான்.க. 52)***

"ஆற்றில் இருந்து பெருகியோடும் வெள்ளத்தைத் தமக்குள் அடக்கிவைத்துள்ள குளங்கள் உள்ளன. சிறப்பு மிகுந்த மன்னர்களால் விரும்பப்படும் சாதாரண குடிமக்களும் உள்ளனர். தொன்மையான மரபைச் சேர்ந்த வேதத்தில் கூறப்படும் கருத்துகளை எடுத்துரைக்கும் சில தனிப்பாடல்களும் உள்ளன. உயர்வு தரும் வேள்விக்கு நிகரான ஈகைகளும் உள்ளன என்று இதற்குப் பொருள்.

வேதம் உரைக்கும் உயர்ந்த தத்துவங்களை எளியோருக்குப் புரியும் வகையில் கூறும் நாட்டுப்புறப் பாடல்களும் அக்காலத்தில் உண்டு என்பதை இந்த வெண்பா எடுத்துரைக்கிறது. அத்துடன் வேளாண்மையை வேள்வியுடன் ஒப்பிடுகிறது. வேள் ஆண்மை என்பது வேண்டியதை நிறைவேற்றித் தருகின்ற ஆளுமைத் திறன் ஆகும். அதனால்தான் மனிதர்களுக்கு வேண்டிய உணவுப்பொருளை ஆக்கித்தரும் விவசாயம் வேளாண்மை எனப்படுகிறது. இதேபோல் வேண்டியது விளைய வேண்டும் என்ற நோக்கில் விழைந்து செய்கின்ற யாகங்களுக்குத் தூய தமிழில் வேள்வி என்று பெயர் வந்தது. அவ்விதத்திலும், வேளாண்மையும் வேள்வியும் ஒன்றுதான் என்கிறது நான்மணிக் கடிகை.

இனி, பழந்தமிழகத்தில் வேதப் பண்பாடான வேள்வி எவ்விதம் சிறந்தோங்கி இருந்தது என்பதைக் காண்போம்.

(தொடரும்)

# நமக்கான USER MANUAL



இரா. முகுந்த கிருஷ்ணன்,
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.

## தோலும் ஜனனேந்திரியமும் பகுதி 3.

இந்த தோல் தான் மனிதனுடைய மான அவமானங்களுக்கும் ஆணவத்திற்கும் காரணமாகிறது. சிவப்பாக இருப்பவர்கள் தாங்கள் அழகாக இருக்கிறோம் என்று கர்வப்படுவதும், கருப்பாக இருப்பவர்கள் தாங்கள் அழகாக இல்லை என்ற தாழ்வு மனப்பான்மையிலும் அவமானத்திலும் சிக்கிக்கொண்டு துன்பப்படுவதையும் நாம் பார்த்திருக்கறோம். சிவந்த தோல் உடையவர்கள் மேலானவர்கள், கருப்பாக இருப்பவர்கள் அடிமைகள் அல்லது ஆளப்படவேண்டியவர்கள் என்ற எண்ணம் நமது பாரத சமூகத்தில் இயல்பாக இருந்ததில்லை. நாம் அன்றாடம் வழிபடுகின்ற தெய்வங்களான இராமபிரான், கண்ணன், காளி ஆகியவர்களின் நிறம் கருப்புதான். பிரிட்டிஷ்காரர்கள் அல்லது வெள்ளைக்காரர்கள் பாரதத்தை ஆக்கிரமித்து அரசியல் ரீதியாக நம்மை அடிமைப்படுத்த ஆரம்பித்த பின்னர்தான் நிறத்தால் மனிதர்களை உயர்வு தாழ்வு சொல்லும் இந்த எண்ணம் நமது சமூகத்தில் பரவ ஆரம்பித்தது. இந்த எண்ணத்தை விதைத்தவர்களே வெள்ளையர்கள்தான். ஏனெனில் அவர்கள்தான் காலகாலமாக ஒரு சமூகமாகவே கருப்பினத்தவர்களான ஆப்பிரிக்கர்களை விலைகொடுத்து வாங்கி தங்களுக்கு அடிமைகளாக நடத்தி கொடுமைகளை அறங்கேற்றினார்கள்.

வெள்ளையர்களிடமிருந்து நம்மிடம் தொற்றிக்கொண்ட இந்த அடிமை மனப்பான்மையால்தான் இன்றும் சிவந்த தோல்தான் அழகு என்றும் கருப்பாக இருந்தால் அழகில்லை என்றும் ஒருவரின் நிறத்தின் அடிப்படையின் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை கடைப்பிடித்து வருகிறோம். இதே அடிமை மனப்பான்மையால்தான், வெள்ளைக்காரர்கள் நம் நாட்டை விட்டு போனபின்னரும் அவனுடனேயே இருந்து சேவகம் செய்வதற்காக நம்மவர்கள் படித்தவுடன் வெள்ளைக்கார நாடுகளுக்குச் சென்று அங்கேயே ஒரு வெள்ளைக்காரியைத் திருமணம் செய்துகொண்டு சிறந்த அடிமையாக வாழ்கிறார்கள். அதில் பெருமைகொள்ளவும் செய்கிறார்கள். இந்தவிதமான தாழ்வுமனப்பான்மையைப் பயன்படுத்தித்தான் இன்றைய வியாபார உலகில் தோல் வியாபாரிகள் (அழகுசாதனப் பொருட்கள் தயாரிக்கும் கம்பெனிகள்) பலவித விளம்பரங்கள் மூலமாக இளம் பெண்களின் மனதை குழப்பி, கருப்பான தோலை வெள்ளையானதாக அழகாக மாற்றலாம் என்று பொய் சொல்லி கல்லா கட்டுகிறார்கள்.

மனிதனுக்கு ஒரு முழுமையான உருவத்தையும் வடிவத்தையும் தருவதே தோல்தான். ஆனால் அந்த வடிவத்தை நிரந்தரமான அழகு என்று எண்ணி காலகாலமாக மனிதர்கள் ஏமாந்து வருகிறார்கள். வயது ஏற ஏற தோலில் காணப்படுகின்ற மினுமினுப்பும் எழிலும் சீர்குலைந்து சுருக்கங்கள் ஏற்பட்டவுடன் உடலின் அழகு போய்விடும் என்பதை இளைஞர்கள் உணரவேண்டும். உடலில் உள்ள எல்லா அங்கங்களையும் மூடி பாதுகாக்கின்றது என்பதால் நாம் ஆடையணிவதன் மூலமாக தோலை காப்பாற்றிக் கொள்ளகிறோம். தோலை பாதுகாத்துக்கொள்வதற்காக ஆடையணிய வேண்டும் என்ற எண்ணமானது படிப்படியாக மாறி ஆடையால் உடம்பு மூடப்படாவிட்டால் அவமானம் என்றும் ஆடை அணிந்தால்தான் மானம் காக்கப்படுகிறது என்றும் ஆனது. சிறு குழந்தைகளுக்கும் தெய்வீக நிலையில் இருப்பவர்களுக்கும் தோலினாலும் ஆடையினாலும் ஏற்படக்கூடிய இப்படிப்பட்ட மான அவமான சிக்கல் கிடையாது என்பதை நாம் உணரவேண்டும்.

நமது ஞானேந்திரியங்களின் வரிசையில் தோல் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. தட்ப-வெப்ப மாறுபாடுகளுக்கு தகுந்தாற்போல் சூட்டையும் குளிர்ச்சியையும் மாறுபடச் செய்து தோல் நம்மை காக்கின்றது. தொடு உணர்ச்சியை உணர்வதே தோலின் சொந்த அறிவாகும். தலையிலிருந்து கால் வரை எந்த இடத்திலும் ஒரு எறும்பு ஊர்ந்தாலும்கூட நம்மீது ஏதோ ஊர்கிறது என்ற உணர்ச்சியை புரியவைப்பதே தோல்தான். தலை முடியிலிருந்து தொடங்கி உடலின் ஒவ்வொரு பாகத்திற்கு ஏற்றாற்போல் தேவையான அளவு முடியை ஆங்காங்கே வளரச் செய்து காப்பாற்றும் வேலையை தோல் செய்கிறது. சூடு-வெப்பம், வலி-சுகம், ஆகிய எல்லா உணர்ச்சிகளையும் நேரடியாக மூளைக்கு கொண்டு சேர்க்கிறது. அடுத்தத் தொடரில் காமத்திற்கும், தோலுக்கும், குழந்தைப் பிறப்புக்கும், உள்ள சம்பந்தத்தைப் பார்ப்போம்.

(தொடரும்)

# மண்டை குடைச்சலா?

**வ ரங்கநாதன்,**
ஆளுமைத் திறன் பயிற்றுநர்



**"எண்ணத் தறியில் சிறு நினைவு இழையோட இழையோட**
**முன்னுக்குப் பின் முரணாய் முற்றும் கற்பனையாய்**
**பன்னும் பகற்கனவாய் பாழாய்ப் பழம் பொய்யாய்**
**என்னென்ன நினைக்கின்றாய் ஏழைச் சிறு மனமே"**
என்று குறிஞ்சி மலர் நாவலில் நா பா மேற்கோள் காட்டுகிறார்

உண்மை தானே? மனசு பின்னிப் பின்னி எதையோ நினைத்துக் கொண்டே இருக்கிறது. அதுவும் எதிர்பாராத துக்கமோ ஏமாற்றமோ வந்தால் அதையே அரைத்து அரைத்து அசதியாக்கி விடுகிறது

**அதனால் தான் தாயுமான ஸ்வாமியும்,**

"எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணி எண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினி போதும் பராபரமே"
என்கிறார்

இப்படி அதிகமாக யோசிப்பதை நிறுத்த 5 ஜப்பானிய வழிமுறைகளை அறியலாம்.

**இகிகை – உங்கள் நோக்கத்தைக் கண்டறியவும்**

இகிகை என்பது "இருப்பதற்கான காரணம்".நோக்கமுள்ள வாழ்க்கையுடன், நீங்கள் தானாகவே அதிக கவனம் செலுத்தும் இடம் மற்றும் அர்த்தமுள்ள எண்ணங்களை வளர்த்துக் கொள்கிறீர்கள். இங்கே கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்கினால் தேவையற்ற யோசனை குறையும். நிம்மதி பிறக்கும்.

**கைசன் – முன்னேற்றத்தை நோக்கிய சிறிய படிகள்**

ரஜினி ஸ்டைலில் மாற்றம் வர வேண்டும் என்று நினைக்காமல் அடி மேல் அடி வைத்து தொடர் முயற்சியில் முன்னேற கவனம் செலுத்துதல் நல்லது. "ஒரு நொடியில் ஒரு துகளாய்" என தொடர்ந்து முன்னேறுவதில் கவனம் செலுத்த வேண்டும். செய்வன திருந்தச் செய் என்கிறது ஆத்திசூடி

**வாபி-சபி - அபூரணத்தைத் தழுவுதல்**

வாழ்க்கையில் எல்லமே பர்ஃபெக்டா இருக்கணும் என நினைக்காமல் நடப்பதை ஏற்றுக் கொண்டு அதில் உள்ள நன்மையை கவனித்து அமைதி அடைவது. எல்லாருமே எல்லா விஷயத்திலும் சரியாக இருக்க மாட்டார்கள். இருப்பதை ஏற்று அடுத்தது என்ன என்று யோசிக்க தொடங்குவது நன்மை தரும். ஆசைப்பட்டது அமையவில்லை என்றாலும் அமைந்ததில் ஆசை வைப்பதே நிம்மதி தரும் என்பது திருமணம் ஆனவர்களுக்குப் புரியும்

**ஷின்ரின்-யோகு - அமைதிக்கான வனக் குளியல்**

குளிர்ந்த நீரில் குளித்தல், உடல் முழுவதையும் உணர்ந்து நீரில் மூழ்குதல், இயற்கையை ரசித்தல், இலையின் சலசலப்பை ரசித்தல். ரம்மியமான இசையைக் கேட்டல், பிடித்த உணவை ருசித்து அருந்துதல் என்று மனதை திசை திருப்பும் போது மனசு புத்துணர்வு பெறும்

**ஷோகனை – உங்களால் கட்டுப்படுத்த முடியாததை விட்டுவிடுதல்**

ஷோகனை என்ற சொல் "அதை யாராலும் செய்ய முடியாது." இது உங்கள் கட்டுப்பாட்டில் இல்லாததை விரக்தியுடன் அல்ல, கருணையுடன் ஏற்றுக்கொள்வதாகும். கட்டுப்படுத்த முடியாதவற்றுடன் போராடுவதை நீங்கள் விடுவிக்கும்போது, நீங்கள் மன அமைதியை மீண்டும் பெறுகிறீர்கள், உலகம் அதன் போக்கில் தான்போகும். அதைப் புரிந்து கொண்டு நம் போக்கை சரி செய்து கொண்டால் நமது பயணம் தடைபடாது செல்லும்.

**ஜப்பானிய ஞானத்தின் மூலம் அமைதியைக் கண்டறிதல்**

இந்த ஜப்பானிய தத்துவங்கள் என்ன சொல்கின்றன என்றால், எண்ணங்களின் போக்கையும் வாழ்க்கைப் போக்கையும் நமது அறிவால் புரிந்து கொண்டு நமது எண்ண ஓட்டத்தை எதிர்பார்ப்பை சரியாக்கிக் கொண்டால் வாழ்க்கையில் நிம்மதி பிறக்கும் என்கிறது.

உலகத்தோடு பிணக்கமாக இருந்தால் உங்களுக்கு நீங்களே பிணக்கம் அடைவீர்கள். உலகத்தோடு இணக்கமாக இருந்தால் நீங்களும் நிம்மதியாக இருப்பீர்கள்.

# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 9)

இராம . வெங்கடாத்ரி

**சப்த சிந்து**

இமயமலை தொடங்கி இந்துமாக்கடல் வரையிலாக உள்ள இந்த நாடு ஹிந்துஸ்தானம் என்ற பொருள் தரும் ஹிமாலயம் சமாரப்ய
என்ற சுலோகத்தை முந்தைய பதிவில் பார்த்தோம். இதே பொருள் தரும் இன்னொரு பழங்கால சுலோகத்தை “தெய்வத்தின் குரல்” புத்தகத்தில் காஞ்சி மகாப்பெரியவர் குறிப்பிடுகிறார்.

**ஆ சிந்தோ: சிந்து பர்யந்தம்**
**யஸ்ய பாரத பூமிகா**
**மாத்ரு பூ: பித்ரு பூ புண்ய (ஸ்)சைவ**
**ஸ வை ஹிந்து இதி ஸ்ம்ருதா:**

ரிக் வேதம் பஞ்சாப் பகுதியில் ஓடும் ஏழு புண்ணிய நதிகளை சப்த சிந்து என்று குறிப்பிடுகிறது. அந்த ஏழு நதிகளாவன: சரஸ்வதி (தற்போது பூமிக்கடியில் மறைந்து விட்டது, அந்தர்வாஹினியாக இன்றும் ஓடிக் கொண்டிருக்கிறது), சிந்து, விதஸ்தா (ஜீலம்), அசிக்னி (செனாப்), பருஸ்சினி (ராவி), விபாஸ் (பியாஸ்), சுதுத்திரி (சத்லஜ்). ரிக் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நதிகளின் தற்போதைய பெயர்கள் அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த 7 நதிகள் பாயும் சப்த சிந்து பிரதேசம் முதல் இந்து மகாசமுத்திரம் வரை உள்ள இந்த பரந்த பகுதியை தாய்நாடு ஆகவும், தந்தை நாடாகவும், புண்ணிய பூமியாகவும் கருதும் இந்த மண்ணின் மைந்தர்கள் அனைவரும் ஹிந்துக்கள் என்று இந்த சுலோகம் கூறுகிறது. அந்த வகையில், ஹிந்துக்கள் என்பதும் தற்போது இந்தியர்கள் என்பதும் ஒரே பொருளைத்தான் தருகின்றன.

**சங்க இலக்கியங்கள்**

சங்க இலக்கியங்களில், பத்துப்பாட்டில் ஒன்றான மதுரைக் காஞ்சியில், தலையானங்கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடுகையில், புலவர் மாங்குடி மருதனார், பாரத நாடு குறித்து, தென் குமரி வட பெருங்கல் குண குட கடலா எல்லை என்று குறிப்பிடுகிறார். தெற்கிலே கன்யாகுமரியையும் வடக்கிலே பெருங்கல் பரப்பான இமயமலையையும், கிழக்கிலும் (குணக்கு) மேற்கிலும் (குடக்கு) கடல் பரப்பையும் எல்லையாகக் கொண்ட நாடு என்று இதற்குப் பொருள்.



இதேபோல், அகநானூற்றில், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடுகையில், புலவர் காரி கிழார்,

**வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்**
**தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்**
**குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்**
**குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்**

என்று பாரதத்தின் எல்லை பற்றிக் கூறுகிறார். வடக்கிலே பனிபடர்ந்த நெடிய மலையும் (இமயமலை), தெற்கிலே குமரியாறும் (ஒருகாலத்தில் ஓடியது), கிழக்கிலே நீண்ட கரை மீது அலைகளை மோதுகின்ற கடலும், மேற்கிலே பழைமையான முதிர்ந்த கடலும் பாரதத்தின் எல்லைகளாக உள்ளன என்பது இதன் பொருள்.

கிமு 300 சங்க இலக்கியங்களின் கால கட்டம் என்று கருதும் மேல்நாட்டு ஆய்வாளர்களின் கருத்துப்படி பார்த்தால் கடந்த 3000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழ்ச் சங்க இலக்கியங்கள் பாரத நாட்டின் எல்லைகளை இவ்வளவு தெளிவாக வரையறுத்து இருக்கின்றன. இந்த உண்மைகள் மறைக்கப்பட்டதால்தான் தனித் தமிழ் தேசியம் இங்கே பேசப்படுகிறது.

**ஆரிய மாயை**

ஜோசப் கால்டுவெல் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு ஆகிய மொழிகளை தனி திராவிட மொழிகள் என்று பிரிக்கிறார். இந்த மொழிகள் பேசப்படும் தென் மாநிலங்கள் தனி திராவிட பண்பாடு கொண்டவைகள் என்றும் திராவிடம் நீங்கலாக உள்ள வட இந்தியா ஆரியப் பண்பாடு என்றும் இரு வேறு துருவங்களாக தேசியங்களும், பண்பாடுகளுமாகப் பிரிந்து உள்ளதாகப் புனைவு செய்கிறார். வேதங்கள் ஆரியர்கள் இயற்றியது. வேதங்கள் கூறும் வாழ்வியல் வேறு, தமிழ்ப் பண்பாடு வேறு. புராணங்களில் உள்ள

**இந்த நாட்டை தாய்நாடாகவும், தந்தை நாடாகவும், புண்ணிய பூமியாகவும் கருதும் இந்த மண்ணின் மைந்தர்கள் அனைவரும் ஹிந்துக்களே**

தேவர்கள் என்பது ஆரியர்களைக் குறிப்பிடுகிறது, அரக்கர்கள் என்பது திராவிடர்களைக் குறிக்கிறது போன்றவை எல்லாம் இந்தத் திராவிட சித்தாந்தத்தின் கருத்தியல்கள்.

வேள்வி, வடவர்க்கு அதாவது ஆரியர்க்கு உரியது என்றால் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பாண்டியன், சோழ மன்னன் ராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய மன்னர்களின் பெயர்கள் சங்க இலக்கியங்களிலே காணப்படுகிறதே. சங்க இலக்கியங்களில் வேள்விகள் மற்றும் அவற்றைச் செய்யும் வேதியர் கடமைகள் குறித்து பல பாடல்கள், குறிப்புகள் உள்ளனவே.

**ஆரியக் கடவுள்கள்**

திராவிட சித்தாந்தம் கடவுள்களையும் விட்டு வைக்காமல் ஆரியக் கடவுள், திராவிடக் கடவுள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கிறது. பொன்னார் மேனியன் (சிவந்த நிறம் உடையவன்) என்று அழைக்கப்படும் சிவன் கரிய நிறத்தவர்களாகிய திராவிடர்களின் தெய்வம், கரியமால் ஆகிய விஷ்ணு வெள்ளை நிறத்தவர்களாகிய ஆரியக் கடவுள் என்பதெல்லாம் எவ்வளவு பெரிய முரண்பாடு? தமிழ்க் கடவுளான முருகனின் அண்ணா விநாயகன் ஆரியன், தம்பி முருகன் திராவிடன் என்பது எந்த அளவுக்கு அபத்தமாக இருக்கிறது. ஆனால் உண்மையில் தமிழ்ச் சங்க இலக்கியங்கள் சொல்வது என்ன?

பரிபாடலில் திருமால் (விஷ்ணு) வேதத்தின் உட்பொருளாக வர்ணிக்கப்படுகிறார். ஏறத்தாழ வேதத்தைத் தமிழ் செய்ததுபோல் அது ஒலிக்கிறது. அதே நேரத்தில் சிவபெருமானை வேத முதல்வன், காரி உண்டிக் கடவுள் (ஆலகால விஷமருந்தியவர்), மணிமிடற்றோன் (நீலகண்டன்), பழையோன், கண்ணுதல் (நெற்றிக்கண்) கடவுள் என்றெல்லாம் சங்க இலக்கியங்கள் வர்ணிக்கின்றன. பிரும்மனை ஆதி அந்தணன் என்றும் அழைக்கின்றன. தேவர்களின் தலைவனாகிய இந்திரனுக்கு இந்திரக் கோட்டம் என்று கோவில் இருந்ததும், இந்திர விழா உள்ளிட்ட சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டதும் சங்க இலக்கியங்கள் மற்றும் சிலப்பதிகாரத்தின் மூலம் அறியப்படுகின்றது. வேத இலக்கியங்களின் துர்க்கைதான் தமிழ்ச் சங்க இலக்கியங்களில் கொற்றவையாகக் காணப்படுகிறாள்.



**அங்கக்கிங்க பேதமில்லை**

வேதத்தில் கூறப்படும் காற்றுக் கடவுளான வாயு பகவான்தான் தமிழர்களின் காத்தவராயன் சாமி என்று பாரதியார் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். வாக் தேவியாகிய சரஸ்வதிதான் தமிழில் பேச்சு அம்மனாகிய பேச்சியம்மன். தமிழகத்து கிராமப்புறங்களில் உள்ள ஏழு அன்னையர் வழிபாடு, வடக்கில் சப்தமாதா வழிபாடாக உள்ளது. முனீஸ்வரர் சிவனாகவும், கருப்பணசாமி விஷ்ணுவாகவும் காணப்படுகிறார்கள். ஐயனார் அல்லது அய்யனார் எனப்படும் தமிழ் கிராமச் சாமி, சாட்சாத் பிரும்மன்தான். விருமாண்டி என்ற விருமனும் பிரும்மன்தான்.

**புருஷார்த்தம்**

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் புருஷார்த்தங்களாக, அதாவது மானிட வாழ்வியலாக வேதங்களாலும், தமிழ் இலக்கியங்களாலும், இந்த நாட்டில் உள்ள எல்லா மொழி இலக்கியங்களாலும் முன் நிறுத்தப்படுகின்றன. இலக்கியங்கள் தவிர நாடு முழுவதும் ஆங்காங்கே உள்ள கிராமியக் கலைகளிலும் இந்த 4 புருஷார்த்தங்களை வலியுறுத்துவதாக இருக்க வேண்டும் என்ற மரபு கடைபிடிக்கப்படுகிறது. உதாரணமாக தமிழக நாட்டுப்புறக் கலைகளான வில்லுப்பாட்டின் இலக்கணங்களிலும் இதை நாம் காண முடிகிறது.

**ஒண்ணுதான் ஒண்ணுதானே**

இந்த நாடு கலாச்சார அடிப்படையில், ஆன்மிக மரபுகளால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளது. பல வண்ண மணிகளைப் பிணைத்து இணைக்கும் நூல் போல ஹிந்துப் பண்பாட்டின் கூறுகள் பன்னெடுங்காலமாக இந்த கலாச்சார பாரதத்தை இணைத்து வருகின்றன.

எத்தனையோ பிரிவினைவாத முயற்சிகள் நடந்தாலும் இந்த தேசத்தை இன்றளவும் கட்டிக் காப்பது இது போன்ற ஹிந்து ஆன்மீக மரபுகளே.

(தொடரும்)

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் - பகுதி 6



- ஏழுமலை

**இரண்டாவது பாரதியார்**

"மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, சுதந்திர பாரதத்திலே தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி, இரண்டாவது பாரதி என்று அழைக்கப்படுபவர் இந்து முன்னணி நிறுவனர் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள்.

**இரவு கழிந்தது இரவி எழுந்தான்**

அவர் எழுதிய பாடல்களிலே இரவு கழிந்தது இரவி எழுந்தான் என்ற பாடல் வரிகளைப் பற்றி கடந்த சில தொடர்களில் பார்த்து வருகிறோம். நமது நாடு சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் அவர் எழுதியது இந்தப் பாடல். சுதந்திர பாரதம் எப்படி இருக்க வேண்டும் என்ற தனது அபிலாஷைகளை அந்தப் பாடலில் வரும் ஒவ்வொரு வார்த்தைகளிலும், வரிகளிலும் வெளிப்படுத்தியிருக்கிறார் இராம கோபாலன் ஜி. அந்தப் பாடலில் வரும்

**வீமனும் பார்த்தனும் தருமனும் கண்ணனும்**
**மீண்டும் இந்நாட்டினில் உலவுதல் காண்பாய்**

என்ற பாடல் வரிகளைப் பற்றி இன்று காண்போம்.

சுதந்திரம் அடைந்த பாரதத்தில், வீமனும் பார்த்தனும், தருமனும் கண்ணனும்போன்று மக்கள் வாழ வேண்டும். அவர்களை கதாபாத்திரங்களாகக் கருதாமல் அவர்களது குண நலன்களைத் தன் வாழ்வில் கடைபிடிக்கும் மனிதர்களால் இந்த நாடு நிறைந்திருக்க வேண்டும் என்று வீரத்துறவி விரும்புகிறார்.

தர்மத்துக்கும், அதர்மத்துக்கும் இடையில் நடக்கும் மாபெரும் போரில் தர்மம் என்றும் வெல்லும் என்பதே மகாபாரதத்தின் மையக் கருத்து. பாரத நாட்டில் அறத்தின் செங்கோல் நிமிர்ந்து நிற்க இந்த நால்வரையும் முன்னுதாரணங்களாக நிறுத்துகிறார் திரு. இராம கோபாலன் ஜி அவர்கள்.

**வீமன்**

பெரும்பாலான திரைப்படங்களில் பீமனின் கதாபாத்திரம் முற்றிலும் தவறாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. பீமன் பெருந்தீனிக்காரனாகவும், ஊளைச்சதை கொண்ட குண்டானவராகவும் சித்தரிக்கப்படுகிறான். ஆனால் மகாபாரதத்தில் பீமன் வலிமை, வீரம், அச்சமூட்டும் வகையிலான போர்த்திறன் கொண்டவனாகக் கூறப்படுகிறான். அளவற்ற வலிமையும் ஞானமும் பெற்றிருந்தபோதிலும், பணிவின் வடிவமாகத் திகழ்ந்தான். போருக்கு முன்னதாக, தர்மபுத்திரன் வனவாசம் முடிந்த பிறகு மீண்டும் ஆட்சிக்கு வரும் நம்பிக்கையை இழந்து, போரிடும் எண்ணத்திலிருந்து பின்வாங்கும் நிலை அடைந்தபோது பீமனின் அறிவுரையின் மூலம் தருமன் மீண்டும் தனது கடமைப் பாதைக்குத் திருப்பப்பட்டான். அதர்மத்தை அழிக்கப் போரிடுவதிலே ஒரு சிறிதும் குழப்பமற்ற மனநிலை உடையவனாகவும், இணையில்லாத வலிமையுடன் கூடிய பீமனைப் போல் நாம் வாழ வேண்டும் என்று கருதியே வீரத்துறவி பீமனைப் பற்றி இந்தப் பாடலிலே குறிப்பிடுகிறார்.

**பார்த்தன்**

பார்த்தன் என்று அழைக்கப்படுகிற அர்ஜுனன் எப்போதும் யாராலும் தோற்கடிக்க முடியாதவன். வெற்றி பெறும் மன நிலையோடு இருந்து எப்போதும் வெற்றியே பெறுவதால் அர்ஜுனன் விஜயன் என்று அழைக்கப்பட்டான். அர்ஜுனன் எப்போதும் நேரான பாதையில் நடப்பவன். தண்ணீரில் மீனின் பிரதிபலிப்பைப் பார்த்துக்கொண்டே தொங்கும் மீன் கண்ணில் தனது வில்லை குறிவைக்க வேண்டிய போட்டியில் வெற்றி பெற்று திரௌபதியை மணந்த பார்த்தன் தன் இலக்குகளை அடைவதில் இருந்த உறுதிக்கும், ஒருமுகப்பட்ட சிந்தனைக்கும் எடுத்துக்காட்டு. அர்ஜுனன் மூலமாகவே பகவத் கீதை என்ற ஞானப் பெட்டகம் நமக்குக் கிட்டியது.

**தருமன்**

பாண்டவர்களில் மூத்தவரான தருமன், நீதியின் முழு வடிவமாக வாழ்ந்ததால் 'தர்மபுத்திரர்' அதாவது 'தர்மத்தின் மகன்' என்று அழைக்கப்பட்டவர். அனைத்தையும் இழந்து கையறு நிலையில் இருந்தபோதிலும், இறுதியில் நீதி வெல்லும் என்பதை தனது உறுதிப்பாட்டால் நமக்கு உணர்த்தியவர். வனவாசக் காலத்தில் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்று 'யட்சப் பிரஸ்னம்'. இதில், யட்சன் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் மனித குலத்துக்கே வழிகாட்டியாக உள்ளன. இடையூறுகள் நேரும்போது கூட அமைதியாகவும் நிதானமாகவும் இருக்கும் தருமரின் திறன், அவரது ஞானத்தை வெளிப்படுத்துகிறது. ஹஸ்தினாபுரத்தின் ஆட்சியாளராக, சிறந்த மன்னனுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய 'நீதிமான்', தருமன். அற வாழ்க்கை, மன உறுதி, ஞானம், தலைமைப் பண்புகள்

**பாரத நாட்டில் அறத்தின் செங்கோல் நிமிர்ந்து நிற்க வீமனையும், பார்த்தனையும், தருமனையும், கண்ணனையும் முன்னுதாரணங்களாக நிறுத்துகிறார் வீரத்துறவி.**

ஆகியவற்றுடன் நாம வாழ வேண்டும் என்பதை தருமர் நமக்கு உணர்த்துகிறார்.

**கண்ணன்**

கண்ணன் வாழ்க்கையின் பல்வேறு தரப்புகளைச் சேர்ந்த மக்களையும் தனக்குச் சமமானவர்களாகவே கருதி எல்லோருடனும் இயல்பாகப் பழகிய சமூக நீதிக் காவலர். தர்மம் வெற்றி பெறுவதைக் காண வேண்டும் என்ற குறிக்கோளுக்காகவே அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டமும் அமைகிறது. தன்னைச் சுற்றியுள்ள அனைவரும் சிக்கல்களால் குழப்பமடைந்தாலும், தர்மத்தைத் தெளிவாகக் காணும் திறன் கொண்டவர் ஸ்ரீகிருஷ்ணர். ஒரு மகனாக, சகோதரனாக, நண்பனாக, தேரோட்டியாக எல்லா இடங்களிலும் தனது கடமையை ஒழுங்காக ஆற்றினார். மகாபாரதக் கதை நெடுகிலும் கண்ணனது மகத்தான ஆளுமையின் பல பரிமாணங்கள் வெளிப்படுகிறது. ஒரு சிறந்த வியூக வகுப்பாளர், தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர், மக்களை ஒரு வலிமைமிக்க சக்தியாக ஒருங்கிணைத்தவர், ஈடுஇணையற்ற ராஜதந்திரி என்று சொல்லிக் கொண்டே போகலாம். நாம் கடவுளாக வழிபடும் கண்ணனை பிரமிக்கத்தக்க குணநலன்கள் கொண்ட நிறை மனிதனாக, பல்வேறு கோணங்களில், தனது கிருஷ்ணாவதார் என்ற 7 தொகுதிகள் கொண்ட பிரம்மாண்ட நூலின் மூலம் நிறுவுகிறார் திரு. கே.எம்.முன்ஷி. இதுபோன்ற எண்ணற்ற மகத்தான குணங்களைக் கொண்ட கண்ணனைப் போல் நாம் வாழ்ந்தோமானால் நமது சாதாரண வாழ்க்கை உயர்ந்த வாழ்க்கை ஆகிவிடும்.

**மகாபாரதம் நடந்த கதை**

ராமாயணமும் மகாபாரதமும் இதிகாசம் எனப்படுகின்றன. இதிகாசம் என்பதற்கு இப்படி நடந்தது என்று பொருள். கி.மு.3102, பிப்ரவரி 18 அன்று, பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் மறைவுக்குப் பிறகு கலியுகம் பிறந்தது என்பது வானியல் ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மகாபாரதத்திலே கூறப்பட்டுள்ள வீமனும், பார்த்தனும், தருமனும், கண்ணனும் 5000 ஆண்டுகட்கு முன்னதாகவே நமக்கு வாழ்ந்து வழிகாட்டியவர்கள். நாமும் அவர்களைப் போலவே வாழ வேண்டும் என்பதனாலேயே, "மீண்டும் இந்நாட்டினில் உலவுதல் காண்பாய்" என்ற வரிகளை வீரத்துறவி இந்தப் பாடலில் கூறியுள்ளார்.

**யத்ர யோகேஸ்வரஃ கிருஷ்ணோ**

பகவத் கீதையின் இறுதியாக உள்ள பின்வரும் ஸ்லோகம் வெற்றிக்கான பரம ரகசியத்தைச் சுருக்கமாக எடுத்துரைக்கும் சஞ்சயரின் இறுதிப் பிரகடனமாக உள்ளது.

**யத்ர யோகேஸ்வரஃ கிருஷ்ணோ யத்ர பார்த்தோ தனுர்தரஃ |**
**தத்ர ஸ்ரீர் விஜயோ பூதிர் துருவா நீதிர் மதிர் மம |**

"எங்கு கண்ணனும், பார்ர்த்தனும் சேர்ந்து இருக்கிறனரோ, அங்கு நிச்சயமாகச் செல்வச் செழிப்பு, நிலைத்த வெற்றி, வளர்ச்சி மற்றும் என்றென்றும் குன்றாத வளமை மற்றும் நீதி ஆகியவை நிலைத்திருக்கும்" என்பது இந்த ஸ்லோகத்தின் பொருள். கண்ணன், பார்த்தனுடன், வீமனின் வலிமையும், தருமனின் நீதியும் சேர்ந்தால் மிக உன்னதமான நிலை ஏற்படும் என்பதில் ஐயமில்லை. ஆகவே வீமனும், பார்த்தனும், தருமனும் கண்ணனும் மீண்டும் இந்நாட்டில் உலவிட வேண்டும் என்று வீரத்துறவி தனது விருப்பத்தை இந்தப் பாடல் வரிகளில் கூறியுள்ளார்.

**இசை வடிவம்**
**பாடலின் இசை வடிவத்திற்கு கீழே உள்ள QRCODE I SCAN செய்யவும்.**


# வாசகர் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

**ஸ்ரீதமிழ் இதழ் மேலும் மேம்பட உங்கள் கருத்து எங்களுக்கு உதவும். தேர்ந்தெடுக்கப்பட்ட வாசகர் கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். வாட்ஸ் ஆப்பில் டெக்ஸ்ட் பண்ணுங்க; அல்லது, வாய்ஸ் நோட் அனுப்புங்க....**

**வாட்ஸ் அப் எண்: 7010281932**

# 16 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு முடிய தமிழகத்தில் அன்னியர்களுக்கு எதிரான இதரப் போராட்டங்கள்

**யா.சு. கண்ணன்**

மே 10, 1857ல் மீரட்டில் தொடங்கிய இக்கிளர்ச்சி மங்கள் பாண்டேவின் தியாகத்தால் தூண்டப்பட்டு வட மற்றும் மத்திய பாரதம் முழுவதும் பரவியது.

இது பிரிட்டிஷ் ஆட்சியை உலுக்கியது என்று கூறினால் மிகையாகாது.

இதன் தாக்கத்தை தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும் காண முடிந்தது.

அது குறித்த விவரங்களை இப்போது பார்க்கலாம்.

**1)பன்னீர் பூ கிளர்ச்சி**

பன்னீர் பூ கிளர்ச்சிசு (Rose Water Revolt) என்பது 1857-ஆம் ஆண்டு புரட்சியின் போது தமிழகத்தின் தஞ்சாவூர் மற்றும் திருச்சி பகுதிகளில் நிலவிய ஒரு வினோதமான மற்றும் பதற்றமான சூழலைக் குறிக்கிறது.

**இதன் பின்னணியில் உள்ள சுவாரஸ்யமான தகவல்கள் இதோ:**

இந்தக் கிளர்ச்சிக்கு நேரடியான போர் என்று பெயரிடுவதை விட, "வதந்திகளின் போர்" என்று அழைக்கலாம். பிரிட்டிஷ் இராணுவத்தில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கித் தோட்டாக்கள் மற்றும் உணவுப் பொருட்களில் விலங்குகளின் கொழுப்பு கலக்கப்பட்டிருப்பதாக வட இந்தியாவில் வதந்தி பரவியது போலவே, தமிழகத்தில் "பன்னீர் பூ" மற்றும் "வாசனைத் திரவியங்கள்" தொடர்பான ஒரு செய்தி பரவியது.

**வதந்தியும் கிளர்ச்சியும்**

அக்காலத்தில் பிரிட்டிஷ் அரசு மக்களைக் கிறித்தவ மதத்திற்கு மாற்ற முயற்சிப்பதாக ஒரு பயம் மக்களிடையே இருந்தது.

- **சதித் திட்டம்:** ஆங்கிலேயர்கள் பொதுக் கிணறுகள் மற்றும் குடிநீர் நிலைகளில் ஒருவிதமான 'வாசனை நீர்' (பன்னீர் போன்ற திரவம்) கலந்துவிடுவதாகவும், அதைப் பருகினால் மக்கள் தங்கள் ஜாதியையும் மதத்தையும் இழந்துவிடுவார்கள் என்றும் வதந்தி பரவியது.
- **மக்களின் எதிர்வினை:** இதனால் ஆத்திரமடைந்த மக்கள் மற்றும் சில சிப்பாய்கள் அரசு அதிகாரிகளுக்கு ஒத்துழைக்க மறுத்தனர். தஞ்சாவூர் பகுதியில் இது ஒரு "மௌனப் புரட்சியாக" உருவெடுத்தது. மக்கள் அரசு வழங்கிய குடிநீரைப் பயன்படுத்த மறுத்து வீதிகளில் இறங்கிப் போராடினர்.

**சிப்பாய்களின் தொடர்பு**

தஞ்சாவூரில் இருந்த 25-வது தரைப்படைப் பிரிவினர் (25th Native Infantry) இந்த வதந்தியால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட புதிய வகை சீருடைகள் மற்றும் தொப்பிகளில் 'மத நம்பிக்கைக்கு எதிரான' பொருட்கள் இருப்பதாகக் கூறி அணிய மறுத்தனர். இதுவே ஒரு சிறு அளவிலான கிளர்ச்சிக்கு வித்திட்டது.

**ஆங்கிலேயர்களின் ஒடுக்குமுறை**

இந்த "பன்னீர் பூ" வதந்தி மக்களிடையே பெரும் கலவரத்தை ஏற்படுத்தக்கூடும் என்று அஞ்சிய பிரிட்டிஷ் கலெக்டர்கள், உடனடியாகத் தடையுத்தரவுகளைப் பிறப்பித்தனர்.

- தஞ்சாவூர் மற்றும் திருச்சியில் மக்கள் கூட்டமாகக் கூடுவதைத் தடுத்தனர்.
- வதந்தியைப் பரப்பியதாகக் கருதப்பட்ட சில உள்ளூர் மதப் பெரியவர்கள் மற்றும் 'பக்கிரிசுகளைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

**முக்கியத்துவம்**

இது ஒரு பெரிய ஆயுதப் போராக மாறாவிட்டாலும், தமிழக மக்கள் தங்கள் கலாச்சாரம் மற்றும் மத அடையாளங்கள் மீது ஆங்கிலேயர்கள் தொடுத்த தாக்குதலை எவ்வளவு தீவிரமாக எதிர்த்தார்கள் என்பதற்கு இந்த "பன்னீர் பூ கிளர்ச்சி" ஒரு சிறந்த சான்றாகும்.

1857-ஆம் ஆண்டு புரட்சியின் போது வட ஆற்காடு மற்றும் சித்தூர் பகுதிகளில் ஆங்கிலேயர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய முலபாகல் சாமி பற்றிய சுவாரஸ்யமான தகவல்கள் இதோ:

**முலபாகல் சாமி: ஆன்மீகப் புரட்சியாளர்**

1857 புரட்சியின் போது, வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான ஒரு முக்கியத் தொடர்புப் புள்ளியாகத் திகழ்ந்தவர் இந்த முலபாகல் சாமி. இவர் ஒரு 'பக்கிரி' அல்லது துறவியாகக் கருதப்பட்டாலும், உண்மையில் ஒரு சிறந்த புரட்சி கரத் தொடர்பாளராகச் செயல்பட்டார்.

**1. புரட்சியின் தூதுவர்**

முலபாகல் சாமி இன்றைய ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியான முலபாகல் (Mulbagal) என்ற இடத்தை மையமாகக் கொண்டு செயல்பட்டார். அங்கிருந்து வேலூர், ஆற்காடு மற்றும் மதராஸ் (சென்னை) ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்து, ஆங்கிலேயர்களுக்கு எதிரான செய்திகளைப்

பரப்பினார்.

**2. தீர்க்கதரிசனப் பிரச்சாரம்**

அக்காலத்தில் மக்களிடையே ஒரு நம்பிக்கை இருந்தது: “பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி 100 ஆண்டுகளுடன் (1757 - 1857) முடிவுக்கு வரும்.” இந்தத் தகவலை முலபாகல் சாமி தீவிரமாகப் பிரச்சாரம் செய்தார்.

- அவர் தனது போதனைகளின் போது, “வெள்ளையர்கள் விரைவில் இந்தியாவை விட்டு வெளியேறப் போகிறார்கள், டெல்லி சுல்தானின் ஆட்சி மீண்டும் மலரப் போகிறது” என்று கூறினார்.
- இது பாமர மக்கள் மற்றும் சுதேச சிப்பாய்கள் மத்தியில் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

**3. ரகசியத் தொடர்புகள்**

இவர் வட இந்தியாவில் இருந்து வந்த புரட்சித் தலைவர்களுடன் ரகசியத் தொடர்பில் இருந்ததாகக் கூறப்படுகிறது. புரட்சியின் அடையாளமாகக் கருதப்பட்ட ‘தாமரை மற்றும் சப்பாத்தி’ (Lotus and Chappati) விநியோக முறையைப் போன்றே, இவர் தென்னிந்தியாவில் ரகசியத் தகவல்களைப் பரிமாற சில குறியீடுகளைப் பயன்படுத்தினார்.

**4. கைது மற்றும் சிறைவாசம்**

முலபாகல் சாமியின் செல்வாக்கு அதிகரிப்பதைக் கண்ட பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள், அவர் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிப்பதாகக் குற்றம் சாட்டினர்.

- ஜூன் 1857-ல், வேலூர் கோட்டையில் இருந்த சிப்பாய்களைக் கலகத்திற்குத் தூண்டியதாக அவர் கைது செய்யப்பட்டார்.
- விசாரணையின் போது அவர் அஞ்சாமல் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பேசினார். இதன் விளைவாக, அவர் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

**5. வரலாற்றுத் தாக்கம்**

இவரைப் போன்ற மதப் பெரியவர்கள் மற்றும் துறவிகளின் தலையீடுதான், 1857 புரட்சியை வெறும் இராணுவக் கலகமாக இல்லாமல் ஒரு மக்கள் இயக்கமாக மாற்றியது. தமிழகத்தின் எல்லைப் பகுதிகளில் புரட்சித் தீ அணையாமல் இருந்ததற்கு முலபாகல் சாமி போன்றவர்களின் செயல்பாடுகளே முக்கியக் காரணம்.

**செங்கல்பட்டு எழுச்சி: அருணகிரி மற்றும் கிருஷ்ணா**

வட இந்தியாவில் சிப்பாய்கள் கிளர்ச்சி செய்த அதே காலகட்டத்தில், தமிழகத்தின் செங்கல்பட்டு பகுதியில் வாழ்ந்த சாதாரண மக்களிடையே பிரிட்டிஷ் எதிர்ப்பு உணர்வை வளர்த்தவர்களில் அருணகிரியும், கிருஷ்ணாவும் முக்கியமானவர்கள்.

**1. அவர்களின் பின்னணி:**

இவர்கள் முறையான இராணுவ வீரர்கள் அல்ல என்றாலும், ஆங்கிலேயர்களின் அடக்குமுறை மற்றும் அதிகப்படியான நிலவரி காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளையும், நெசவாளர்களையும் ஒன்றிணைக்கும் பணியைச் செய்தனர்.

**2. புரட்சித் திட்டம்:**

1857 ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில், வட இந்தியாவில் ஆங்கிலேயர்கள் தோற்கடிக்கப்படுவதாகப் பரவிய செய்திகளை இவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று பரப்பினர்.

- ரகசியக் கூட்டங்கள்: செங்கல்பட்டு ஏரிக்கரை மற்றும் மறைவான தோப்புகளில் ரகசியக் கூட்டங்களை நடத்தி, பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு வரி செலுத்த வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக்கொண்டனர்.
- இராணுவத் தொடர்பு: சென்னையில் இருந்த சுதேசப் படை வீரர்களுடன் (Native Infantry) இவர்கள் ரகசியத் தொடர்பில் இருந்ததாக பிரிட்டிஷ் உளவுத்துறை கருதியது. சென்னைக்கு அருகிலேயே செங்கல்பட்டு இருந்ததால், இவர்களின் செயல்பாடுகள் ஆங்கிலேயர்களுக்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

**3. கைது மற்றும் விசாரணை:**

இவர்களின் செயல்பாடுகள் குறித்து பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குத் தகவல் கிடைத்ததும், 1857 ஜூலை மாதம் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

- குற்றச்சாட்டு: “அரசுக்கு எதிராகப் போர் தொடுத்தல் மற்றும் மக்களைக் கலகத்திற்குத் தூண்டுதல்” ஆகிய குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டன.
- ஆவணம்: இவர்களின் கைது மற்றும் விசாரணை குறித்த விவரங்கள் அன்றைய தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் (Tamil Nadu Archives) உள்ள ‘Madras Judicial Consultations’ (1857) கோப்புகளில் இன்றும் பாதுகாக்கப்படுகின்றன.

**4. தண்டனை:**

அருணகிரி மற்றும் கிருஷ்ணா ஆகிய இருவருக்கும் அப்போதைய சிறப்பு நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இவர்கள் அந்தமான் தீவில் உள்ள செல்லுலார் சிறைக்கு (இஞுடுடுதடுச்ணூ ஒச்டிடூ) நாடு கடத்தப்பட்டதாகச் சில வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**இவர்களின் பங்களிப்பின் முக்கியத்துவம்:**

1857 புரட்சி என்பது வெறும் சிப்பாய்களின் போராட்டம் மட்டுமல்ல, அது சாமானிய மக்களின் போராட்டமாகவும் இருந்தது என்பதற்கு அருணகிரியும் கிருஷ்ணாவும் சிறந்த உதாரணங்கள். தமிழகத்தின் கிராமப்புறங்களில் கூட விடுதலை வேட்கை எவ்வளவு ஆழமாக இருந்தது என்பதை இவர்களின் செயல் நிரூபிக்கிறது.

மஹான்களின் தரிசனம்

# அம்பிகையின் அருள்பெற்ற கவிச்சக்கரவர்த்தி: ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் திவ்ய சரித்ரம்

- நிதீஸ்வரன்

தென்னகத்தின் ஆன்மீக மற்றும் இலக்கிய வரலாற்றில் பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியும், பதினேழாம் நூற்றாண்டும் மிகவும் சிறப்பான காலகட்டங்களாகும். விஜயநகர ஸாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, தெற்கே பல ராஜ்யங்கள் வலுவடையத் தொடங்கின. இக்காலத்தில் அவதரித்து, அரச போகங்களைத் துச்சமென மதித்து, பக்தி மற்றும் வைராக்கியத்தின் சிகரமாக விளங்கியவர் மாபெரும் கவி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் ஆவார்.

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் சுமார் கி.பி. 1582-ஆம் ஆண்டில் விரிஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள அடையப்பலம் என்ற கிராமத்தில் அவதரித்தார். இவரது தந்தை ஸ்ரீ நாராயண தீக்ஷிதர் மற்றும் தாயார் பூமிதேவி ஆவர். இவர், உலகம் போற்றும் மாபெரும் மஹானான ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரின் இளைய ஸஹோதரரான ஆச்சான் தீக்ஷிதரின் பேரனாவார்.

சிறு வயதிலேயே தந்தையை இழந்த நீலகண்ட தீக்ஷிதர், தனது பெரிய தாத்தாவான ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரின் அரவணைப்பிலேயே வளர்ந்தார். அப்பய்ய தீக்ஷிதர் தனது அந்திம காலத்தில், தமது சொத்துக்களைப் பேரன்களுக்குப் பாகம் செய்து கொடுக்க நினைத்தார். அப்போது சிறுவனான நீலகண்டரைக் கூப்பிட்டு, புத்தக அறைக்குள் சென்று ஏதேனும் நூல்களை எடுத்து வரச் சொன்னார். அச்சிறுவன் ‘ரகுவம்சம்’, ‘தேவீ மாஹாத்ம்யம்’ ஆகிய இரு நூல்களை எடுத்து வந்தான். இதைப் பார்த்து அளவற்ற ஸந்தோஷமடைந்த அப்பய்ய தீக்ஷிதர், “நீ தேவியின் அருளைப் பெறுவாய், மஹா கவி ஆவாய்” என்று பெரிய அனுக்ரஹம் செய்தார். ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் முக்தி அடைந்தபோது ஸ்ரீ நீலகண்டருக்கு வயது பன்னிரண்டு. அந்த இளம் பிராயத்தில் தன் பெரிய தாத்தாவின் பெருமையை நேரில் பார்த்து அனுபவித்ததை, அவர் தனது ‘வைராக்ய சதகம்’ என்ற நூலில் பின்வருமாறு அழகாகச் ச்லாகித்துக் கூறுகிறார்:

**अतिगम्भीरमनाविलमक्षोभ्यमदृष्टपारमविलङ्घयम् ।**
**अविरलतरङ्गसंकुलमैक्षिषि विज्ञानसागरं महताम् ॥**

அதிக ஆழமானதும், கல்மஷமற்றதும், கலக்க முடியாததும், கரை காணமுடியாததும், கடக்கத் தகாததும், இடைவிடாமல் அலைமோதுவதுமான பெரியோர்களின் அறிவுக் கடலை நான் கண்டிருக்கிறேன்.

தாத்தாவின் காலத்திற்குப் பிறகு, தனது தாயாரை அழைத்துக்கொண்டு நீலகண்டர் தெற்கு நோக்கிப் பயணமானார். மதுரைக்குச் செல்வதற்கு முன்பாக, காவேரி நதிக்கரையில் சில காலம் வசித்தார். பால்யத்திலேயே முகுந்த விலாஸம், ரகுவீர ஸ்தவம், நள சரித்திரம், கங்காவதரணம் போன்ற அற்புத நூல்களை இயற்றினார். இளம் வயதிலேயே இவருக்கு சிவபக்தியும், அம்பிகா பிரசாதமும், உலக பற்றுக்களை அறுக்கும் நிவிருத்தி மார்க்கத்தில் ருசியும் இயல்பாகவே அமைந்திருந்தன. கங்கையின் மீதும், காசி க்ஷேத்திரத்தின் மீதும் அவருக்கு அளவற்ற பக்தியும் மரியாதையும் இருந்தது. கலியுகத்தின் தோஷங்களை வெல்வதற்கு நள சரித்திரமும், சகல பாவங்களைப் போக்க காசி யாத்திரையுமே சிறந்த உபாயங்கள் என்பதைத் தனது ‘நள சரித்திரம்’ நூலில் கீழ்க்கண்டவாறு பெருமையுடன் குறிப்பிடுகிறார்:

**कालं जेतुमुपायौ द्वौ कलिकल्मषसंप्लुतम् ।**
**कथा वा निषधेशस्य काशी वा विश्वपावनी ॥**

கலியின் பாவங்களால் சூழப்பட்ட இந்தக் காலத்தை வெல்லுவதற்கு, நிஷத நாட்டு மன்னனான நள மகாராஜனின் சரித்ரமும், உலகைப் புனிதமாக்கும் காசி யாத்திரையும் ஆகிய இவ்விரண்டுமே உபாயங்களாகும்.

தனது பல காவியங்களில் காசிக்குச் செல்ல வேண்டும் என்ற தீவிரமான ஆசையை அவர் பலவாறு வெளிப்படுத்தியுள்ளார். ஆனால், அந்தப் புனிதப் பயணத்தை அவர் நேரில் சென்று நிறைவேற்றினாரா என்பது சரித்ர வாயிலாகத் தெளிவாக அறியக் கிடைக்கவில்லை.

தனது நாற்பது வயதுக்கு மேல், ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் மதுரை மாநகரை அடைந்தார். அவரது அளப்பரிய வித்வத், கவித்வம், குலப்பெருமை மற்றும் உலக ஞானம் ஆகியவை அவரைத் திருமலை நாயக்கரின் ஸபைக்குக் கொண்டு சேர்த்தன. பதினேழாவது நூற்றாண்டின் இரண்டாவது காலாண்டில் அவர் மன்னர் திருமலை நாயக்கரின் அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

மந்திரியாக இருந்த காலத்தில், ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேஸ்வரர் கோவிலின் திருப்பணிகள், உத்ஸவங்களின் பாகுபாடுகள் ஆகியவற்றை ஸ்ரீ ஹாலாஸ்ய மாஹாத்ம்யம் மற்றும் ஆகம சாஸ்த்ரங்களின்படி மிகச் சிறப்பாகத் திட்டப்படுத்திச் செயல்படுத்தினார்.

உலகப் புகழ்பெற்ற “புதுமண்டப” நிர்மாணம் இவருடைய நேரடி மேற்பார்வையில்தான்

நடைபெற்றது. புதுமண்டபத்தில் 'ஏகபாத மூர்த்தி' சிலையுள்ள கல்தூணை நாட்டியபோது, வைஷ்ணவப் பண்டிதர்கள் அதை ஆட்சேபித்தனர். ஆறு மாத காலம் நடந்த இந்த மாபெரும் விவாதத்தில் சைவர்களின் சார்பாகத் தலைமை தாங்கி, சிவோத்கர்ஷத்தை நிலைநாட்டி, அந்தச் சிலையை நிறுவினார் ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர். இந்தக் காலக்கட்டத்தில்தான் மதுரை மீனாக்ஷி ஸுந்தரேஸ்வரரின் 64 திருவிளையாடல்களை விளக்கும் 'சிவலீலார்ணவம்' என்னும் மஹா காவியத்தையும், 'நீலகண்ட விஜய சம்பு', 'சிவோத்கர்ஷ மஞ்ஜரீ', 'சிவதத்வ ரஹஸ்யம்' போன்ற நூல்களையும் இயற்றினார்.

புதுமண்டபத்தில் திருமலை நாயக்கரின் மூத்த பட்டத்து ராணியின் சிலையைச் சில்பி செதுக்கிக்கொண்டிருந்தார். அப்போது அந்த உருவத்தின் இடது தொடையில் சில்லுப் பெயர்ந்து பின்னம் ஏற்பட்டுவிட்டது. சில்பி மிகவும் வருந்தியபோது, அங்கு வந்த ஸ்ரீ தீக்ஷிதர், "உத்தம ஸ்திரீ லக்ஷணம் பொருந்திய மஹாராணிக்கு இடது தொடையில் இதே இடத்தில் பெரியதோர் மச்சம் இருக்க வேண்டும்; இது ஸாமுத்ரிகா லக்ஷணங்களில் கூறப்பட்டுள்ளது. ஆகையால் நீ அந்தச் சிலையை அப்படியே வைத்துவிடு" என்று கூறினார்.

சிலை பின்னமானதைக் குறித்து அரசன் சில்பியிடம் கேட்டபோது, தீக்ஷிதர் கூறியதை அவன் கூறினான். தன் மனைவியின் அந்தரங்க அங்கத்திலுள்ள மச்சத்தைப் பற்றி அவர் எப்படி அறியலாம் என்று வீண் ஸந்தேஹம் கொண்ட மன்னன், கடும் கோபத்துடன் ஸ்ரீ தீக்ஷிதரை அழைத்து வர உத்தரவிட்டான்.

தேவியின் அருளால் இதைத் தனது ஞான திருஷ்டியால் முன்கூட்டியே உணர்ந்த தீக்ஷிதர், ஐஸ்வர்யவான்களின் பேதமையை எண்ணி வருந்தினார். மன்னன் தண்டனை அளிக்கும் முன் தமக்குத் தாமே தண்டனை கொடுத்துக்கொள்வதாகக் கருதி, பூஜையறையிலிருந்த கர்ப்பூரத்தைத் தன் இரு கண்களிலும் வைத்துக் கண்களை அவித்துக் கொண்டார்!. கண் அவிந்த அந்த நிலையிலும், பரமேச்வரியின் திவ்ய மங்கள ஸ்வரூபத்தைப் பாதம் முதல் சிரஸ் வரை தியானித்து மெய்யுருகி ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பித்தார். அவர் ஸ்தோத்ரம் செய்யும்போது தேவியின் அவயவங்கள் அவருக்குப் ப்ரத்யக்ஷமாகத் தெரிந்தன; ஸ்தோத்ர முடிவில் அவர் பூரணமாகத் தன் கண் ஒளியை மீண்டும் பெற்றார். இழந்த பார்வையைக் கொடுத்த அந்த அற்புதத் துதியே "ஆனந்த ஸாகர ஸ்தவம்" ஆகும்.

உண்மையை உணர்ந்த மன்னன் பதறிப்போய் ஓடிவந்து அவர் கால்களில் விழுந்து, பரிதவித்து மன்னிப்பு வேண்டினான். மன்னனை மன்னித்த போதிலும், ராஜ சேவையில் அவருக்கு அதிருப்தியும், உலக வாழ்வில் விரக்தியும் ஏற்பட்டது. மனிதர்கள் 'நான் செய்கிறேன்', 'எனது குடும்பம்' என்ற அகங்காரச் சுமையைத் தாங்களே சுமந்துக் கொண்டு துன்பப்படுவதைக் கண்டு, அந்தப் பாரத்தை இறைவியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தமது 'ஆனந்த ஸாகர ஸ்தவத்தில்' அழகாக அறிவுறுத்துகிறார்:

**आधाय मूर्धनि वृथैव भरं महान्तं मूर्खा**
**निमज्जथ कथं भवसागरेऽस्मिन् ।**
**विन्यस्य भारमखिलं पदयोर्जनन्या विसब्धमुत्तरत**
**पल्वलतुल्यमेनम् ॥**

*ஆனந்த ஸாகர ஸ்தவம் - 45*

மூடர்களே! இந்த ஸம்ஸாரக் கடலில் ஒரு பெரிய சுமையை வீணாகத் தலையில் தூக்கிக்கொண்டு ஏன் மூழ்கித் தவிக்கிறீர்கள்? உங்கள் பாரங்கள் அனைத்தையும் உலகத் தாயான அம்பிகையின் பாதங்களில் இறக்கி வைத்துவிட்டு, கவலையின்றி இந்தக் கடலை ஒரு சிறிய நீர்க்குட்டையைத் தாண்டுவது போல் எளிதாகக் கடந்து விடுங்கள்.

மேலும், இறைவன் நமக்கு அருள்கிறானோ இல்லையோ, அவனைப் பற்றிக்கொண்டோம் என்ற உறுதியான நம்பிக்கையே நமக்கு மாபெரும் வெற்றியைத் தரும் என்ற தைரியத்தைப் பின்வரும் ஸ்லோகத்தில் சொல்கிறார்:


**आधाय मूर्धनि वृथैव भरं महान्तं मूर्खा**
**निमज्जथ कथं भवसागरेऽस्मिन् ।**
**विन्यस्य भारमखिलं पदयोर्जनन्या विसब्धमुत्तरत**
**पल्वलतुल्यमेनम् ॥**

*(ஆனந்த ஸாகர ஸ்தவம் - 6)*

ஓ ஜகன்மாதாவே! நீ எங்களை ஏற்றுக்கொண்டாலும் சரி, புறக்கணித்தாலும் சரி; "நாங்கள் உன்னுடைய தாஸர்கள்" என்ற ஒரே வார்த்தையினாலேயே இந்த உலகங்களை நாங்கள் ஜயித்து விடுவோம். யமதர்மனின் கொடிய தூதர்களை விரட்டியடிக்க இந்த ஒரு தைரியமே எங்களுக்குப் போதுமானது.

தனது மந்திரி பதவியைத் துறந்து, மதுரையை விட்டகன்று தாமிரபரணி நதிக்கரையிலுள்ள "பாலாமடை" (நீலகண்ட ஸமுத்ரம்) என்ற கிராமத்தில் குடியேறினார். அங்கு 'வைராக்ய சதகம்', 'சாந்தி விலாஸம்' போன்ற நூல்களை இயற்றி, உலகிற்கு நிலையான உபதேசத்தை அருளினார். இறுதியாக பாலாமடை கிராமத்திலேயே ஸந்யாஸம் பூண்டு முக்தி அடைந்தார்.

ஆன்மீக ஈடுபாடும், ஈடிணையற்ற கவித்திறனும், மாறாத வைராக்கியமும் ஒருங்கே அமைந்த ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் சரித்ரமும், அவரது காவ்யங்களும் நமக்கு என்றென்றும் துணையாக வருகிறது.



# கொன்றை வேந்தன் கதைகள்

## ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்

*கலாவதி*

"நம்மூருக்கு ஒரு அண்ணா வந்துருக்காருடா. அவர்கிட்ட கத்துக்க ஜிம் பாடி, விளையாட்டு, யோகான்னு நிறைய விஷயங்கள் இருக்கு, வரியா போகலாம்?" என்று கேட்டான் கதிரவன்.

அந்த அண்ணா ஊருக்கு வந்து கொஞ்ச நாள்தான் ஆகிறது. சீனுவுடன் படிக்கும் மற்ற மாணவர்கள் அவரைப் பற்றி பலமுறை சொல்லியிருந்தார்கள். இதுவரை உடம்பே வளையாத சரவணனுக்கு, அந்த அண்ணா கற்றுக் கொடுத்த யோகாவால் உடல் நன்றாக வளைய ஆரம்பித்தது.

அவருக்கு கதிரும், சீனுவும் போன் செய்தார்கள். அவர்களைப் பற்றிய விவரங்களை கேட்டுவிட்டு "ரெண்டு பேரும் நாளைக்கு காலை 6.30 மணிக்கு மறக்காம வந்துருங்க" என்று போனை வைத்துவிட்டார்.

இரவு சரியாக தூங்கினார்களோ இல்லையோ, காலையில் சரியான நேரத்துக்கு போய் விட்டார்கள். ஆனால், அந்த அண்ணனோ, பொறுமையாக 7.15 மணிக்கு மேல் வந்து சேர்ந்தார். வந்தவர், இவர்களுக்கு அவசர அவசரமாக சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். அவர்களுக்கு சொல்லிக் கொடுத்தபோதே அவருக்கு கோபம் வந்தது. கடுமையான சொற்களால் வசை பாடினார். இருவரும் வெளியே வந்ததும் சீனு "அந்தாளோட நடவடிக்கையே எனக்கு பிடிக்கல. நான் இனிமே இங்க வரல" என்றான்.

"கோபம் இருந்தாலும், நிறைய விஷயம் தெரியுமே டா. சமாளிச்சிக்கலாம்" என்றான் கதிர்.

"அப்படினா, நீ மட்டும் போய்கோ" என்று சொல்லி அமைதியானான் சீனு.

சீனுவை தவிர மற்றவர்கள் தொடர்ந்து அந்த அண்ணாவின் வகுப்புக்கு சென்றார்கள். அவர் சொல்லிக் கொடுப்பதை பற்றி பேசுவார்கள். சீனு அந்த பேச்சை கண்டுகொள்ளவே மாடடான்.

சில நாட்களுக்குப் பிறகு, வகுப்பில் மாணவர்கள் பேசும்போதெல்லாம் அந்த வகுப்பைப் பற்றியும், அந்த அண்ணாவின் கோபம், திமிர் போன்றவற்றையும் பேசுவார்கள். கோபமாக அவரை விமர்சிப்பார்கள். அண்ணா என்ற வார்த்தை மறைந்து அந்தாள் என்றெல்லாம் திட்டிக் கொள்வார்கள். அவரது கோபத்துக்கு பயந்து மாணவர்கள் அடிக்கடி தவறு செய்வதாகவும், அதற்கு அவர் திட்டுவதாகவும் சொல்லி வருத்தப்படுவார்கள். சீனு அப்போதும் கண்டுகொள்ளாமலேயே இருப்பான்.

ஒருநாள், சீனுவிடம் கதிர் ஓடிவந்து, "டேய், நீ சொன்னது சரியாதான் இருக்கு" என்றான். 'என்ன' என்பது போல் சீனு பார்த்தான். "அவரோட கோபம் அதிகமா போகுது". இன்னைக்கு நம்ம வினோத்திடம் கோபப்பட்டு பயங்கரமாக அடித்துவிட்டார். அதுல வினோத்துக்கு நிறைய ரத்தம் வந்து, அவனுடைய அம்மா, அப்பா போலீஸ் வரைக்கும் போயிட்டாங்க. போலீசும் உடனே வந்து அந்த இடத்துக்கு சீல் வச்சிட்டு அவரை கூட்டிட்டு போயிட்டாங்க" என்று சொல்லி முடித்தான்.

"எவ்வளவு திறமை இருந்தாலும், அவங்ககிட்ட நல்ல குணம் இல்லேன்னா அவங்ககிட்ட திறமைகள் இருக்கறது வீண் அப்படின்னு எங்க அம்மா அடிக்கடி சொல்லுவாங்க. அதைத்தான் நானும் செய்தேன்" என்றான் சீனு.



# விழாக்களும் விரதங்களும்

-செல்வம்

***மார்ச் 26, 2026, ராம நவமி:***

**நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே**
**தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே**
**சென்மமும் மரணமும் இன்றித் தீருமே**
**இம்மையே இராமவென் றிரண்டெழுத்தினால்**
**-(கம்பராமாயணம்: - சிறப்புப் பாயிரம் 14)**

நம் பாரத தேசத்தின் கதாநாயகனாகவும், ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வை எப்படி அமைக்க வேண்டும் என்பதற்கும், ஒரு ராஜ்ஜியம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கும் உதாரணமாக திகழ்ந்தவர் ஸ்ரீராமபிரான். அவர் அவதரித்த தினத்தை ஸ்ரீராமநவமி என்று நாடு முழுவதும் கொண்டாடுகிறோம். இவ்வருடம் மார்ச் 26,2026 அன்று ஸ்ரீராமநவமி அனுசரிக்கப்படுகிறது.



"ராமன்" என்ற பெயருக்கு "ஆனந்தத்தில் நிலைத்திருப்பவன்" என்றும் "மற்றவர்களுக்கு ஆனந்தம் வழங்குபவன்" என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. இந்த வரையறைக்கு உயிரூட்டும் வகையில் வாழ்ந்தவர் ஸ்ரீ ராமன்.

வெளிப்படையாக பல துன்பங்களை எதிர்கொண்டாலும், மனஅமைதியையும் தர்மநெறியையும் குலைக்காமல், உள்ளார்ந்த ஆனந்தத்தில் நிலைத்திருந்த வாழ்க்கை முறைதான் ராமனின் சிறப்பு என அறிஞர்கள் கூறுகின்றனர்.

சுகமும் துக்கமும் மாறி வரும் வாழ்க்கையில், மனம் சலனமடையாமல் இருப்பதும், தானும் அமைதியாக இருந்து பிறருக்கும் அந்த அமைதியைப் பகிர்வதும் யோகமாக கருதப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையை அடைவதே "யோகி"யின் அடையாளம். இதனை அடைய சாதாரண மனிதர்களுக்கான வழி வேதங்களும் சாஸ்திரங்களும் காட்டிய தர்ம ஒழுக்கத்தை கட்டுப்பாட்டுடன் பின்பற்றுவதுதான் என கூறப்படுகிறது.

சொந்த விருப்ப-வெறுப்புகளைக் கடந்து, சாஸ்திர நெறிப்படி வாழத் தொடங்கினால், மனஅலைச்சல் குறைந்து தெளிவு உருவாகும். இந்த மனத் தெளிவு ஆனந்தத்தையும் இலகுவான வாழ்வையும் அளிக்கிறது; இறுதியில் அது மோக்ஷம் நோக்கி வழிநடத்தும் என்பதும் இந்தக் கருத்தின் மையம். மக்களுக்கு வாழ்வியல் முன்னுதாரணமாகவே விஷ்ணுவின் அவதாரமாக ராமன் பூமியில் வந்தார் என இத்தகவல்கள் வலியுறுத்துகின்றன. ராமனின் உரைகளில் எங்கும் தனிப்பட்ட கருத்தை முன்வைப்பதற்குப் பதிலாக, "ரிஷிகள் கூறுவது", "சாஸ்திரம் கூறுவது" என்ற பணிவான அணுகுமுறையே பிரதிபலிக்கிறது. வேதங்களின் சாராம்சமாகக் கருதப்படும் பரமாத்மா தானே, வேத தர்மத்திற்குச் சிரம் தாழ்த்தி வாழ்ந்ததன் மூலம், அதனைப் பின்பற்றுவதிலேயே உண்மையான ஆனந்தம் உள்ளது என்பதை எடுத்துக்காட்டினார்.

**ராமோ விக்ரஹவான் தர்ம: -** தர்மத்தின் உருவகமாகவே ராமன் விளங்குகிறார் என்ற இந்தப் பாரம்பரிய நம்பிக்கை, இன்றும் மக்களிடையே நிலைத்து நிற்கிறது. மனமார "ராமா, ராமா" என ஜபிக்கும்வர்களின் மனக்கழிவுகள் நீங்கி, தர்மப் பாதையில் நிலைத்திருந்து ஆனந்தமான வாழ்க்கையை நடத்த முடியும் என்பதே இந்த வாழ்வியல் தத்துவத்தின் நிறைவு.

II. ***ராம நாம மகிமை - ராமநாமத்தின் அதிசய சக்தி - ஆன்மீகம், அறிவியல், அனுபவம் ஒன்றிணையும் தருணம்***

"ராமா" என்ற நாமம் சாதாரண ஒலி அல்ல; அது வேதங்களின் சாரத்தையும், பிரபஞ்சத்தின் ரகசியத்தையும் தன்னுள் தாங்கி நிற்கும் தாரக மந்திரமாக கருதப்படுகிறது. திரேதா யுகத்தில் அவதரித்த புருஷோத்தமனான ஸ்ரீ ராமர், தர்மத்தின் உயிரோட்டமாகவும், பரப்ரஹ்மத்தின் வெளிப்பாடாகவும் விளங்குகிறார். "ராமா" என்ற ஒரே நாமத்தை உணர்ந்தாலே, வேதங்கள் கூறும் தர்மமும் பிரம்மமும் நமக்கு விளங்கும் என்று முனிவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

**ஒரு பெயரின் சக்தி - ராமநாமத்தின் மேன்மை**

ஒரு மனிதன் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது, அவன் பெயரை அழைத்தாலே விழித்துக் கொள்கிறான். இதுவே பெயரின் சக்தி. அப்படியானால், "ராமா", "கிருஷ்ணா" போன்ற தெய்வீக நாமங்களுக்கு எவ்வளவு பேராற்றல் இருக்கும் என்பதை சிந்திக்கலாம்.

**"ரா" மற்றும் "ம" - ஆன்மீக விஞ்ஞானம்**

"ரா" என்பது அக்னி பீஜம். அது மனிதனின் அஹங்காரத்தை எரித்து அழிக்கும் வல்லமை கொண்டது. "ம" என்பது அம்ருத பீஜம்; அது மமகாரத்தை சாந்தப்படுத்தி மனதில் அமுதம் போன்ற அன்பை நிரப்புகிறது.

இவ்விரண்டும் சேர்ந்து "ராம" என்ற நாமமாக வெளிப்படும் போது, அது மனிதனுக்கு இஹலோகம் மற்றும் பரலோகம் இரண்டிலும் இன்பத்தை அளிக்கக்கூடியதாகிறது.

ஆன்மீக நோக்கில், "ரா" - தீயை, "ஆ" - சூரியனை, "ம"- சந்திரனை குறிக்கின்றன. இம்மூன்றும் வெளிச்சமும் சக்தியும் அளிப்பவை. மனித உடலிலும் இவை உள்ளன: கண்களில் சூரியன், மனதில் சந்திரன், வாக்கில் அக்னி. இவை ஒருங்கிணைந்ததே மனித வாழ்வின் சக்தி.

யோக சாஸ்திர பார்வையில், மூலாதாரத்தில் இருக்கும் அக்னி "ரா" பீஜமாகவும், ஸஹஸ்ராரத்தில் இருக்கும் பிராணன் "ம" பீஜமாகவும் கருதப்படுகிறது. இந்த இரண்டும் ஒன்றிணையும் தருணமே "ராம" என்ற தாரக மந்திரத்தின் உண்மையான அனுபவமாகும். இதன் பலன் - பயமின்மை, மரணத்தை மீறும் நிலை, எல்லையற்ற ஆனந்தம், இறுதியில் பரமாத்மாவுடன் ஐக்கியம்.

**பக்தர்களின் அனுபவம் – வரலாறு பேசுகிறது**

ராமநாமத்தின் மகிமையை பல சான்றோர்கள் தங்கள் வாழ்க்கையால் நிரூபித்துள்ளனர். தியாகராஜ சுவாமிகள் 96 கோடி தடவை ராமநாமத்தை உச்சரித்ததாகக் கூறப்படுகிறது. அவரின் கீர்த்தனைகள் பக்தியையும், மனித வாழ்வின் இனிமையையும் உலகுக்கு அளித்தன. ராமநாமம் வெறும் ஆன்மீக முன்னேற்றம் மட்டுமல்ல; அது வாழ்க்கையை அழகாக்கும் சக்தியும் ஆகும். பயம் நீங்க வேண்டும், செயல்களில் வெற்றி பெற வேண்டும் என்றால் "ஸ்ரீராமஜயம்" என்று எழுதும் பழக்கம் நம்மிடம் பரவலாக உள்ளது. எழுதினாலும், சொன்னாலும் - ராமநாமம் மனதை உறுதியாக்கும்.

**ஆஞ்சநேயரும் ராமநாமத்தின் வல்லமை**

ஆஞ்சநேயர் ராமநாமத்தை ஜபித்தபோது, அவரது உள்ளத்தில் 33 கோடி ராமநாமங்கள் எழுந்ததாகக் கூறப்படுகிறது. அதனால் தான் அவர் அசாத்யமான செயல்களையும் சாதித்தார். எந்த எதிர்பார்ப்பும் இன்றி ஜபிக்கப்படும் ராமநாமம், பல மடங்கு பலனை அளிக்கும் என்பது பக்தர்களின் அனுபவம்.

**ராமநாமம் – தீய சக்திகளை அழிக்கும் அம்பு**

இராமனின் பாணங்கள் எதிரிகளை வீழ்த்தியதுபோல், ராமநாமம் மனிதனுள் இருக்கும் தீய சக்திகளை அழிக்கிறது. இதை உணர்ந்தவர்களுக்கு, ராமநாமம் ஒரு பாதுகாப்புக் கவசமாக மாறுகிறது.

**கம்பராமாயணம் கூறும் சான்றுகள்**

தமிழ் இலக்கிய மாமேதை கம்பர், ராமநாமத்தின் பெருமையை தனது இராமகாதையில் அழகாக வர்ணிக்கிறார். வாலி, தன் மார்பில் பாய்ந்த அம்பை முறிக்க முடியாமல் அதில் எழுதப்பட்டிருந்த "ஸ்ரீராம" நாமத்தை காணும் தருணம், அந்த நாமத்தின் தெய்வீக சக்தியை வெளிப்படுத்துகிறது.

அதேபோல், ஜடாயுவின் அண்ணன் சம்பாதி, தனது எரிந்த சிறகுகள் மீண்டும் வளரவென வானரர்களிடம் "ஸ்ரீராம" நாம சங்கீர்த்தனம் செய்யச் சொல்கிறார். ஹனுமான், அங்கதன், ஜாம்பவான் உள்ளிட்டோர் பக்தியுடன் ராமநாமம் பாட, சம்பாதியின் சிறகுகள் மீண்டும் வளரும் அதிசயம் நிகழ்கிறது. இது ராமநாமத்தின் உயிரூட்டும் சக்தியை எடுத்துக்காட்டுகிறது.

**தாரக மந்திரம் – மோக்ஷத்தின் வாசல்**

உபநிஷத்துகள் "ராமா" நாமத்தை "தாரகபிரஹ்மம்" எனப் புகழ்கின்றன. இது சம்சார சமுத்திரத்தை கடக்க உதவும் மந்திரம்.

நாட்டில் உள்ள எல்லா மக்களிடையேயும் தெய்வ பக்தியும், நன்னடத்தையும் வேரூன்றி வளரவேண்டும் என்று எல்லோரும் ஸ்ரீ ராமநவமியன்றும், மறுநாள் புனர் பூஜையிலும், ஸ்ரீராம சந்திர மூர்த்தியைப் பிரார்த்தித்து கொள்வோமாக!

---------------------------

**நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்**
**வீ டியல் வழியதாக்கும் வேரியம் கமலை நோக்கும்**
**நீடிய அரக்கர் சேனை நீறு பட்டழிய வாகை**
**சூடிய சிலை ராமன் தோள்வலி கூறுவார்க்கே.**

விரும்பியதை அடைந்து, அறிவுத் திறனும், புகழும் கிடைக்கும்.முக்தி மார்க்கத்தை அடையும் வழியும் கொடுத்தருளப் பட்டு திருமகளும் அருட்பார்வை புரிவாள்.எண்ணிலடங்கா அரக்கர்கள் நிறைந்த போர்ப்படையை அழிந்து வெற்றி மாலையை சூடிய.ராம பெருமானின் வலிமை மிகுந்த வில்லினை ஏந்திய தோள். அப்படிப்பட்ட பெருமானை போற்றி பாடுபவர்க்கு நன்மைகள் பல அமையப்பெரும்

------------------------------------

**மும்மை சால் உலகுக்கெல்லாம் மூல மந்திரத்தை முற்றும்**
**தம்மையே தமர்க்கு நல்கும் தனிப் பெரும் பதத்தை, தானே**
**இம்மையே, எழுமை நோய்க்கும் மருந்தினை ராமன் என்னும்**
**செம்மைசேர் நாமம் தன்னை கண்களில் தெரியக் கண்டான்**

முற்பிறவி, இப்பிறவி, இனி வரும் பிறவி என்னும் மூவகை பிறவிகளுக்கும் இடமாக இருக்கின்ற இந்தப் பூவுலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் மூலமந்திரமாய் இருந்து; "நான் யார்?" என்ற கேள்விக்கு "நான் பிரம்மம்" என்று அறிந்து கொள்ளும் ஞானப் பொருளை; இனி பிறவியில்லை என்னும் நிலையை இந்தப் பிறவியிலேயே தரக்கூடிய அருமருந்தாகிய மந்திர சொல்லாகிய, "ராம" எனும் பெருமை மிக்க இரண்டு எழுத்தை வாலி தன் கண்களால் தெரியக் கண்டான்.

# நல்ல தொண்டில் நல்ல உள்ளம்

தொழுநோயிலிருந்து குணமடைந்தும் உடல் குறைபாடுகளுடன் வாழ்பவர்களுக்கு கடந்த 38 ஆண்டுகளாக சமூகப் பொருளாதார மறு வாழ்வு நடத்தி வருகிறது சென்னை ஸ்ரீராமகிருஷ்ணா மடம். ‘தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தில்’ (NLEP) அரசுப் பணியாற்றிய திரு. சிவா அவர்கள் முன்னெடுப்புடன், 1988-ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இந்தப் பணி இடையறாது தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

**தொழுநோயால் வரும் உருக்குலைவுகள்**

தொழுநோயை முழுமையாகக் குணப்படுத்தி விட முடியும். ஆரம்பத்தில் தேமல் போல தோலில் ஆரம்பிக்கும் தொழுநோய் உடனே மருந்து எடுத்துக் கொள்ளாவிட்டால் அடுத்து நரம்புகளைத் தாக்கத் துவங்கும். இந்நிலையில் கை கால்களில் உணர்ச்சி இழப்பு ஏற்பட்டு உடலில் சில உருக்குலைவுகள் ஆரம்பிக்கும். இப்படித் தாமதமாகச் சிகிச்சை எடுப்பவர்களுக்கு ஆறாத புண்கள், விரல்கள் கரைந்து போதல், கை கால்கள் உள்நோக்கி மடிந்து போதல், மரத்துப் போதல் போன்ற பல குறைபாடுகள் (Leprosy Cured but Deformed) ஏற்படுகிறது.

**மறுவாழ்வுப் பணி ஏன் தேவை?**

தொழுநோய்க்கு அரசு மருத்துவமனைகள் முழுமையாகக் குணப்படுத்த சிகிச்சை தருகின்றன. ஆனால் தொழுநோயால் கை கால் முடமாகிப் போனவர்க்கு மறு வாழ்வு தருவதெல்லாம் அரசின் திட்டத்தில் இல்லை. எனவே அவர்களுக்கு மறு வாழ்வு தர வேண்டியது அத்தியாவசியமான பணி.

**தனியே வாழவைக்கும் மறுவாழ்வுப் பணி**

ஊருக்கு வெளியே காட்டுப்பகுதியில் தொழுநோயால் உடல் உருக்குலைந்தவர்கள் மட்டுமே தனியாக வாழும் காலனிகளோ அல்லது விடுதிகளோ அமைத்து அதில் அவர்களைத் தங்க வைக்கின்றனர். இப்படிப்பட்ட மறுவாழ்வுப் பணிகளையே கிறிஸ்தவ மிஷினரிகள் செய்கின்றனர். இந்த முகாம்களில் தங்கி இருப்பவர்கள் சமுதாயத்தால் கைவிடப்பட்டு கை ஏந்தும் சூழ்நிலையில் வாழ்நாள் முழுவதும் கழிக்கிறார்கள்.

**குடும்பத்துடன் வாழ வைக்கும் மறுவாழ்வுப் பணி**

சென்னை ராமகிருஷ்ணா மடம் நடத்தி வரும் மறுவாழ்வுப் பணி இதற்கு முற்றிலும் வேறுபட்டது. “தொழுநோயில் இருந்து குணமான மாற்றுத்திறனாளிகளை குடும்பத்திலிருந்து பிரிக்காமல் அவர்களே சுயமாகத் தொழில் செய்து குடும்பத்துடனேயே அவர்களை வாழ வைப்பது” - என்பது ராமகிருஷ்ணா மடத்தின் தனித்துவமான மறுவாழ்வுப் பணி.

**குடும்பத்தினருக்கு புரிதலை ஏற்படுத்துதல்**

“தொழுநோயில் இருந்து குணமானவர்கள் மூலமாக தொழுநோய் பரவுவதில்லை. கை கால்கள் மடங்கி இருப்பதும் கை கால்களில் உள்ள புண்களும் தாமதமாகச் சிகிச்சை எடுத்துக் கொண்டதால் வந்த விளைவு. இப்படிப்பட்டவர்களுடன் குடும்பம் நடத்துவதால் நோய் பரவாது” - என்ற உண்மையை குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உளவியல் ஆலோசனை மூலம் புரிய வைத்து, அவர்களை குடும்பத்துடனும் சமூகத்தில் நன்மதிப்புடன் வாழவைக்கும் உன்னதமான பணி இது.

**பொருளாதார மறுவாழ்வு**

பொருளாதார உதவி, மற்றும் சுய தொழில் புரிவதற்கான எல்லா வகையான உதவிகள், சுய உதவிக் குழுக்கள், தொழிற்பயிற்சி, குறுங்கடன்கள், அரசுத் திட்டங்கள் வழியாக மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்கள் போன்றவை இதில் அடங்கும்.

**மருத்துவ மறுவாழ்வு**

சி.எஸ்.ஐ.ஆர்-மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சென்னை கிங் நிறுவனம் ஆகியவற்றுடனான கூட்டு ஆராய்ச்சி மூலம் புண்களைக் குணப்படுத்துவதற்கான சிகிச்சை முறைகளுடன், இலவச உடல் பரிசோதனைகள், பொது மருத்துவ முகாம்கள், உளவியல் ஆலோசனைகள், கண் மற்றும் பல் மருத்துவ முகாம்கள், புண் சிகிச்சை, பிசியோதெரபி, ஹோமியோபதி சிகிச்சை, ஊட்டச்சத்துப் பொருட்கள், மருந்துகள், MCR காலணிகள், சுய-பராமரிப்புத் தொகுப்புகள், செயற்கை உறுப்புகள் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன.

**தன்னார்வலர்களும் பயனாளிகளும்**

திரு.சிவா அவர்களுடன் சக்ஷம் அமைப்பினரும் மற்றும் டாக்டர் சிவசுப்ரமணியன், டாக்டர் சந்திரமௌலீஸ்வரன், முரளினாத், லஷ்மணன், லக்ஷ்மி தேவி உட்பட 15 பேர் கொண்ட தன்னார்வலர்களின் குழு, இது வரை 2,500 பேருக்கு மறுவாழ்வு தந்துள்ளது சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், சேலம், மதுரை ஆகிய ஊர்களில் வாரந்தோறும் நடத்தி வரும் முகாம்கள் அடுத்ததாக கோயம்புத்தூரிலும் ஆரம்பிக்க இருக்கிறது. தொழுநோய் மாற்றுத்திறனாளிகள் பிச்சைக்காரர்களாக மாறும் சூழ்நிலையை பெருமளவு குறைந்துள்ள இவர்களது தன்னலமற்ற தொண்டு மேலும் சிறக்க ஸ்ரீதமிழ் வாழ்த்துகிறது. மேலும் விவரங்களுக்கு 9962013152 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## சினிமா சாரல்

- சேஷு

### வாய்தா - Amazon Prime Video OTT

2022-ஆம் ஆண்டு வெளியான இத்திரைப்படம் நீதித்துறை மற்றும் காவல் துறையில் நிலவும் சிக்கல்களை, ஒரு விளிம்புநிலை மனிதனின் போராட்டத்தினைச் சொல்லுவதாக இயக்குநர் மஹிவர்மன் எடுத்துள்ளார். இப்படத்தில் கேடி மு. ராமசாமி, நாசர், புகழ் மகேந்திரன், பௌலின் ஜெசிகா உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

இக்கதையின் சுருக்கம் பார்ப்போம், சேலம் மாவட்டத்தில் வசிக்கும் ஒரு ஏழை சலவைத் தொழிலாளி (அப்புசாமி), தன் கடை வாசலில் இஸ்திரி பெட்டிக்குள் மரக்கரியை எரித்து போட்டுக் கொண்டிருக்கும் போது பைக்கில் செல்ஃபோன் பேசிக் கொண்டே வந்து இவர் மீது மோதி விபத்து ஏற்பட்டு தனது வலது காலை தூக்க முடியாத வண்ணம் காயமடைகிறார். அந்த விபத்தை ஏற்படுத்தியது ஆதிக்கத்தைச் சேர்ந்த ஒரு நபர் என்பதால், பாதிக்கப்பட்ட தொழிலாளிக்கு நீதி கிடைப்பதில் பல தடைகள் ஏற்படுகின்றன. காவல் துறை, அரசியல் மற்றும் நீதித்துறையில் நிலவும் சாதிய மற்றும் பொருளாதாரப் பாகுபாடுகள் எப்படி ஒரு சாதாரண மனிதனைப் பாதிக்கிறது என்பதையும், நீதிமன்ற "வாய்தாசுக்களால் (தள்ளிவைப்பு) அவர் படும் அவதிகளையும் இத்திரைப்படம் யதார்த்தமாகப் பதிவு செய்துள்ளது.

படத்தின் முதல் காட்சியே ஊரின் ஒதுக்குப்புறத்தில் அம்பேத்கர் படம் வரைந்திருக்கும் சுவற்றை காட்டும் போதே, இது சாதி குறித்த படம் என சட்டென புரிந்து விடுகிறது. சலவைத் தொழில் செய்யும் சமூகத்தினர் கிராமங்களில் அம்பேத்கரை கொண்டாடுவதாக எந்த ஊரிலும் நான் பார்த்ததாக நினைவில் இல்லை என்பதால், முதல் முரணாக பட்டது. படத்தின் ஹீரோ கொங்கு பகுதியின் ஆதிக்க சாதி நபர் நடத்தும் விசைத்தறி தொழிலகத்தில் வேலை செய்கிறார். அவருடன் பணி செய்யும் நண்பர் ஆதிக்க சாதியை சேர்ந்தவன். விசைத்தறி உரிமையாளரின் மகளை காதலிக்கிறார். இருவருக்குமான காதல் காட்சிகள் படத்துடன் ஒட்டவில்லை என்பதோடு, இது வலிந்து திணிக்கப்பட்ட காட்சிகளாக தெரிகிறது. ஒரு ஏழைத் தொழிலாளிக்கு கிடைக்க வேண்டிய நீதியை இரண்டு ஆதிக்க சாதிகள் உள்ளாட்சி தேர்தலை மையமாக வைத்து உள்ளுக்குள் அரசியல் லாபம் ஒருபுறம் என்றால் சாதிய காழ்ப்புணர்வை காட்டி எப்படி காய் நகர்த்துகிறார்கள் என்பதையும், இன்சூரன்ஸ் கம்பெனிகள், கீழமை நீதிமன்ற நீதிபதிகள், வக்கீல்களுக்குள் எப்படி செட்டிங் போட்டுக் கொள்கிறார்கள் என்பதையும் அப்பட்டமாக காட்டியிருக்கிறார் இயக்குநர் மஹிவர்மன்.

கோர்ட் சீன்களை மாவட்ட நீதிமன்றங்கள் எப்படி இருக்குமோ அப்படி காட்டியிருப்பதும், அதற்கான செட்டிங் எதார்த்தமாக இருப்பது போல வடிமைத்த ஆர்ட் டைரக்டர் பாராட்டுக்குரியவர். சேலம் கொங்குப் பகுதி என்பதால் ஆணவக் கொலை அங்கு நடக்கிறது என்பதாக நிலைநிறுத்த நாசர் கேரக்டரையும், அவரது வாதத்தையும் வைத்துள்ளார்கள். கலப்பு திருமணம் நடந்தால் தான் சாதி ஒழியும் என்ற பெரியாரிய அபத்தமான கருத்தாக்கத்தை விதைக்கும் முயற்சி நடக்கிறது.

அதே நேரத்தில் பா.ரஞ்சித் போல இருவேறு சமூகங்களுக்குள் வன்மத்தை விதைக்காமல் கிராமத்தில் நடக்கும் சாதிய இகழ்வை அப்படியே காட்டியிருப்பதும், குறிப்பாக சலவைத் தொழிலாளியின் மனைவி கூலியாக ஒரு படி அதிகம் கேட்கும் போது அந்தக் கிழவி பேசும் ஒரு பேச்சு கிராமத்தில் நிலவும் சாதிய. பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமூகங்களுக்குள் சார்ந்து இருக்க வேண்டிய சூழல் இருந்தாலும் அவற்றுக்குள் இருக்கும் வர்க்க, சாதிய பேதத்தை எதார்த்தமாக காட்சிப்படுத்தியிருக்கும் இயக்குநரை பாராட்டலாம்.

அப்பாவி சலவை தொழிலாளியாக நடித்த கேடி' மு. ராமசாமி, மணி என்ற கதாபாத்திரத்தில் வரும் நபர், ஹீரோ புகழ் மகேந்திரன் ஆகியோர் மிக இயல்பாக நடித்துள்ளனர். நீதித்துறையில் நடக்கும் நேர்மையற்ற தன்மையையும், சாதி பேதத்தை இயல்பாக்கிய தன்மையையும் கண்டிக்கும் வகையில் எடுக்கப்பட்ட கதையாக இருந்தாலும் தேவையற்ற ஆணவக் கொலை, ஹீரோவின் காதல் காட்சி போன்றவை படத்திற்கு வேகத்தடையாக அமைந்து விட்டது.

சமூகப்படம் அதனால் ஈவேரா பின்னணியை காட்டியே ஆகவேண்டும் என்ற நிர்பந்தம் இல்லாமல், தான் ஏமாற்றப்படுகிறோம், நீதிமன்றத்தின் வாய்தாக்களால் அலைகழிக்கப்படுகிறோம் என்று தெரிந்தும் மன உறுதி தந்து நம்மை காப்பது அந்த தெய்வம் தான் என ஒவ்வொரு முறை கோர்ட்டுக்கு செல்லும் முன்பு கிராம தெய்வத்தை அப்புசாமி வணங்கிச் செல்லும் காட்சி இதை பதிவு செய்கிறது. சமூகத்தில் நிலவும் சாதி துவேஷத்தினால் ஏற்படும் வலியை உணரச் செய்கிறது, உணர்ச்சியை கிளப்பி வன்மத்தை ஊட்டாத படம்.

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.